20 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 20 | பாலம் 11 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JUNE 01, 2010

# அமெரிக்காவில் தமிழீழ அரசு!

## நாடுகடந்த தமிழீழ அரசின் முதல் அமர்வு

நாடுகடந்த தமிழீழ அரசின் முதலாவது அமர்வு மே 17, 2010இல் இருந்து மே 19, 2010 வரை அமெரிக்காவிலுள்ள Philadelphia இடத்திலிருக்கும் சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது. 11 நாடுகளிலிருந்து இதுவரை தெரிவு செய்யப்பட்ட நாடுகடந்த தமிழீழ அரசின் 87 உறுப்பினர்களுடன் மதியுரைக் குழுவின் உறுப்பினர்களும் இந்த அமர்வில் பங்குபற்றினர். Philadelphia இலுள்ள சுதந்திர சதுக்கத்தில் கனடா, அமெரிக்கா, களுக்கு மரியாதை வணக்கம் செலுத்துவதுடன் ஆரம்பமானது. முதலாவது அமர்வில் மதியுரைக்குழுவின் உறுப்பினரும் சர்வதேச சட்டவியல் பேராசிரியருமான Francis Boyle உம் இன அழிப்பிற்கு எதிரான தமிழர்கள் என்ற அமைப்பைச் சார்ந்த செல்வி. ஜனனி ஜனநாயகம் உம் விருந்தினர் உரையை நிகழ்த்தினார்கள். பேராசிரியர் தனது உரையில் இன அழிப்பால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தமக்கு என ஒரு சுதந்திர நாட்டை அமைக்க உரிமை உடையவர்கள் என்றார். இருவரும் தமது உரைகளில் இலங்கை அரசு நடத்திய போர்க்குற்றங்களையும் இன அழிப்பையும் சுட்டிக் காட்டினார்கள்.



அவுஸ்ரேலியா, டென்மார்க், பிரான்ஸ், சுவிற்சலாந்து மற்றும் பிரித்தானியாவில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 47 உறுப்பினர்கள் நேரடியாகப் பங்குபற்றினர். பிரித்தானியா, சுவிற்சலாந்து, சுவீடன், நோர்வே, ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் நாடுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களில் 14 உறுப்பினர்கள் லண்டனிலும் 12 உறுப்பினர்கள் ஜெனிவா விலுள்ள மாநாட்டு மண்டபங்களிலிருந்து தொலைக்காட்சியினூடாக (Video Conference) ஏனைய உறுப்பினர்கள் கணினி மூலமாகவும் இந்த அமர்வில் பங்கேற்றனர்.

இவ் அமர்வு இலங்கை அரசின் ஆயுதப்படைகளால் கொல்லப்பட்டவர்

சூடானிய மக்கள் விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளராக அமெரிக்காவில் இருக்கும் Mr. Domach Rauch தமது நாட்டு மக்களினதும் தமிழ் மக்களினதும் விடுதலைப் போராட்டத்தில் உள்ள ஒற்றுமைகள் பற்றி எடுத்துரைத்தார். அவர் பேசுகையில் நாடு கடந்த தமிழீழ அரசு ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்டது. தமிழ் மக்கள் தங்களின் சுதந்திரத்திற்காக சரியான பாதையில் செல்லத் தொடங்கியுள்ளார்கள் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது என்றார்.

அமெரிக்காவின் முன்னாள் சட்டமா அதிபரான Mr. Ramsey Clark

தொடர்ச்சி 03ஆம் பக்கம்

# தென்னாபிரிக்காவில் விழா

**கால்பந்து அணிகளின் தரவரிசைப் பட்டியலில் பிரேசில் முதலிடத்தில் உள்ளது.**

தென்னாப்பிரிக்காவில் வரும் ஜூன் 11-ம் தேதி உலகக் கோப்பை கால்பந்து போட்டிகள் தொடங்கவுள்ள நிலையில் கால்பந்து தரவரிசைப் பட்டியலை சர்வதேச கால்பந்து சம்மேளனம் புதன்கிழமை வெளியிட்டது.

இதில் 5 முறை உலகச் சாம்பியன் பட்டம் வென்ற பிரேசில் முதலிடத்தில் உள்ளது. ஐரோப்பிய சாம்பியன் ஸ்பெயின் இரண்டாம் இடம் பிடித்துள்ளது.

போர்ச்சுகல், நெதர்லாந்து நடப்பு உலகச் சாம்பியன் இத்தாலி ஆகியவை முறையே 3, 4 மற்றும் 5-வது இடத்தில் உள்ளன. ஜெர்மனி 6-வது இடத்திலும், அதற்கு அடுத்த இரு இடங்களில் ஆர்ஜெண்டினா, இங்கிலாந்து ஆகியவை உள்ளன. பிரான்ஸ் 9-வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

அமெரிக்க அணி 14-வது இடத்தில் உள்ளது. ஆஸ்திரேலியாவுக்கு 20-வது இடம் கிடைத்துள்ளது.

இந்த ஆண்டு உலகக் கோப்பைப் போட்டியை நடத்தும் தென்னாப்பிரிக்கா 83-வது இடத்தில் உள்ளது. பட்டியலில் 105-வது அணியாக தென்கொரியா இருக்கிறது. ஆனால் இந்த அணி உலகக் கோப்பையில் விளையாட தகுதி பெற்றுள்ளது.

## அர்ஜென்டினா அணி உலக கிண்ணத்தை வென்றால் நிர்வாணமாக ஓட தயார் : மாரடோனா அதிரடி

அர்ஜென்டினா அணி உலக கோப்பை வென்றால், நிர்வாணமாக ஓடத் தயார் என, பயிற்சியாளர் மாரடோனா அதிரடியாக தெரிவித் துள்ளார். கால்பந்து அரங்கில் அர்ஜென்டினா அணிக்கு என்று தனிச்சிறப்பு உண்டு. கடந்த

தொடர்ச்சி 06ம் பக்கம்

RBC Royal Bank
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee
• No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

GSF
Golden Store Fixtures
Friend for your Business
www.goldenstorefixtures.com sales@goldenstorefixtures.com Toll Free: 1 877-565-6554
நீங்கள் புதிதாக ஆரம்பிக்கும் வியாபார நிலையத்தை எங்கள் கைவண்ணத்தால் அழகுற வடிவமைத்து பொருத்துவதற்கும், உங்கள் வியாபார நிலையத்துக்குத் தேவையான பொருட்களை பெற்றுக் கொள்வதற்கும் நீங்கள் நாடவேண்டிய தமிழரின் ஒரே ஒரு ஸ்தாபனம் Golden Store Fixtures Ltd.
» Counter Top Displays » Gift Bags & Ribbons » Glass Displays » Grid Panels & Accessories » Mannequins » Pegboard & Accessories » Racks » Shopping Cart & Baskets » Showcases » Sign & Sign Holders » Slatwall & Accessories » Steel Shelving » Wood Displays » And Much More........
355 ADMIRAL BLVD. UNIT 5
MISSISSAUGA, ON, L5T 2N1
TEL: (905) 565 6555
FAX: (905) 565 8655

உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
RBC Royal Bank®
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd.
Suite #206
Scarborough, ON
M1S 2Y3
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை
• 52 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 19 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated


மக்கள் திரைப்பட மொழியை உருவாக்குவோம்
EIGHTH INTERNATIONAL
TAMIL FILM FESTIVAL
எட்டாவது சர்வதேச தமிழ் திரைப்பட விழா
JUNE
12
SAT
12:00 PM
SCARBOROUGH CIVIC CENTRE,
150 BOROUGH DR.,
McCowan / Ellesmere
தொடர்புகளுக்கு:
416.450.6833
416.804.3443
www.iafstamil.com
- digi Media -
This Ad. sponsored by A1 Fast Lube Inc.
777 Warden Ave.

# அமெரிக்காவில் தமிழீழ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

அமெரிக்காவின் ஸ்தாபகர்கள் அமெரிக்காவிற்கான முதலாவது அரசியல் அமைப்பை உருவாக்கிய இடத்தில் நாடுகடந்த தமிழீழ அரசு தனது முதலாவது அமர்வை நடத்துவது மிகவும் பொருத்தமான நிகழ்வு என்றார். அவர் மேலும் பேசுகையில் தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் இருப்பது மிகவும் அவசியம் என வலியுறுத்தினார். ஒவ்வொரு நாட்டிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு உறுப்பினரது உரையுடன் முதல் நாள் அமர்வு நிறைவுபெற்றது.

இரண்டாம் நாள் அமர்வில் மதியுரைக்குழு உறுப்பினரும் மனித உரிமைகள் சட்டவல்லுனருமான சட்டத்தரணி Mr. Karen Parker நாடுகடந்த தமிழீழ அரசின் உறுப்பினர்களுக்கு அரசியல் அமைப்பை உருவாக்கும் பிரதிநிதிகள் சபையின் (Constituent Assembly) கடமை களையும் செயற்பாடுகளையும் பற்றி எடுத்துரைத்தார்.

இதனைத் தொடர்ந்து நாடு கடந்த தமிழீழ அரசின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஒரு இடைக்கால முதன்மை நிறைவேற்றுனர் (Interim Chief Executive) ஒருவரை நாடு கடந்த தமிழீழ அரசிற்கு தெரிவு செய்தார்கள். திரு. விஸ்வநாதன் உருத்திரகுமார் (அமெரிக்கா) அவர்கள் நாடு கடந்த தமிழீழ அரசின் முதலாவது முதன்மை நிறைவேற்றுனராக தெரிவு செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து உறுப்பினர்கள் இடைக்கால நிறைவேற்றுனர் குழுவிற்கு (Interim Executive Committee) ஏழு மேலதிக உறுப்பினர்களை தெரிவு செய்தனர். அவர்கள் மகிந்தன் சிவசுப்பிரமணியம் (பிரான்ஸ்) சாம் சங்கரசிவம் (கனடா) Dr. ஜெராட் பிரான்சிஸ் (அமெரிக்கா) செல்வா செல்வானந்தன் (அவுஸ்ரேலியா) வித்தியா ஜெயசங்கர் (ஜேர்மனி) சதிதர் மகேஸ்வரன் (பிரித்தானியா) மற்றும் ஜனார்தனன் புலேந்திரன் (பிரித்தானியா) ஆவர். இடைக்கால முதன்மை நிறைவேற்றுனர், இடைக்கால நிறைவேற்றுனர் குழு உறுப்பினர்கள் தெரிவுகளைத் தொடர்ந்து நாடுகடந்த தமிழீழ அரசின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தங்களை ஒரு அரசியல் அமைப்பை உருவாக்கும் பிரதிநிதிகள் சபையாக (Constituent Assembly) மாற்றி அமைத்துக் கொண்டார்கள்.

அரசியல் அமைப்பை உருவாக்கும் பிரதிநிதிகள் சபை தங்களுக்கு ஒரு சபா-நாயகராக (Speaker of the Assembly) திரு. பொன். பாலராஜன் (கனடா) அவர்களை ஏகமனதாக தெரிவு செய்தார்கள்.

இதை தொடர்ந்து நாடுகடந்த தமிழீழ அரசின் (TGTE) அரசியலமைப்பை உருவாக்குவதற்கு ஒரு அரசியல் அமைப்புக்குழு (Constitutional Affairs Committee) அமைக்கப்பட்டது. இதைவிட பின்வரும் தேவைகளை கவனிப்பதற்கு குழுக்கள் அமைக்கப்பட்டன.



(1) கலை, கலாச்சாரம், கல்வி, சுகாதாரம் மற்றும் விளையாட்டு

(2) வர்த்தகம் (Trade and Commerce)

(3) சர்வதேச உதவி (International support for media lobbying and advocacy)

(4) இடப்பெயர்வும் மனித உரிமையும் (Internally displaced people and human Rights)

(5) மாவீரர் குடும்பம் மற்றும் போராளிகள் நலம் (Welfare of the families of martyrs and cadres)

(6) மூலவள பாதுகாப்பு (Protection of Resources)

(7) போர்கைதிகள் விடுவிப்பு (Release of prisoners of war)

(8) பொருளாதாரம் (Economic Affairs)

(9) போர் குற்ற விசாரணை (Investigation of war crimes)

(10) பாதிக்கப்பட்டோர் நலம் (Risk Groups - women, children and elderly)

மூன்றாம் நாள் அமர்வின் போது மதியுரைக்குழு உறுப்பினர் பேராசிரியர் Peter Schalk உம் கனடாவிலிருந்து நாடுகடந்த தமிழீழ அரசிற்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினருமான திரு. ஈழவேந்தனும் உரையாற்றினார்கள். நாடுகடந்த தமிழீழ அரசின் முதல் அமர்வு, இதற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்த பேராசிரியர் நடராஜா சிறீஸ்கந்தராஜா அவர்களுக்கு நன்றி தெரிவித்ததுடன் நிறைவடைந்தது.

நாடுகடந்த தமிழீழ அரசிற்கான அரசியலமைப்பு அடுத்த மூன்று மாதங்களில் உருவாக்கப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.





## வாசகர்களின் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram, 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: vlambaram.com

விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

STATE FARM INSURANCE Auto Life Fire
DISCOUNTS UP TO 30% ON CAR INSURANCE
Li Chen, Agent
http://www.licheninsurance.ca
Bus: 416-431-6800
Mano Selvam
Auto Insurance Representative
Bus:416-431-6800
தமிழில் உரையாடுவோம்
1200 Markham Road, Suite# 123, Scarborough, ON M1H 3C3
Intersection: Markham Road & Ellesmere Road
State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL



# உள்நிலை அறிவியல்

**அனைத்து நலன்களின் உச்சம்**

**அறியுங்கள்........**

சத்குரு ஜகி வாசுதேவ் அவர்கள் தன்னை உணர்ந்த ஞானியாக, யோகியாக, குருவாகத் திகழ்பவர். தொன்மை வாய்ந்த யோகக்கலையில் ஆழ்ந்த திறன் படைத்தவர். ஒவ்வொரு மனிதரும் தியானத்தன்மையை உணரும் வகையில் யோகத்தின் நுண்ணிய அம்சங்களை பரிமாறும் திறன் வாய்ந்த சில யோகிகளில் ஒருவர்.

சிந்தனையைத் தூண்டும் சத்குருவின் உரைகள், கூர்மையான அறிவுடனும் மதிநுட்பத்துடனும் விளங்குவதோடு வாழ்க்கையின் உள்ளார்ந்த இயல்புகளை ஆராயவும் வெளிப்படுத்தவும் செய்கின்றது. மனிதநலன்களை பாதிக்க்கூடிய விஷயங்களைக் களைவதற்காக உலகின் முன்னணித் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றிடும் சத்குரு அவர்கள் 2006, 2007, 2008 ஆகிய ஆண்டுகளில் நடந்த உலகப் பொருளாதார மாநாடுகளில் உரையாற்றியுள்ளார்.

## Inner Engineering Program

Date: ***August 11th to 17th***

Location: ***Toronto Botanical Garden,***
777 Lawrence Avenue East ,
(Lawrence & Leslie intersection), Toronto, ON M3C 1P2 - Canada

Free Introductory talk on August 11th at 6:30pm to 7:30pm
ALL ARE WELCOME

Session Info: ***Morning Session : 9:30 am to 12:30 pm*** OR
***Evening Session: 6:30 pm to 9:30 pm***

Website: www.ishafoundation.org / www.ishayoga.org

Email: toronto@ishafoundation.org Phone: 1-866-424 - ISHA (4742)

மனிதன் அனுபவிக்கும் அனைத்து அழுத்தங்களிலிருந்தும் அவனை விடுவிக்க தியரனத்தால் மட்டுமே முடியும். ஏனெனில் தியானம் என்பது மனம் சார்ந்தல்ல. அனைத்து அழுத்தங்களும் போராட்டங்களுமே மனம் சார்ந்தது" - சத்குரு

அனுபவியுங்கள்.......

சத்குரு அவர்களால் வடிவமைக்கப்பட்ட ஈஷா யோக வகுப்புக்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துபவையாக உள்ளன. தன்னை உணர்த்தலுக்கு இது ஓர் அரிய வாய்ப்பாக உள்ளது. இந்த வகுப்புக்கள் மிகவும் பயிற்சயளிக்கப்பட்ட ஆசிரியர்களால் நிகழ்த்ப்படுகின்றது. இந்த வகுப்பு கலந்துரையாடல்கள் தியானங்கள் மற்றும் எளிய, ஆனால் சத்மிக்க யோகப் பயிற்சிகளை உள்ளடக்கியது.

இந்த உள்நிலை அறியியல் வகுப்பில், இதற்கு முன்னர் எப்போதும் சாதாரண மக்களுக்கு கற்றுத்தரப்படாத பழமை வாய்ந்த கிரியாவான "ஷாம்பவி மஹா முத்ரா" (உள்தன்மைக்கான செயல்முறை) கற்றுத்தரப்படுகின்றது.

விரிவடையுங்கள்.......



## சத்குரு வாசுதேவ்

இதில் கற்றுத்தரப்படும் பயிற்சிகள், உடல்நலம் மற்றும் உயிர்சக்தியை நிலைநாட்டுவதுடன், மன அமைதியையும், மனத்தெளிவையும் மேம்படுத்துகின்றது. மேலும் ஒருவருக்குள் ஆழமான மகிழ்ச்சி உணர்வை ஊட்டுகின்றது. இவையனைத்தும் ஒருவரின் தன்வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதுடன் அவருள் உள்துடிப்பான உயிர்சக்தியை மீட்கவும் உதவுகின்றது.

"சத்குருவை சந்தித்தது என் வாழ்கைக்கு பொருள் தேடுவதாக இருந்தது, வாழ்க்கையும் அதன் சவால்களையும் எப்ப?டி எதிர்நோக்குவது என்னும் என் கண்ணோட்டத்தை மாற்றுவதாக இருந்து"
-ரவி வெங்கடேசன், தலைவர், லைக்ரோசாப்ட் இந்தியா

ஈஷா யோகா
இறைநிலை யோகம்.




# இடம்பெயர்ந்த மக்களுக்கு புனர்வாழ்வு, புனர்நிர்மாண, நல்லிணக்க வாழ்வா அல்லது .....?-

## இலங்கையில் இருந்து மங்களநாதன் அரவிந்தன்

இலங்கையின் 30 வருடகால ஆயுத போராட்டத்திற்கு முடிவுகட்டப்பட்டு (விட்டதாகச் சொல்லப்படுகின்றது) ஆண்டு ஒன்று ஓடிவிட்டது.

விடுதலைப்புலிகளின் பயங்கரவாதப் பிடிக்குள் சிக்கியிருந்த தமிழ் மக்களை மனிதாபிமான யுத்த நடவடிக்கையின் மூலம் மீட்டுள்ளதாகக் கூறிய அரசாங்கம் உலகில் எந்த நாட்டிலுமே நடவாத வகையில் மிகவும் விரைவாக இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்துவிட்டதாகப் பறை சாற்றி வருகின்றது.

போரினால் இடம்பெயர்ந்த கிட்டத்தட்ட மூன்று லட்சம் பேரில் சுமார் 2 லட்சத்து 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு விட்டார்கள் என்பது அரசாங்கத்தின் அறிவிப்பு. இடம்பெயர்ந்தவர்கள் தங்க வைக்கப் பட்டிருந்த வவுனியா செட்டிகுளம் மணிக்பாம் முகாமில் இன்னும் 35 ஆயிரம் பேர் மட்டுமே இருப்பதாக வடமாகாண ஆளுனர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார். ஆனாலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்து பொதுமக்கள் யுத்த நிலைமைகள் காரணமாக இடம் பெயர்ந்ததையடுத்து வெறிச்சோடிய பல பிரதேசங்கள் இன்னும் மக்கள் நடமாட்ட மின்றி வெற்றிடமாகக் காணப்படுவதாகவே ஐநா அமைப்புக்கள் கூறுகின்றன.

போர்ப்பிரதேசங்களில் இன்னும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் தொடர்ந்து கொண்டிருப்பதாக கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை இராணுவ அணி, மெக் (MAG), எவ்.எஸ்.டி (FSD), ஹலோ ட்ரஸ்ட் (HALO TRUST), சர்வாத்ரா (SARVATRA), ஹொரிஸோன் (horizon) போன்ற கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் கூறி வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கிழக்குப் பிரதேசங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தின் கிழக்குப் பகுதிகளும் இன்னும் சரியான முறையில் மீள்குடியேற்றம் செய்யப்பட வில்லை என்பதை அரசாங்கமே ஒப்புக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் இடம்பெயர்ந்தவர்களில் 2 லட்சத்து 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் எங்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பது, எப்படி என்பது தெரியவில்லை.

யுத்தம் முடிந்து ஒரு வருடமாகிவிட்டது. ஆனால், இறுதிநேர யுத்த மோதல்கள் இடம்பெற்ற பிரதேசங்களுக்குள் சர்வதேச செஞ்சிலுவைக்குழுவோ அல்லது மனிதாபி-மான பணிகளுக்கு உதவி வருகின்ற ஐநா சபையின் முக்கிய நிறுவனங்களோ இன்னும் அனுமதிக்கப்படவில்லை.

இறுதி யுத்தம் நடைபெற்ற இடங்களில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்ற மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானத்திற்கு விரோதமான நடவடிக்கைகள் என்பவற்றைக்



> “ கிளிநொச்சி மாவட்டத்தின் கிழக்குப் பிரதேசங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தின் கிழக்குப் பகுதிகளும் இன்னும் சரியான முறையில் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை என்பதை அரசாங்கமே ஒப்புக்கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் இடம்பெயர்ந்தவர்களில் 2 லட்சத்து 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் எங்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பது, எப்படி என்பது தெரியவில்லை. ”

கண்காணிக்கும் வகையில் யுத்தம் முடிந்தகையோடு, அனைத்துலக மனிதாபி-மான நிறுவனங்கள் அந்த இடங்களுக்குச் சென்று பார்வையிட வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தன. ஆயினும் அந்த வேண்டுதல்களுக்கு இன்று வரையிலும் அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. இறுதி யுத்தத்தின்போது வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்ற விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் பா.நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகிய இருவரையும் இராணுவத்தினர் சுட்டுக்கொன்றதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக் கின்றன. அத்துடன் இறுதி நாட்களில் விடுதலைப்புலிகளைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் அங்கிருந்த பொதுமக்களை வகைதொகையின்றி தாக்கிக் கொன்றதாகவும், இதனால் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அநியாய மாக உயிரிழக்க நேரிட்டதாகவும் கூறப்பட்டிருக்கின்றது. இந்தக் குற்றச்சாட்டுக் களை மறுத்துரைத்த அரசாங்கத்தின்மீது, போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற உலகளாவிய குரலுக்கும் இலங்கை அரசாங்கம் இன்று வரையிலும் மசிந்து கொடுத்ததாகத் தெரியவில்லை.

இறுதி யுத்தத்தின் போது இராணுவம் மற்றும் விடுதலைப்புலிகள் ஆகிய இருதரப்பினருமே போர்க்குற்றங்களைப் புரிந்திருக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டை அனைத்துலக மனிதாபி மான அமைப்புக்களும், மனித உரிமை அமைப்புக்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

யுத்தம் முடிவுக்கு வந்து ஒரு வருடமாகின்ற நிலையில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்ற மனிதாபிமானத்திற்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறி வித்திருக்கின்றது. இந்த ஆணைக்குழு நியமனம் என்பது ஒரு கண்துடைப்பே என்று மனித உரிமை ஆர்வலர்களும், நிறுவனங்களும் அரசாங்கத்தையும், ஜனாதிபதியையும் சாடியிருக்கின்றன.

மறுபக்கத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களின் துயரங்களைப் போக்கி எதிர்கால வாழ்க்கையில் நம்பிக்கை ஒளியை ஏற்படுத்துவதற்கான நல்லிணக்கச் செயற்பாட்டை உருவாக்க வேண்டிய பணி யில் அரசாங்கம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. போரினால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் வேறு, அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதமேந்தி இராணுவ போராட்டத்தை நடத்திய விடுதலைப்புலிகளின் நிலைமை வேறு. இதனைத் தெளிவாக அரசாங்கம் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் அந்தப்புரிதலை அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் இன்னும் காணமுடியவில்லை. யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட உடனேயே, உள்ளூராட்சி சபைகளுக்கான (வவுனியா நகரசபை மற்றும் யாழ்ப்பாணம் மாநகரசபை) தேர்தலை நடத்தியதுடன், ஜனாதிபதி தேர்தலையும், அதனைத் தொடர்ந்து பொதுத் தேர்தலையும் உரிய காலத்திற்கு முன்பாகவே அரசாங்கம் நடத்தி முடித்திருக்கின்றது.

யுத்தத்தினால் சிந்தப்பட்ட இரத்தம் காய்வதற்கு முன்பாக, யுத்தத்தின் கோரப் பிடிக்குள் சிக்கி சாவின் விளிம்பிற்கே சென்று திரும்பியுள்ள பொதுமக்களின் மன உளைச்சல்கள், மனவடுக்கள் பசுமையாக இருக்கின்ற நிலையிலேயே தேர்தல்களில் அவர்கள் வாக்களிக்க வேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

அதுமட்டுமன்றி, இந்த மே மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதிவரையில-

தொடர்ச்சி 12ம் பக்கம்



# தென்னாபிரிக்காவில் விழா

## விளையாட்டுத் தகவல்கள் 283

01ஆம் பக்கத்தொடர்ச்சி

1978, 1986ல் உலக கோப்பை வென்று அசத்தியது. இதில் 1986ல் மாரடோனோ தலைமையில் சாதித்துக் காட்டியது.

### கடவுளின் கை

இத்தொடரின் காலிறுதியில் இங்கிலாந்துக்கு எதிராக இவர் அடித்த கோல் பெரும் சர்ச்சையை கிளப்பியது. நல்ல உயரத்தில் பறந்த இவர், கண் இமைக்கும் நேரத்தில் தனது இடது கையால் பந்தை கோல் போஸ்டுக்குள் தள்ளினார். கால்பந்து விதிமுறைப்படி கையை பயன்படுத்துவது மாபெரும் தவறு. இதனை கவனிக்க தவறிய நடுவர், தலையால் முட்டி தான் கோல் அடிக்கப்பட்டதாக நினைக்க, அர்ஜென்டினா வென்றது. பின் தவறை மறைத்த மாரடோனா,"அது கடவுளின் கை,"என்று கூறி சமாளித்தார்.

### பயிற்சியாளர் பணியில்

இதற்கு பின் ஊக்க மருந்து சர்ச்சையில் சிக்கிய மாரடோனா, அதிலிருந்து ஒருவழியாக மீண்டார். தற்போது 49 வயதான இவர், அர்ஜென்டினா அணியின் தலைமை பயிற்சியாளராக உள்ளார். இம்முறை தென் ஆப்ரிக்காவில் நடக்க உள்ள உலக கோப்பை தொடரில் (வரும் ஜூன்-11- ஜுலை 11) இவரது பயற்சி கை கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலக கோப்பை தொடருக்கு தட்டுத் தடுமாறி தகுதி பெற்ற அர்ஜென்டினா அணி, 'பி' பிரிவில் இடம் பெற்றுள்ளது. இப்பிரிவில் நைஜீரியா, கிரீஸ், தென் கொரியா ஆகிய பலம்குன்றிய அணிகள் இருப்பதால், அதிகம் கவலைப்படத் தேவையில்லை.

### வலுவான அணி

அர்ஜென்டினா அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக 22 வயதான லயோனல் மெஸ்சி திகழ்கிறார். மிகச் சிறந்த முன்கள வீரரான இவரை, "அடுத்த மாரடோனா' என வர்ணிக்கின்றனர். "பிபா' சிறந்த வீரர் விருது வென்ற இவர் சிறப்பாக செயல்படும் பட்சத்தில், எளிதில் கோப்பை கைப்பற்றலாம். தவிர, டெவேஸ், கொன்சாலோ ஹிகியுன், கேப்டன் ஜேவியர் மாஸ்செரானோ, கோல்கீப்பர் செர்ஜியோ ரொமேரா போன்ற நட்சத்திர வீரர்கள் இருப்பதால், வலுவான அணியாக காட்சி அளிக்கிறது.

உலக கோப்பை தொடருக்கு முன் நடந்த கடைசி பயிற்சி போட்டியில் அர்ஜென்டினா அணி, கனடாவை 5-0 என்ற கோல் கணக்கில் சுலபமாக வீழ்த்தியது. இதன் மூலம் 24 ஆண்டுகளுக்கு பின், மூன்றாவது முறையாக கோப்பை கைப்பற்றும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

இது குறித்து மாரடோனா கூறுகையில், "அர்ஜென்டினா அணி இம்முறை கோப்பை வென்றால், தலைநகர் பியூனஸ் ஏர்சின் மையப்பகுதியில் அமைந்துள்ள நினைவு தூணை சுற்றி நிர்வாணமாக ஓடுவேன். உலக கோப்பை போட்டிக்கு முன் காயம் எதுவும் ஏற்படக் கூடாது என்பதற்காகவே கனடாவுக்கு எதிரான போட்டியில் மெஸ்சிக்கு வாய்ப்பு அளிக்கவில்லை,"என்றார்.




> “ கால்பந்து அணிகளின் தரவரிசைப் பட்டியலில் பிரேசில் முதலிடத்தில் உள்ளது. ”

### வீண் சர்ச்சை

மாரடோனாவின் இந்த கருத்து ரசிகர்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. கோப்பை வெல்லும் என்ற மகிழ்ச்சியில் நிர்வாணமாக ஓட தயார் என்று சொன்னாரா அல்லது கோப்பை வெல்லாது என்ற சந்தேகத்தில் அப்படி துணிச்சலாக சொன்னாரா என்ற சர்ச்சை எழுந்துள்ளது. இதனால், உலக கோப்பை தொடர் துவங்குவதற்கு முன்பாகவே வீண் பிரச்னையில் சிக்கிக் கொண்டுள்ளார்.

### உலகக் கிண்ண காலப்பந்தாட்டம் : அர்ஜெண்டினா அணி அறிவிப்பு

தென் ஆப்ரிக்காவில் அடுத்த மாதம் 12ஆம் தேதி துவங்கவுள்ள உலகக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டியில் பங்கேற்கும் அர்ஜெண்டினா அணியை அதன் பயிற்சியாளராரும் உலக கால்பந்து வரலாறு கண்ட மிகச் சிறந்த வீரர்களில் ஒருவருமான டிகோ மரடோனா அறிவித்துள்ளார். அர்ஜெண்டினா தலைநகர் பியோனஸ் அயர்ஸில் அணியில் இடம் பெற்றிருப்பவர்களின் பட்டியலை மரடோனா வெளியிட்டார்.

பார்சிலோனா அணிக்கு ஆடிவரும் லயனல் மெஸ்ஸி, மான்செஸ்டர் சிட்டி வீரர் கார்லோஸ் டிவெஸ், கொன்சாலோ ஹிகுவாய்ன் ஆகிய முன் கள வீரர்கள் அணியில் இடம் பெற்றுள்ளனர்.

அர்ஜெண்டினா அணிக்காக ஒரே ஒரு சர்வதேச போட்டியில் மட்டுமே விளையாடியுள்ள நடுக்கள ஆட்டக்காரர் ஏரியல் கார்ஸ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. மற்றபடி, அணித் தேர்வு எதிர்பார்த்த அளவிலேயே இருந்தது. 1978, 86ஆம் ஆண்டுகளில் உலக கோப்பையை வென்ற அர்ஜெண்டினா அணி, நைஜீரியா, கிரீஸ், தென் கொரியா ஆகிய அணிகளுடன் பி பிரிவில் இடம் பெற்றுள்ளது. திங்கட்கிழமை பியோனஸ் அயர்ஸில் நடைபெறவுள்ள பயிற்சிப் போட்டியில் கனடா அணியுடன் அர்ஜெண்டினா அணி மோதுகிறது.

### உலக கிண்ண கால்பந்து : செக்குடியரசிடம் அமெரிக்கா தோல்வி

உலக கோப்பை கால்பந்து பயிற்சி ஆட்டத்தில் செக்குடியரசிடம் அமெரிக்கா தோல்வி அடைந்தது. உலக கோப்பை கால்பந்து போட்டி தென்ஆப்பிரிக்காவில் அடுத்த மாதம் 11-ந்தேதி தொடங்குகிறது. இதையொட்டி இதில் பங்குபெறும் அணிகள் பயிற்சி ஆட்டங்கள் ஈடுபட்டு வருகின்றன. அமெரிக்கா மற்றும் செக் குடியரசு பங்கேற்ற பயிற்சி ஆட்டம் அமெரிக்காவில் உள்ள ஹார்ட்போர்டு நகரில் நடந்தது. இதில் செக்குடியரசு அணி 4 கோல்கள் அடித்தன. அமெரிக்க 2 கோல் மட்டுமே போட்டது. இதனால் செக்குடியரசு 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அமெரிக்காவுக்கு அதிர்ச்சியை அளித்தது.

நைஜீரியா - சவுதி அரேபியா இடையே நடந்த பயிற்சி ஆட்டத்தில் இரு அணிகளுமே கோல் எதுவும் அடிக்காமல் போட்டி சமநிலையில் முடிந்தது. கிரீஸ் - வடகொரியா இடையே மற்றொரு பயிற்சி போட்டி நடந்தது. இதில் இரு அணிகளும் தலா 2 கோல்கள் அடித்தன. போட்டி சமநிலை ஆனது.

### டேவிட் வில்லா பார்சிலோனா கழகத்தில் இணைவு

வெலன்சியா கால்பந்தாட்டக் கழகத்தின் முன்னணி வீரர் டேவிட் வில்லா பார்சிலோனா கழகத்தில் இணைந்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த டேவிட் வில்லாவை பார்சிலோனா கழகம் 34.2 மில்லியன் ஸ்ரெலிங் பவுண்கைளைக் கொடுத்து பரிமாற்றம் செய்துள்ளது. 28 வயதான வில்லா 2008ம் ஆண்டு யூரோ கிண்ணப் போட்டிகளின் போது அதிகூடிய கோல்களைப் போட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

டேவிட் வில்லாவை அணியில் இணைத்துக் கொள்வதற்காக மான்செஸ்டர் யுனைடட் மற்றும் செல்ஸியா ஆகிய கழகங்களும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. டேவிட் வில்லா எதிர்வரும் ஜுன் மாதம் நடைபெறவுள்ள உலகக் கிண்ண போட்டியில் ஸ்பெயின் அணியைப் பிரதிநிதித்துவப்படுத்த உள்ளார்.

### இலங்கையிடம் வீழ்ந்தது நியூசிலாந்து டிராவில் முடிந்தது தொடர்

அமெரிக்காவின் லாடர்ஹில்லில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இரண்டாவது டி20 ஆட்டத்தில் இலங்கை 7 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்தை வென்றது. முதலில் ஆடிய நியூசிலாந்து அணி 17.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 81 ரன்கள் எடுத்தது. பின்னர் விளையாடிய இலங்கை அணி 15.3 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 86 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது.

முதல் ஆட்டத்தைப்போல், இரண்டாவது ஆட்டத்திலும் டாஸ் வென்ற நியூசிலாந்து கேப்டன், வழக்கம்போல் பேட்டிங்கை தேர்வு செய்தார். பிரண்டன் மெக்குலமும், ரெட்மான்டும் துவக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கினர். நியூசிலாந்து அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

ரெட்மான்டு 1 ரன்னில் குலசேகராவின் பந்தில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார். வழக்கமாக அதிரடி காட்டும் மெக்குலமும் 1 ரன்னில் குலசேகராவின் பந்தில் ஸ்டம்பை பறிகொடுத்தார். அதிரடியை ஆவலோடு எதிர்நோக்கியிருந்த ரசிகர்களை மெக்குலம் ஏமாற்றினார்.

இதையடுத்து களமிறங்கிய டெய்லர் 5 ரன்களிலும், நிக்கோல் ரன் ஏதுமின்றியும், ஹாப்கின்ஸ் 1 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். இதனால் 13 ரன்களுக்கு 5 விக்கெட்டுகள் என்ற பரிதாப நிலைக்கு நியூசிலாந்து அணி தள்ளப்பட்டது. இதன்பிறகு களம்கண்ட கேப்டன் வெட்டோரி-நாதன் மெக்குலம் ஜோடி விக்கெட் விழாமல் ஓரளவு விளையாடியது. அணியின் ஸ்கோர் 58 ரன்களை எட்டியபோது இந்தஜோடி பிரிந்தது. 24 பந்துகளில் 2 பவுண்டரிகள் உள்பட 27 ரன்கள் எடுத்து வெட்டோரி ஆட்டமிழந்தார். அதன்பிறகு வந்த வீரர்கள் ஒற்றை இலக்க ரன்களில் ஆட்டமிழந்து வெளியேறினர்.

இறுதியில் நியூசிலாந்து 17.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 81 ரன்கள் எடுத்தது. அந்த அணியின் நாதன் மெக்குலம் 36 ரன்கள் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

82 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணிக்கு ஜெயவர்த்தனே, தில்ஷன் ஆகியோர் துவக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கினர். கடந்த ஆட்டத்தில் ஜொலிக்காத ஜெயவர்த்தனே இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே அடித்து விளையாடினார். 12 பந்துகளை சந்தித்த அவர், 1 சிக்ஸர், 2 பவுண்டரிகளுடன் 17 ரன்கள் எடுத்து ஜேக்கப் ஓரம் பந்தில் ஆட்டமிழந்தார். அவரைத்தொடர்ந்து பெரேரா தில்ஷனுடன் ஜோடி சேர்ந்தார்.

தில்ஷன் வழக்கத்துக்கு மாறாக நிதான ஆட்டத்தைத் தொடர்ந்தார். பெரேரா 1 சிக்ஸர், 2 பவுண்டரிகளுடன் 24 ரன்கள் எடுத்திருந்தபோது ஆட்டமிழந்தார்.



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# கனடிய ஆதனத்தில் உலக பொருளாதாரம்

வழக்கம்போலவே, இப்பொழுதும் ஒரு வீட்டை வாங்குவதற்கு பலர் போட்டி போடுவதைக் காணக்கூடியதாக உள்ளது. ஒரு மாதம் இரண்டு மாதங்களிற்கு முன்பாக ஒரு மனை, வீடு சந்தைக்கு வந்ததும் பலர் போட்டி போடுவார்கள். இப்பொழுது அந்த நிலைமை இல்லை. ஆனாலும், விற்பனைச் சந்தைக்கு கொண்டுவரப்படும் வீடு, மனை சந்தையின் நிலைமைக்கு ஏற்ப நியாயமான விலையிலும், வாங்குபவர்களை ஈர்க்கக் கூடிய வகையிலும் உள்ள வீடுகளை வாங்குவதற்கு பலர் போட்டி போடுகின்றார்கள். இதனால் கேட்கும் விலையை விட அந்த வீடு அதிகமான விலைக்கு விற்பதனையும் காணக்கூடியதாக உள்ளது.

பலவிதமான எதிர்மறைக் கருத்துகளை ஆதன விற்பனை சம்பந்தமாக ஊடகங் களினூடாக அறியக்கூடியதாக உள்ளது. இதனால் வீடு, மனை வாங்க இருப்பவர்கள், தங்களிற்கேற்ப காலம் எடுத்து சிந்தித்து ஆறுதலான முடிவுகள் எடுப்பதாலும், பொதுவாக இளவேனிற் காலத்தில் அதிகமான வீடுகள் சந்தைக்கு வருவதாலும் வாங்குபவர்களிற்கு போதியளவு வீடுகள் விற்பனைக்கு உள்ளன. இதனால் போட்டிகள் குறைவாகவே உள்ளது.

வட்டிவீதம் அதிகரிக்கலாம் என்ற கிலேசம் பொதுவாகக் காணப்படுகின்றது. இதுவும் உண்மையே. இன்றைய காலகட்டத்தில் வட்டிவீதம் ஒரு திசையில் மட்டுமே போகலாம். அதாவது அதிகரிக்கலாம். ஏனெனில் இப்பொழுது காணப்படும் மத்திய வங்கியின் வட்டிவீதம் சரித்திரத்திலேயே மிகக்குறைவு, இதனைவிட குறைக்க முடியாத நிலைமை. எனவே அதிகரிப்பதே ஒரு திசை. எப்பொழுது எவ்வளவு என்பதே இன்றைய கேள்வி.

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 320**

2007ஆம் ஆண்டில் அமெரிக்காவில் ஆரம்பித்த பொருளாதார இறுக்கம் (Recession) வீடு, மனை விற்பனையில் இதுவரை நல்ல செய்திகளைத் தந்தமாதிரி இல்லை. நிலைமை ஸ்திரமற்று காணப்படுகின்றது. இவ்வாறான நிலைமை கனடாவில் இல்லை. எனினும், இன்றைய காலகட்டத்தில் உலக பொருளாதாரம் ஒவ்வொரு நாடுகளுடனும் பின்னிப் பிணைந்தே காணப்படுகின்றது.

முன்னைய காலங்களில் ஒரு குறிப்பிட்ட நாட்டின் பொருளாதார மாற்றத்தை, நேரடியாக உடனடி தாக்கத்தை மற்றைய நாடுகளில் காணுவது கஸ்டம். மேலும் வேறு நாடுகளில் ஏற்படும் தாக்கங்கள் அமெரிக்காவில் தாக்கத்தை ஏற்படுத்துவது குறைவு. இதனால் பொருளாதார ஏற்ற இறக்கத்திற்கு நாடுகளிற்கிடையே தொடர்புள்ளது. இன்று ஐரோப்பிய நாடுகளிலும், ஆசிய நாடுகளிலும் ஏற்படும் பொருளாதார ஏற்றங்கள் இறக்கங்கள் அமெரிக்காவிலும் பாதிப்பை ஏற்படுத்து கின்றது. அமெரிக்க பொருளாதாரம் ஏனைய உலக நாடுகளின் பொருளாதாரத்திலும் தங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக அண்மையில் கிறீஸ் நாட்டில் (Greece) ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி உலக நாட்டையும் உலுக்கியது. இவ்வாறான காரணங்களும் அமெரிக்க பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தத்தான் செய்கின்றது. ஐரோப்பிய பொருளாதாரத்தில் 4வது பெரிய நாடாக ஸ்பெயினில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி அமெரிக்காவிலும் பாதிப்பை ஏற்படுத்தலாம். இதன் ஓரளவு பாதிப்பை கனடிய பொருளாதாரத்திலும் காணக் கூடியதாக உள்ளது.

இதனால் கனடிய வீட்டு விலையிலும் இறக்கம் ஏற்படலாம் என்ற மனப்பான்மை காணப்படுகின்றது. கனடாவில் இவ் வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் ஆதன விலை 10.3% இனால் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது அதிகரித் துள்ளது. ரொறொன்ரோவின் அதிகரிப்பு 13.2% ஆகக் காணப்படுகின்றது. எனினும் அண்மையில் TD Bank, Royal Bank இன் அறிக்கையின்படி இந்த வருட இறுதியிலும், அடுத்த வருடத்திலும் வீட்டின் விலையில் இறக்கம் ஏற்படலாம் என்று தெரிய வருகின்றது. இந்த இறக்கம் அல்லது பாதிப்பு எவ்வாறு இருக்கலாம் என்பது எதிர்காலத்தில் நிகழ இருக்கும் பொருளாதார மாற்றங்களைப் பொறுத்தே தீர்மானிக்கப்படலாம்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்


**HomeLife GTA Realty Inc., Brokerage***

Independently owned & operated

"கனவு உங்களுடையது
பொறுப்பு எங்களுடையது"



1711 McCowan Rd. #206, Toronto - Tel.: **416.321.6969**
145 Traders Blvd # 29, Mississauga - Tel.: **905.712.2666**

**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)

**Business For Sale**
**$64,900+stock**




- HWY 401 & WESTNEY - Ajax
- Best location/ Main road exposure
- Over $7,000 weekly sales
- Lotto Commission over $1500 monthly
- Asking only $69,900
- Very reasonable rent.
- Easily converted into Grocery / Convenience store.
- Don't miss the chance

**House for Sale**
**Aurora**



- Bayview/Springfarm
- Detached 2-Storey
- 4 Bedrooms
- Finished Walkout Basement
- 5 washrooms
- double garage
- 6 years old house
- ceramic floor
- hardwood floor
- granite
- Stainless Fridge, Stove, Dishwasher, Exhaust Fan, Gas Stove, Fridge, Washer, Dryer, All Elfs,Chandelier, California Shutters, Garage Door Opener, Granite, Hardwood Floor, Central Air,Hwt(R).

**House For Sale**
**$288,888**



- Dixie & Finch
- 2 storey detached house
- 3 + 1 bedrooms
- 2 washrooms
- All Elfs, Fridge, Stove, Washer, Dryer, Central Air, Garage Door Opener & Remote, Beautifully Decorated With Laminate Flooring & Broadloom, Finished Basement With Wood Burning Fireplace, Renovated Washroom.

**Condo. For Sale**
**$159,000**



- Finch/Warden
- 2 +1 bedrooms
- 2 Washrooms
- Fridge, Stove, Washer, Dryer, All Elfs, Cac, Parking (Tandem = 2 Cars May Be Parked)
- Security System
- Recreation Room
- Exercise Room

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
**Cell: 613 850 9931**

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

**Relocation Service**
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

**Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555**

# கனடாவின் கதை - 22

## கூட்டாட்சியின் பிதாக்கள்

கனேடியக் கூட்டாட்சி ஏற்படுத்துவதற்கு முன் 1864 இல் நடைபெற்ற சாளற்ரவுண், கியூபெக் மாநாடுகளில் பங்குபற்றியோர் கூட்டாட்சியின் பிதாக்கள் எனப்படுகின்றனர். ஆரம்பத்தில் 36பேர் பங்குபற்றினர். சாளற்ரவுண் மாநாட்டின் பதிவாளராகப் பணியாற்றிய ஹியூவிற் பேணாட் என்பவர் சிலரால் கூட்டாட்சியின் பிதாவாகக் கருதப்படுகிறார். 1867 க்குப் பின் பிற மாகாணங்களையும் கூட்டாட்சியில் இணைய வைத்த சிலரும் பிதாக்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களுள் ஓமோ டி கொஸ்மோசும் ஜோயி ஸ்மோல்வூட்டும் அடங்குவர். ஜோயி, நியூபவுண்லாந்து கூட்டாட்சியில் இணைவதற்கு உதவிபுரிந்தார். இவரே கடைசிப் பிதா எனக் கூறப்படுகிறது.

**பின்வரும் பட்டியல் பங்குபற்றியோர் தகவலைத் தருகிறது.**

| பங்குபற்றியவர் | மாகாணம் | சாளற்ரவுண் | கியூபெக் | லண்டன் |
|---|---|---|---|---|
| சேர் அடம் ஜோர்ஜ் ஆக்கிபோல்ட் | நோவா ஸ்கோசியா | √ | √ | √ |
| சேர் ஜோர்ஜ் பிறவுண் | ஒன்ராரியோ | √ | √ | x |
| சேர் அலெஸ்சாண்டர் கம்பெல் | ஒன்ராரியோ | √ | √ | x |
| சேர் பிறடெறிக் காட்டர் | நியூபவுண்லாண்ட் | x | √ | x |
| சேர் ஜோர்ஜ் எற்றியன் காட்டியர் | கியூபெக் | √ | √ | √ |
| சேர் எட்வேட் பரண் சாண்ட்லர் | நியூபிறவுண்ஸ்விக் | √ | √ | x |
| சேர் ஜின் சாள்ஸ் சாப்பே | கியூபெக் | x | √ | x |
| சேர் ஜேம்ஸ் கோபேண் | ஒன்ராரியோ | x | √ | x |
| ஜோர்ஜ் கோல்ஸ் | பிறிவ்ஸ் எட்வேட் தீவு | √ | √ | x |
| றொபேட் பி.டிக்கி | நொவாஸ்ஸ்கோஷியா | √ | √ | x |
| சாள்ஸ் பிஷர் | நியூபிறவுண்ஸ்விக் | x | √ | √ |
| சேர் அலெக்சாண்டர் ரிலொக் கோல்ற் | கியூபெக் | √ | √ | √ |
| சேர் ஜோன் ஹமில்ரன் கிறே | பி.எ.தீவு | √ | √ | x |
| சேர் ஜோன் ஹமில்ரன் கிறே | நியூபிறவுண்ஸ்விக் | √ | √ | x |
| சேர் தொமஸ் ஹீத் ஹவிலண்ட் | பி.எ.தீவு | x | √ | x |
| வில்லியம் அலெக்சாண்டர் ஹென்றி | நோ.ஸ்கோஷியா | √ | √ | √ |
| சேர்வில்லியம் பி.ஹவுலண்ட் | ஒன்ராரியோ | x | x | √ |
| ஜோன் மேர்சர் ஜோன்சன் | நியூ பிறண்ஸ்விக் | √ | √ | √ |
| சேர் ஹெக்டர் லூயி லாங்சிவின் | கியூபெக் | √ | √ | √ |
| அன்ட்று ஆ மக்டொனால்ட் | பி.எ.தீவு | √ | √ | x |
| சேர் ஜோன் ஏ. மக்டொனால்ட் | ஒன்ராரியோ | √ | √ | √ |
| ஜொனதல் மக்கலி | நோவாஸ்கோசியா | √ | √ | √ |
| வில்லியம் மக்டுகல் | ஒன்ராரியோ | √ | √ | √ |
| தொமஸ் டிஆர்சி மக்கீ | கியூபெக் | √ | √ | x |
| பீற்றர் மிச்செல் | நியூபிறவுண்ஸ்விக் | x | √ | √ |
| சேர் ஒலிவர் மொவாற் | ஒன்ராரியோ | x | √ | x |
| எட்வேட் பாமர் | பி.எ.தீவு | √ | √ | x |
| வில்லியம் ஹென்றி போப் | பி.எ.தீவு | √ | √ | x |
| குஜான் வில்லியம் றிச்சி | நோவாஸ்கோசியா | x | x | √ |
| சேர் அம்புறோஸ் ஷே | நியூபவுண்லாண்ட் | x | √ | x |
| வில்லியம் ஸ்ரீவ்ஸ் | நியூபிறவுண்ஸ்விக் | √ | √ | x |
| சேர் எற்றியன் பா. ரக்கே | கியூபெக் | x | √ | x |
| சேர் சாமுவேல் லியனாட்ரிலி | நியூபிறண்ஸ்விக் | √ | √ | √ |
| சேர் சாள்ஸ் ரப்பர் | நோவாஸ்கோசியா | √ | √ | √ |
| எட்வேட் விலன் | பி.எ.தீவு | x | √ | x |
| றொபேட்டகன் வில்மற் | நியூபிறண்ஸ்விக் | x | x | √ |

### கூட்டாட்சியில் இணைதல்

1867 இணைதல் சட்டத்தின் ஆரம்ப காலத்தில், ஜுலை 15, 1870 ஆம் ஆண்டு நாடாளுமன்றச் சட்டத்தின்படி மணிற்றோபா நிறுவப்பட்டது. இது தற்போதைய பரப்பளவைக் காட்டிலும் மிகச் சிறியதாகவே இருந்தது. பிரிட்டிஷ் கொலம்பியா ஜுலை 20, 1871 இல் ஒரு நாடாளுமன்றச் சட்டத்தின்படி கூட்டாட்சியில் இணைந்தது. அவ்வேளை சேர் ஜோன் A மக்டோனால்ட் 10 ஆண்டுகளுக்குள் ஒரு புகையிரதப்பாதையை நிறுவித் தருவதாக வாக்களித்தார். ஜுலை 01, 1873இல் பிறின்ஸ் எட்வேட் தீவு இணைந்து கொண்டது. அப்போது ஒரு படகு சேவை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற உடன்படிக்கை கைசாத்திடப்பட்டது. இவ்வுடன்படிக்கை 1997 இல் கூட்டாட்சி பாலம் கட்டியபின் இரத்து செய்யப்பட்டது. அல்பேட்டாவும், சஸ்கச்சுவானும் செப்ரெம்பர் 01, 1905 நாடாளுமன்றச் சட்டத்தின்படி இணைந்தன. இறுதியாக நியூபவுண்லாந்து மார்ச் 31, 1949இல் இணைந்து கொண்டது. அப்போது ஒரு படகுச் சேவை ஆரம்பிக்கப்படும் என உறுதி செய்யப்பட்டது.



| வரிசை | திகதி | பெயர் |
|---|---|---|
| 1. | ஜுலை 01.1867 | ஒன்ராரியோ, கியூபெக், நோவாஸ்கோசியா, நியூபிறண்ஸ்விக் |
| 5. | ஜுலை 15.1870 | மனிற்றோபா, வடமேற்கு ஆட்புலம் |
| 7. | ஜுலை 20.1871 | பிரிட்டிஷ் கொலம்பியா. |
| 8. | ஜுலை 01.1873 | பிறின்ஸ் எட்வேட் தீவு |
| 9. | ஜுன் 13.1898 | யுக்கோன். |
| 10. | செப்ரெம்பர் 01.1905 | சஸ்கச்சுவான், அல்பேட்டா. |
| 12. | மார்ச் 31.1949 | நியூபவுண்லாண்ட் (2001 இல் நியூ பவுண் லாண்ட், லப்றடோர் எனப்பட்டது.) |
| 13. | ஏப்ரல்01.1999 | நுனாவுட் |

1869 இல் ஹட்சன் பே கம்பனியிடமிருந்து றூபேட் நிலப்பரப்பும், முடிக்குரிய பகுதியாகிய வடமேற்கு ஆட்புலமும் (Territory) யும் பெறப்பட்டன. பின்னர் இவை ஒன்றாக இணைக்கப்பட்டன. 1880 இல் பிரித்தானியா வடஅமெரிக்காவின் ஆட்டிக் தீவுகள் யாவற்றையும் எல்ஸ்மெயர் உட்பட, கனடாவுக்குக் கொடுத்தது. இந்தப் பரந்த பிரதேசம் மூன்று மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டன. அவை மனிற்றோபா சஸ்கச்சுவான், அல்பேட்டா ஆகியன. மேலும் வடக்கிலிருந்த பகுதிகள் இரு ஆட்புலங்களாக அதாவது யுக்கோன், வடமேற்கு ஆட்புலங்களாகப் பிரிக்கப்பட்டன. எஞ்சிய சில பகுதிகள் கியூபெக்,




**- துறையூரான் -**

ஒன்ராரியோ, மனிற்றோபா ஆகியவற்றுடன் சேர்க்கப்பட்டன. பின்னர் ஏப்ரல் 01, 1999 இல் வடமேற்கு ஆட்புலத்திலிருந்து நுனாவுட் எனும் மூன்றாவது ஆட்புலம் உருவாக்கப்பட்டது.

கனடாவின் மாகாணங்களும், ஆட்புலங்களும் அவைகள் கூட்டாட்சியில் இணைந்த திகதியில் பிரகாரம் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. உத்தியோக நிகழ்வுகளின் போது மாகாணப்பிரதிநிதிகளுக்கு இவ்வரிசைப் பிரகாரம் முன்னுரிமை வழங்கப்படும். மேலும் ஆட்புலங்களைக் காட்டிலும் மாகாணங்களுக்கே முன்னுரிமை உண்டு.

**பிற்குறிப்பு**

கடந்த 21 வாரங்களாகக் கனடாவின் கதையை விளம்பரம் பத்திரிகையில் பலர் வாசித்திருப்பீர்கள். புலம்பெயர் தமிழர்களுக்கு அன்பும் ஆதரவும் காட்டி வரவேற்ற இந்நாட்டுக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டவர்கள். நல்ல குடிமக்களாகப் பேரோடும் புகழோடும் வாழவேண்டும். சிலர் தேவையற்ற விடயங்களில் ஈடுபட்டு நமது இனத்தின் பெயரைக் கெடுப்பது மிகவும் வேதனைக்குரியது. இளஞ் சந்ததியினர் சிலர் தமிழர்கள் எனக் கூறுவதற்குத் தயங்குகிறார்கள். யாவரையும் பயங்கரவாதிகளாகப் பிற சமூகத்தினர் பார்க்கும் ஒரு நிலை உருவாகியிருப்பது நல்லதல்ல. புகுந்த இடத்தில் புதுமைகள் செய்வோம். தமிழன் பெயரைத் தரணியில் நிலை நாட்டுவோம்.

*நன்றி. (1ஆம் பாகம் முற்றும்)*

**யாழ் இந்துக் கல்லூரி வருடாந்த இராப்போசன விருந்து**

யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த இராப்போசன விருந்து ஜுன் மாதம் 5ந் திகதி சனிக்கிழமை The Princess Banquet Hall, 3330 Pharmacy Avenue, Scarborough (Pharmacy & McNicoll) இல் நடைபெற உள்ளது. பழைய மாணவர் /ஆசிரியர்/ நலன் விரும்பிகள் அனைவரையும், தத்தம் குடும்பத்தினருடன், முன்கூட்டியே அனுமதிச் சீட்டினைப் பெற்றுக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்பு: சிறீதரன் 416-953-3297, மோகன் 416-871-8534
தயாநிதி 416-421-6469

# வாழ்கை கவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...




## Elaguppllai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**

### Kennedy/Eglinton



**$211,800**
Condo Apt, Bed rooms 2+1, Washrooms 1, 24 Hr Security. Ensuite Laundry. Walk To Ttc Kennedy Station And Go Station. Shops

### Meadowvale/Sheppard



**$284,900**
Townhouse 2 Storey. Bed rooms 3, Washrooms 2 Less Than 5 Yrs New . Mins To Hwy 401, Toronto Zoo And All Amenities

### Markham/Lawrence



**$319,900**
Detached Bungalow Bed rooms 3+1, Washroom 2 All Brick Bungalow, 3 +1 Bedrooms. Finished Basement With 2nd Kitchen.

### Brimley / Denison



**$369,000**
Link 2 story, Bed rooms 3, Washrooms 3, 1600 Sq Ft, Finished Basement With 3Pc Bath, Possible Separate Entrance; 4 Car Parking

### 14th Ave/Riverwalk



**$389,900**
Townhouse 2 Story Bedrooms 3, Washrooms 3, 3Yrs Old Home, Close To Shopping, Schools, Parks And Much More!

### Mccowan/Major Mackenzie



**$398,000**
Link 2 Story, Bedrooms 3, Wasroom 3 Great School Zone. Hardwood Floors On Main With Matching Oak Staircase

### Markham/14th



**$399,900**
Link 2 Story, Bed rooms 3 Washromss 3, Beautiful Family Home In A Excellent Location, Steps To Bus, Costco,Canadian Tire

### 9th Line & 19



**$419,000**
Detached 2 Story, Bed rooms 3 Washrooms 3 3 Years New, Double Garage Detach Home,Close To Shopping, Park, Transits, School,

### 9th Line/Castlemore



**$429,000**
Detached 2 Story, Bed rooms 4, Washrooms 3 9 Ft. Ceilings And Extra 4th Bedroom On M/F; Fully Fenced Yard

### Middlefield/Denison



**$445,000**
Link 2 story, Bed rooms 4 Washrooms 3, Fenced Yard, Enclosed Front Porch & Side Door Garage. Close To Schools, Shopping And Trans-

### 9th Line & Hoover Park Road



**$453,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, Less Than 1 Yr! All Brick Detached Home Over 2000Sq Ft. Double Car Garage

### Mccowan/Highglen



**$455, 000**
Link 2 Story, Bed rooms 4+1, Washrooms 4 Brand New Bsmt Apt With Sep Ent, Upgraded Baseboards, Walk To School.

### Steeles Ave / Staines



**$463,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3,Located In High Demand Area, Steps To T.T.C., Schools, Shops, Parks Double Door Entry

### Bur Oak/Alfred Paterson



**$489,000**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3,Bright & Clean Home,Close To Mount Joy Go Station,School,Park And Other Amenities,

### 14th Ave/9th Line



**$529,000**
Detached 2 Story, Bedrooms 5, Washroom 3 A Modern Kitchen **Hardwood Floors Thru-Out The House,Walk To Longo's Supermarket, Shops

### Morningside / Finch



**$529,900**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, 6 Years Old House,Basement With Extra Large Window, Hardwood Flooring On Main Floor

### 14th Ave & 9th Line



**$549,900**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3 Granite Counter Tops, Gas Fireplace In The Great Room & So Much More!

### Markham Rd/Elson/Steeles



**$599,900**
Detached 2 Story, Bedrooms 4+3 Washrooms 5, Sep Entrance Finished Bsmt, About 7 Yrs New, 3,112 Sq Ft Steps To Ttc, School, Park

### Markham Rd/Bur Oak



**$633,800**
Detached 2 Story Bed rooms 5, Washrooms 4 Absolutely Stunning Royal Park Home,9Ft Ceilings, Granite Kitchen Counters

### West Of Mccowan/Highglen



**$749,000**
Detached 2 Story Bed rooms 4+2, Washrooms 5, Professionally Finished Basement, Large Deck, Shed, Play Area For Kids,Triple Car Garage

### Rossland/Salem



**$284,900**
Detached 2 Story. Bed rooms 3, Washrooms 2, Excellent Condition, Upgraded Kitchen Cabinets Close To All Amenities

### GAS STATIONS



Excellent Opportunity To Own An Amazing ESSO Gas Stn.Excellent Income From Gas, Convenience Store, Car Wash And Rental Income From Tim Horton. Business With Property For Sale.

### Sales of Business



**$199,000 For Sale**
Sale Of Business Without Property Gas Stations. Full Service Gas Station With Variety Store

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
**Independently Owned and Operated**
**7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7**

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# பல்கலைக் கல்லூரி

நாள்: 26.11.2009 வியாழக்கிழமை
இடம்: வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், உரும்பராய்
தலைமை: கல்லூரி அதிபர் திரு. க. கனகராசா

மதிப்புக்குரிய அதிபர் திரு. கனகராசா அவர்களே! கடமையிற் சிறந்த ஆசிரியப் பெருமக்களே! கல்வியிற் கண்ணாயிருக்கின்ற மாணவ மாணவிகளே!

நீண்ட காலத்துக்குப் பிறகு முன்னர் நான் பணியாற்றிய பாடசாலையில் நிற்கிறேன் என்பதை எண்ணிப் பெருமைப்படுகின்றேன். அதே சமயம் இந்தப் பாடசாலைக்கு நேர்ந்த கதியை நினைத்து கவலையும் கொள்கிறேன்.

முன்னைய மத்திய மகா வித்தியாலயம் அழகான கட்டிடங்களைக் கொண்டிருந்தது. இப்பொழுது நீங்கள் கற்கின்ற வித்தியாலயம் தகரக் கொட்டில்களிலே இயங்கிக் கொண்டிருக்கின்றது. நீங்கள் நிற்கின்ற நெருக்கத்தைப் பார்த்துப் பாடசாலையின் இட நெருக்கடியை உணர்ந்துகொள்ள முடிகிறது. இந்த அளவுக்கேனும் இதனை நிலைகொள்ளச் செய்த முன்னைநாள் அதிபர், பூச்சியத்தில் ஓர் இராச்சியத்தை அமைத்த செயல்வீரர் திரு. ஆ.சி. நடராசா அவர்களுக்கு இக்கல்லூரி காலம் காலமாக நன்றி சொல்லிக்கொண்டே இருக்கும்.



என்னை உங்களுக்கு மிகச் சிறப்பாக அறிமுகஞ் செய்த அதிபர் கனகராசா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அறிமுகம் வேண்டியது தான். நீங்கள் ஏதோ விலங்குக் காட்சிச் சாலையில் உள்ள விலங்கு ஒன்றை உற்றுப் பார்ப்பது போல என்னைப் பார்ப்பது தெரிகிறது.

அப்படிப் பார்க்கின்றபொழுதுகூட, பார்க்கின்ற மிருகத்தைப் பற்றிக் கொஞ்சமாவது முன்னதாக அறிந்திருப்பீர்கள். அந்த அளவுக்கேனும் என்னைப்பற்றி நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள். ஏனென்றால் நான் 29 ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பி வந்திருக்கிறேன். அதனாலே அதிபரின் அறிமுகம் வேண்டியது ஒன்றுதான்.

நீங்கள் பிறப்பதற்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் 1965ஆம் ஆண்டுக்கும் 1973ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் நான் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக, பகுதித் தலைவராக, உப அதிபராக, சிலகாலம் தற்காலிக அதிபராக என்று பல பதவிகளிற் படிப்பித்துக்கொண்டிருந்தேன்.



வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துக்குச் சிறப்பான ஒரு வரலாறு உண்டு. C.W.W. கன்னங்கரா அவர்கள் அமைச்சராக இருந்த காலத்திலே இவ் வித்தியாலயம் கட்டப்பட்டது. கன்னங்கரா அவர்கள் பெரிய தீர்க்கதரிசி. கல்வி அமைச்சராகப் 17 ஆண்டுகள் பணிபுரிந்து பல புரட்சிகரமான திட்டங்களைத் துணிச்சலுடன் செயற்படுத்திய கல்விமான்.

அவரது புரட்சிகளில் ஒன்று இலவசக் கல்வித்திட்டம். இத்திட்டத்தினால் கல்வியானது பணம் படைத்தவருக்குத்தான் என்ற நிலைமாறி, வறியவர்களும் படித்து முன்னேறலாம் என்ற புதிய யுகம் ஒன்று உருவாகியது. அதுவரை காலமும் இருந்துவந்த ஆங்கிலக் கல்வி, தாய்மொழிக் கல்வி என்னும் இருமொழிக் கற்கை முறைகளையும் இல்லாமல் செய்து தாய்மொழியில் பல்கலைக் கழகம்வரை இலவசமாகக் கல்வி கற்கும் வசதியை கன்னங்கரா அவர்கள் எல்லோருக்கும் வழங்கினார்.

அத்துடன் வாழ்க்கைக்குப் பயன்படத்தக்க தொழிற் கல்விக்கும் முக்கியத்துவம் அளித்தார். தேசியக் கலைகளையும் அவர் பாடதிட்டத்திற் சேர்த்தார். மற்றுமொரு திட்டம், இலவச மதிய உணவு முறை. இது வறிய பிள்ளைகளுக்குப் பெரும் உதவியாக இருந்தது.

அக்காலத்திற் பாடசாலைகள் தனியார் பொறுப்பில் இருந்தன. அதுவும் பெரிய பட்டணங்களிலேயே அவை அமைந்திருந் தன. அப்பாடசாலைகளுக்குச் சவாலாகக் கிராமப்புறங்களிலே தகுந்த வசதிகளோடு கூடிய அரசாங்கக் கல்லூரிகளைக் கட்டிக் கல்வியைக் கிராம மக்களின் வீடுகளுக்கே எடுத்துச் சென்ற பெருமை திரு. கன்னங்கரா அவர்களுக்குரியது. இக் கல்லூரிகள் அரசாங்க மத்திய கல்லூரிகள் - Government Central Colleges - என்று அழைக்கப்பட்டன.

வயாவிளான் மத்திய கல்லூரி 1946ல் கட்டி முடிக்கப்பட்டது. கல்லூரி கட்டப்பட்டிருக்கும் காணி ஈழகேசரி நா. பொன்னையா அவர்களுக்குச் சொந்தமானது. அவர் குரும்பசிட்டியைச் சேர்ந்தவர். தனது காணி யில் ஆழமான பெரிய கிணற்றை வெட்டி ஆட்களை வைத்து அவர் தோட்டம் செய்துவந்தார். தோட்டத்தால் நல்ல வருமானமும் அவருக்கு வந்தது. ஆனால் அரசாங்கம் பாடசாலை கட்டுவதற்குக் காணித்தெரிவு நடத்தியபோது பொன்னையா அவர்கள் தனது காணியை அரசாங்கத்துக்குக் கொடுக்க முன்வந்தார்.

காணி குரும்பசிட்டியில் இருந்ததால் பாடசாலைக்குக் குரும்பசிட்டி மத்திய கல்லூரி என்றே முதலிலே பெயர் சூட்டப்பட்டது. எனினும் காணியின் வடக்கு கிழக்கு எல்லைகள் வயாவிளான் பகுதிக்குள் வருவதாலும் வழக்கறிஞர் வ. இராசநாயகம் தலைமையில் வயாவிளான் மக்கள் பாடசாலைக்கு வயாவிளான் பெயரைச் சூட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டதாலும் திறப்புவிழாவுக்குச் சில நாட்களுக்குமுன் வயாவிளான் மத்திய கல்லூரி எனப் பெயரை மாற்றுவதற்குப் பொன்னையா சம்மதித்தார்.

ஆயினும் பொன்னையா பாடசாலை என்றே பலர் வயாவிளான் கல்லூரியை அழைத்து வந்தனர். - தொடரும்



**கவிஞர் வி. கந்தவனம்**


# MOHAN
## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**




Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# கண்ணன் மரணித்த கடைசி நாள்...

மரணம் விதிகளை உடைக்கும் என்று முன்னொரு தடவை பார்த்திருக்கிறோம், அதேபோல விதிகளை உடைத்தவர்களை மறுபடியும் விதியே உடைத்து எப்படி மரணத்தில் தள்ளும் என்பதை இப்போது பார்க்கப் போகிறோம்..

இரண்டும் இரண்டும் நாலு நாயோட முதுகில வாலு என்பது போல ஓர் எளிமையான கணக்கில் இந்த வாழ்க்கை உருவாக்கப்பட வில்லை. அது மிகவும் சிக்கலான கணக்காகவே எழுதப்பட்டிருக்கிறது. இன்பமாக இருக்கிறோம் என்று நினைக்கும் போது மறந்துவிடாதே மரணம் உனக்கு இருக்கிறது என்ற துன்பமான அலை மனதில் ஓடிப்போகும். அதேபோல துன்பத்தில் துவளும் வேளையில் ஏதோ ஓர் இன்பமான அலை வளைந்து வளைந்து ஓடிப்போய் ஆறுதல் தரும். இப்படி இதுவும் அதுவுமாக மாயமான் போல ஜாலம் காட்டுவதே வாழ்க்கை.

விதியை உடைத்தால் கிடைக்கும் தண்டனையில் இருந்து கடவுளும் தப்ப முடியாது என்பதற்கு ஒரு கதை இருக்கிறது, அதுவே கண்ணன் மரணித்த கடைசி நாளாகும். வீரமன்று விதியன்று என்று இராமாயணத்தில் வாலி கூறிய இடத்தை நாம் முன்னரே பார்த்திருக்கிறோம். இராமன் மறைந்திருந்து வாலி மீது பாணம் எய்தபோது அவன் அப்படிக் கூறியிருந்தான்.

அன்று விதி உடைந்துவிட்டது என்று கூறிய வாலியே கண்ணன் இறக்கும் நேரம் விதி யின் வடிவமாக வருகிறான். வாலியின் முன்னால் நின்று போரிட்டால் பாதிப்பலம் வாலிக்கே போய்விடும். ஆகவேதான் இராம பிரான் மறைந்திருந்து பாணம் விட்டார் என்று சப்பைக்கட்டு கட்டியவர்களின் கதைகளை எல்லாம் உடைத்துச் சரிக்கிறது விதி.

இராமாயணத்தில் வரும் இராம அவதாரத்தில் செய்த குற்றத்திற்காக பாரதத்தில் வரும் கண்ணன் தண்டனையைப் பெறுகிறான். பாரதப்போர் முடிந்து ஒரு நாள் காட்டில் உள்ள மரம் ஒன்றில் கால்களை ஆட்டிய படியே கண்ணன் நிஷ்டையில் மூழ்கியிருக்கிறான். அவனுடைய சிவந்த தாமரை மலரை ஒத்த பாதம் ஆடுவதை இலைகளுக்கூடாக ஒரு வேடன் பார்க்கிறான். அந்த அடர்ந்த காட்டில், இலைகளுக்கிடை யில் அப்படியொரு சலசலப்பைக் கண்டதும் வேடன் அதை பறவை என்று தப்பாக நினைக்கிறான். அவ்வளவுதான் பறவை பறக்க முன்னரே சரேலென்று அம்பை எய்கிறான். சீறி வந்த அம்பு கண்ணனின் பாதத்தை ஊடறுத்துப் பாய்கிறது. தனது குறி தப்பவில்லை, பறவை விழுந்துவிட்டது என்றபடி ஓடி வருகிறான் வேடன்.

ஆச்சரியம்..

அது பறவையல்ல. அழகே உருவான மனித வடிவிலான ஒரு தெய்வப்பிறவி..
ஐயையோ .. சாமி தவறிழைத்துவிட்டேன். இதோ அந்த அம்மை இழுக்கிறேன், என்று கதறுகிறான்..

கண்ணன் அவன் முகத்தையே கூர்ந்து பார்க்கிறான்.. அங்கே இராம அவதாரம் எடுத்தபோது கொன்ற வாலியின் முகம் நிழல்போலத் தெரிகிறது.. சிரிக்கிறான், எத்தனைபேர் எத்தனையோ காரணங்களை கற்பித்து அன்று இராமன் செய்தது சரி என்று வாதிட்டாலும், விதி அவைகளை எல்லாம் நிராகரித்துவிட்டு தன் கருமத்தை செய்துவிட்டதைக் காண்கிறான்.

வேண்டாம்.. அம்பை இழுக்காதே.. அன்று உனக்கு நான் எய்த பாணம் இன்றுதான் திரும்பியிருக்கிறது, என்றபடி மரணிக்கிறான். நீல வடிவான அந்த அழகனையே கூர்ந்து பார்க்கிறான் வாலி, அவன் கண்களுக் குள்ளால் அன்று மறைந்திருந்து அம்புவிட்ட இராமனின் முகம் ஸ்படிகமாகத் தெரிகிறது.

இந்தக்காட்சியை ஒரு நீதியான, அதேவேளை காரணம் கூற முடியாத வாழ்க்கை விதி என்று பெரியவர்கள் கூறுவார்கள். இதை நீங்களும் புரிய வேண்டுமானால் இதோ சிறிய பரிசோதனை செய்து பாருங்கள்.

உங்களுக்கு யாராவது துன்பமோ அல்லது இன்பமோ நேரடியாக செய்தால். அதுபோன்ற துன்பச் செயலை முன்னர் யாருக்காவது நீங்களும் செய்திருந்தால். அன்று உங்களால் பாதிக்கப்பட்டவரின் முகத்தையும் இன்று உங்களுக்கு அநீதி செய்தவர் முகத்தையும் ஒப்பிட்டு நோக்குங்கள். இவருடைய முகத்திற்குள்ளால் உங்களுக்கு அவருடைய முகம் தெரியும். நடப்பது ஏன்.. நடத்துவது யார்..? என்ற உண்மையை உங்கள் உள்ளம் பளிங்குபோல காட்டும்.

இந்த உண்மையை விளங்குவதற்கு கண்ணனும், வேடனும் ஒருவர் முகத்தில் மற்றவர் விதியைக் கண்டனர் என்ற கதையே சாட்சியமாகும்..

இப்படி எழுதும்போது.. அடடா நாம் மார்க்சியம், லெனினிசம், பெரியாரிசம் எல்லாவற்றையும் மகிழ்வுடன் பேசுகிறோமே, அப்படிப்பட்ட நாமே இப்படி விதி பற்றி எழுதலாமா என்ற கேள்வி ஓர் அலையாக ஓடிப்போவதையும் உணரலாம். பெரியரிசத்தின் நடுவே இறையியலும் அதுபோல இறையிசத்தின் நடுவே பெரியாரிசமும் இழைபோல ஓடுவதை உணர்ந்து வாழ்வைப் புரிந்தவர் இறப்புகளுக்காக அழமாட்டார்கள் என்பது இந்த நாடகத்தின் ஓர் உச்சக்கட்டமாகும்.

இதற்கு இன்னோர் உதாரணம். ஒரு தடவை நான் வன்னி சென்று புலிகளின் வெளிநாட்டு பொறுப்பாளர் காஸ்ரோவை சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது வல்வை முத்துமாரி அம்மனை எமது திரைப்படத்தின் ஆரம்பப் படமாகப் போட்டிருக்கும் செய்தியைப் பேசினேன். அப்போது அவர் அவைகளை விடுங்கள். தலைவர் இப்போது பெரியாரின் நூல்களையும் சிந்தனைகளையும் தான் படித்துக் கொண்டிருக்கிறார் என்று கூறினார்.

பழநி முருகனிடம் நேர்த்திக்கடன் வைத்து மொட்டை போட்டு, தனது பணிகளை ஆரம்பித்த பிரபாகரன் இப்போது பெரியார் நூல்களை படிக்கிறாரா என்று நான் குழம்பிவிடவில்லை. ஈழத்தை அமைப்பதற்காக சமயபுரத்தில் இருந்து படகேறி வந்திருக்கும் வல்வை முத்துமாரி அம்மன், காலைச் சூரியன் வரும்போது தனது கோபுர கலசத்தின் நீண்ட நிழல் எட்டித்தொடும் ஒரு வீட்டில் இருந்து பிரபாகரன் என்ற வீரனை உருவாக்கினார் என்ற உண்மையை அவர் மறந்துவிட்டாரா என்றும் கோபப்படவில்லை.

இறையியலில் ஆழமாகப் போவோர் ஒரு கட்டத்தில் பெரியாரிசத்திலும் அதுபோல பெரியாரிசத்தில் ஆழமாகப் போவோர் ஒரு கட்டத்தில் இறையியலையும் நேசிப்பர். அரைகுறையான அறிவுடையோர் மட்டுமே இதுவே சிறந்தது. இல்லை அதுவே சிறந்தது என்று மோதிக் கொள்வார்கள். எல்லாம் சிறந்ததே என்பதுதான் மோதலற்ற முதிர்ச்சி நிலையாகும். அத்தகைய உன்னத நிலையை பிரபாகரன் அடைந்துள்ளார் என்பதற்கு அவர் கையில் இருந்த பெரியார் நூலே சாட்சியமாகும்.

இனி,
இவ்வளவு சம்பவங்களுக்கும் புதுமாத்தளனுக்கும் என்னதான் தொடர் பென்று சிலர் கேட்கலாம்.

பதில்,
துன்பங்களும் இன்பங்களும் மாறி மாறி வருவதில்லை, ஒன்றுக்குள் ஒன்று கலந்து ஓடுவதுதான் பிரபஞ்ச விதி.

புதுமாத்தளனுக்குப் பின் தமிழினம் கொடுப்பதற்கு எதுவும் இல்லாத வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. எதிர்பாராத ஓர் இடத்தில் எதிர்பாராத ஒரு நேரத்தில் புதுமாத்தளன் கொடுமைகளை நிகழ்த்தியோர். கடைசி நேரத்தில் கண்ணன் வேடனைச் சந்தித்தது போன்ற ஆபத்தை சந்திக்க நேரிடும். அப்போது அவர்களின் முன்னால் சில முகங்கள் தெரியும். வாலியை கண்ணன் பார்த்ததும், இராமனை வேடன் பார்த்ததும் போன்ற காட்சியை அவர்கள் எதிர் பார்க்காத நேரத்தில் விதி ஸ்படிகமாகக் காட்டும்.

விதியை உடைத்தவர்களை விதி உடைக்கும். எல்லோரையும் சிறைக்குள் தள்ளிய சரத் பொன்சேகாவை பிடரியில் அடித்து சிறையில் அடைத்த விதியை கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்.

அதுபோல,
வேடனின் முகத்தில் வாலியைக் கண்ட கண்ணனின் மரணத்தை அறியுங்கள். கண்ணீரைத் துடையுங்கள்.

- நன்றி: அலைகள்





உங்கள் வியாபாரத்தினை தயார் செய்வது நீங்கள் நினைப்பதிலும் பார்க்க சுலபமானது.

ஜுலை 1ல், ஒன்ராறியோவில் HST ஆனது PST மற்றும் GST இற்கு மாற்றாக அமுலுக்கு வருகிறது. வியாபாரங்களைப் பொறுத்தமட்டில் இதன் அர்த்தமானது ஒன்ராறியோ வரி மாற்றங்கள் காரணமாக, கணக்குவழக்குகள், விலைப்பட்டியல் முறைமையை புதுப்பித்தலும், வரிச்சலுகைக்கு தகைமையடைவதும் மற்றும் புதிய வரி குறைப்பில் அநுகூலமடைவதும் ஆகும். நீங்கள் எப்படி ஆயத்தம் செய்யலாம் என்று அறியுங்கள். உங்கள் கணக்காளரிடம் பேசவும் அல்லது ontario.ca /hstready பார்க்கவும். வியாபாரத் தயார் சம்பந்தமான நுணுக்கங்களை உங்கள் மொழியில் பார்ப்பதற்கு வலைத்தளம் செல்லவும்.

ontario.ca/hstready

ஒன்றாரியோ அரசினால் இதற்குரிய கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# இடம்பெயர்ந்த மக்களுக்கு...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

ான ஒரு வாரத்தை அரசாங்கம் வெற்றிவிழா வாரமாக அறிவித்திருக்கின்றது. நாடெங்கிலும் வெற்றிவிழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. யுத்தத்தின் கோரச் சம்பவங்களை நேரில் கண்ட சாட்சிகளாக, யுத்தத்தில் சிக்கி நூலிழையில் உயிர் தப்பியுள்ள மக்களின் மனதிற்கு ஆறுதல் கூறத்தக்க வகையில் எந்தவிதமான நடவடிக்கைகளையும் இந்த அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. உறவுகளையும் குடும்பத்தினரையும் பறிகொடுத்து, அவயவங்களை இழந்தும், கண்களைப் பறிகொடுத்தும் அல்லலுற்றிருக்கின்ற அந்த மக்களின் துன்பத்தில் பங்குகொள்ளும் வகையில் யுத்தத்தின்போது கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் ஆத்ம சாந்திக்காக அரசாங்கத்திடமிருந்து எந்தவிதமான அறிவிப்பும் வெளியாகவில்லை. வெறும் வெற்றிவிழாக் கொண்டாட்ட அறிவிப்பு மாத்திரமே பூரிப்போடு வெளியிடப்பட்டிருக்கின்றது.

அரசாங்கத்தின் இந்தச் செய்கையானது, போரினால் பாதிக்கப்பட்டு வேதனையால் வெந்து கொண்டிருக்கின்ற தமிழ் மக்களின் மனங்களில் வேல்கொண்டு பாய்ச்சியதைப் போன்று அமைந்திருக்கின்றது. நல்லிணக்கத்திற்குப் பதிலாக பிணக்கு ஏற்படுவதற்கான ஒரு வழியைத் திறந்துவிட்டது போலவே இந்தச் செயல் அமைந்திருக்கின்றது. இந்த நிலையில் அரசாங்கம் தமிழ் மக்கள் மீது அனுதாபம் கொண்டு அல்லது அக்கறை கொண்டு அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக நேர்மையாகச் செயற்படுமா என்ற சந்தேகம் பலமாகத் தலை தூக்கியிருக்கின்றது. பல்வேறு அரசியல் நடவடிக்கைகளின் மூலமாக இலங்கை அரசாங்கங்களிடமிருந்து ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்வதற்காகப் போராடிய தமிழ் மக்கள் தமது ஆயுதப் போராட்டமும் முறியடிக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் இணக்கப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் நடந்து கொள்ளும் என நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் அந்த நம்பிக்கை இப்போது சிதறடிக்கப்பட்டு வருவதையே காணக்கூடியதாக இருக்கின்றது.

கிட்டத்தட்ட 3 லட்சம் பேர் போரினால் இடம்பெயர்ந்து இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள்ளே அனுமதிக்கப்பட்டு, மனிக்பாம் முகாமில் அவர்களுக்கு அபயமளிக்கப்பட்டது. அங்கு அவர்கள் அரசாங்கத்தினால் சொந்தநாட்டுப் பிரஜைகளாக நடத்தப்படவில்லை. சந்தேகத்திற்குரிய கிரிமினல்களைப் போல முட்கம்பி வேலிகளுக்குள் அடைக்கப் பட்டிருந்தார்கள். மனிதாபிமானத்தோடு அவர்கள் நடத்தப்படவில்லை. கூடாரங்களுக்குள் கொளுத்தும் வெயிலின் கோர வெப்பத்தினுள் அவர்கள் வாழ்க்கை நடத்த வேண்டியிருந்தது. சீரான குடிநீர், அடிப்படை சுகாதார வசதிகள், சுதந்திரமான நடமாட்டம் என்பன மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருந்தன. இப்பொழுது மீள்குடியேற்றத்திற்காக அவர்களுடைய சொந்தப் பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தில் எந்தவிதமான பெரிய மாற்றமும் ஏற்படவில்லை. முகாம்களில் வாழ்ந்ததைப்போலவே கூடாரங்களிலும் தகரக் கொட்டில்களிலுமே அவர்கள் இன்னும் தங்கியிருக்கின்றார்கள். அவர்களுக்கு நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. வாழ்வாதாரத்திற்குத் தேவையான தொழில் வசதிகள் செய்யப்படவில்லை. இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.



அதுமட்டுமல்லாமல், மன்னார் மாவட்டத்தின் சின்ன பண்டிவிரிச்சான் தட்சணாமருதமடு, தொடக்கம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டம் வரையிலான பிரதேசங்களின் பல பகுதிகளில் முழுமையாக காணிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்படவில்லை. வீடுகள் அமைந்துள்ள இடங்களில் மாத்திரம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. ஏனைய விவசாயம் செய்யக் கூடிய இடங்களில் அவைகள் அகற்றப்படவில்லை. மாறாக அந்த இடங்களில் மஞ்சள் பட்டிகள் சுற்றி கட்டப்பட்டு கண்ணி வெடி அபாயத்தைக் குறித்து காட்டுகின்ற அடையாளங்கள் இடப்பட்டிருக்கின்றன.

இதனால் மீள்குடியேறியுள்ள மக்கள் தங்களுக்கு வழங்கப்படுகின்ற உலர் உணவை உட்கொண்டு, வெறுமனே காட்டுப் பாங்கான பகுதிகளில் பாம்புக்கடி, மிருகங்களின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வாழ்க்கையை ஓட்ட வேண்டியவர்களாக இருப்பதாக மீள்குடியேற்றப் பகுதிகளுக்கு அடிக்கடி சென்று வருகின்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி, கிளிநொச்சி மாவட்டத்தின் பூனகரி போன்ற சில சில பிரதேசங்களைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் நெற்செய்கையில் ஈடுபடுவதற்கான வசதிகளை அரசு இன்னும் செய்யவில்லை. மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கு ஆறு மாதங்களுக்கு மாத்திரமே உலர் உணவு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் நான்கு ஐந்து மாதங்களுக்கு முன்னர் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் இதனால் அடுத்தடுத்த மாதங்களில் தமது உணவுத் தேவைக்கு என்ன செய்வது என்பதுபற்றி கவலையோடு சிந்திக்க நேர்ந்திருப்பதாகவும் செல்வம் அடைக்கலநாதன் கூறியுள்ளார்.

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்று நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் அரசியலமைப்பை மாற்றி அமைக்கப் போவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார். ஆனால் அவர் எதிர்பார்த்தவாறு கூடிய பெரும்பான்மை பலம் அவருக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் எதிர்க்கட்சிகளில் உள்ள 6 உறுப்பினர்களை ஒருவாறு தமது தரப்பிற்குத் தாவச் செய்வதன் மூலம் ஓர் அறுதிப்பெரும்பான்மை பலத்தை நாடாளுமன்றத்தில் அடைய முடியும் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

அதேநேரத்தில் அரசியலமைப்பில் மாற்றம் செய்வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளில் ஏற்கனவே அரசாங்கம் இறங்கியிருக்கின்றது. நடைமுறையில் உள்ள விகிதாசாரத் தேர்தல் முறையை மாற்றியமைப்பதுடன், ஜனாதிபதி ஒருவர் இரண்டு பருவகாலத்திற்கு மேலாகவும் பதவி வகிக்கக் கூடிய வகையில் அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சியை நீடிக்கச் செய்வது போன்ற நோக்கங்களுக்கான முயற்சிகளாகவே இந்த அரசியலமைப்பு மாற்றத்திற்கான முயற்சி பலராலும் கருதப்படுகின்றது. இத்தகைய மாற்றங்கள் சிறுபான்மையினராகிய தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் எதிர்கால அரசியல் செயற்பாடுகளுக்கு ஆபத்தை விளைவிக்கின்ற ஒரு நடவடிக்கையாகவே ஆய்வாளர்களினாலும், சிறுபான்மை இன அரசியல் தலைவர்களினாலும் நோக்கப்படுகின்றது.

தேர்தல் முடிந்ததும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அரசியல் தீர்வு தொடர்பில் பேச்சுக்கள் நடத்தப்படும் என ஜனாதிபதி ராஜபக்ச அறிவித்திருந்தார். வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பை மக்கள் வெற்றியடையச் செய்துள்ள போதிலும், ஏற்கனவே வாக்களித்திருந்ததன் படி தமிழ் மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டுள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் பேச்சுக்கள் நடத்துவதற்கான எந்தவித முன் முயற்சியையும் அரசாங்கமோ ஜனாதிபதியோ இன்னும் எடுக்கவில்லை என தமிழ்த்தேசிய கூட்டமைப்பு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

யுத்த வெற்றியின் முதலாம் ஆண்டுநிறைவை கோலாகலமாகக் கொண்டாடுகின்ற அரசாங்கத்தின் போக்கைப் பார்க்கும்போது, சிறுபான்மையின மக்களுக்கு நல்லதோர் எதிர்காலம் இருக்கின்றதா என்பது பெரிய கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது.


என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்



Interest Rate going up soon
best time to buy Real Estate

3 bedroom Condo.
Markham / Eglinton
Low Maintenance

INVESTMENT
Why Scarborough?
Brampton, Milton,
Mississaouga Near Airport
$320,000

Gas Stations 4 million litres / year in Peterborough, Oshawa, Hamilton with 6/49, good income

2 Bedroom
Condo Near 401, Mississauga
$125,000 Low Mainteance
good start

Bungalow
MEADOWALE /ELLESMERE
U of T area big lot 3 bedroom

Big Lot
Bungalow House
3 Bedroom bsmt Apartment

Live Like Millionaive
Estate Home with Natural 1 - 5
Acres Low tax. Build your dream
home + pond

$50,000 Net profit in 5year term.
Plus Rental income pay mortgage

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு

அழையுங்கள் - Sitham Sam Shanmugam (Sales Rep.)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.

# கோழியும் குஞ்சுகளும்

## ஓடும் நீர் உறைவதில்லை 02
## இரண்டாம் பாகம்

பறவைகள் பல விதம் அவை ஒவ்வொன்றும் ஒருவிதம். இயற்கையின் அற்புதமான அன்பளிப்பில் பறவைகள் மிகவும் விசேடமானவை. இந்தப் பூமிக்கு மரங்களும், மலைகளும் ஆறுகளும் அழகு சேர்ப்பது போல் பறவைகளும் அழகு சேர்ப்பவை. ஒப்பீட்டளவில் மிருகங்களை விடப் பறவைகள் வண்ண நிறங்களின் உடைமையாளர்களாக உள்ளன. இத்தனை கோடி அழகை நமக்குத் தரும் பறவைகள் எல்லாவற்றுடனும் நாம் நேரடியான தொடர்பை வைத்திருப்பதில்லை. ஆனாலும் நாம் வாழும் இடம் சூழல் என்பவற்றைப் பொறுத்து அந்தப் பிரதேசங்களில் வாழும் பறவைகளின் பங்களிப்பு அளப்பரியது.

பறவைகளில் சிலவற்றை நாம் நமது சூழலுக்குள் பழக்கப்படுத்தி விடுகிறோம். அவ்வாறு பழக்கப்படுத்தப்பட்ட பறவைகளுள் கோழி மிகவும் சாதாரணமானது. வீட்டு மிருகங்களாகிய ஆடு, மாடு போன்று கோழியும் வீட்டுப் பறவையாகி விடுகின்றது. நகரப்புறங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் வாழும் குடும்பங்களுடன் கோழியும் பிணைந்திருக்கும். அதாவது ஒரு வீட்டில் ஆடு, மாடு இருக்கின்றதோ இல்லையோ கோழி நிச்சயமாக இருக்கும். வீடுகளில் கோழி வளர்வதன் அடிப்படை நோக்கம் கோழிக்குப் புரிகிறது. ஆனால் எமக்குத்தான் புரிவதில்லை.

கொடைவள்ளல்கள் யார் என்பதைக் கோடிட்டுக் காட்டுவதற்குக் கர்ணனையும் பாரியையும் கற்றறிந்தவர்கள் நாம். கேட்பவர்களுக்குக் கேட்பதைக் கொடுப்பதால் வள்ளலானார் கர்ணன். கேட்காமலேயே ஒருவரது தேவையை அறிந்து முல்லைக்கொடிக்கு தனது தேரைக் கொடுத்துக் கொடைவள்ளலானார் பாரி. போற்றப்பட வேண்டியவர்கள். ஆனால் இதோ என்னிடம் இருக்கிறது. ஓடிவாருங்கள், எடுத்துக் கொள்ளுங்கள் என்று அறை கூவி அழைத்து கொடுத்த அல்லது கொடுக்கும் வள்ளல்களை இதுவரையில் என்னால் கண்டு கொள்ள முடியவில்லை. இதனால் தான் கொடையில் சிறந்தது அதாவது அதி சிறந்ததாக இருப்பது கோழி என்கிறேன். கோழியை விடச் சிறந்த கொடையாளி இல்லை என்பதே எனது கருத்து.

அப்படி என்ன கொடையைக் கோழி செய்கிறது என்று ஆச்சரியப்பட வேண்டாம். நாம் கோழி வளர்ப்பதன் நோக்கத்தின் அடிப்படையில் இதற்கான தெளிவு கிடைப்பதற்கு வாய்ப்பே இல்லை. நமது நோக்கம் முட்டை, குஞ்சு, இறைச்சி அவ்வளவு தான். ஆனால் கோழியின் வருகை இந்த உலகத்துக்கு உண்மையொன்றை நிலை நிறுத்த வேண்டும் என்பதே. கொடுப்பதற்குக் கோழியை விடச் சிறந்தது எதுவுமில்லை என்று முன்னர் குறிப்பிட்டிருந்தேன். இந்தக் கொடுப்பனவு என்பது இரண்டு வகையில் இந்தப் பறவையினால் முதன்மைப்படுத்தப்படுகின்றது.

முதலாவதாகத் தன்னிடம் இருப்பதை அறை கூவியழைத்துக் கொடுக்கும் பண்பு கொண்டது கோழி. முட்டையை இட்டவுடன் அதைத் தெரியப்படுத்தி அதன் பயன்பாட்டுக்கு அறை கூவல் விடுவது கோழி. தன்னிடம் இருப்பது எந்த அளவு தரமானது என்பதைக் கூடப்புரியாமல் அல்லது புரிந்தாலும் அதில் அக்கறை கொள்ளாமல் அதன் பயன்பாட்டுக்கு அழைப்பு விடுவதில் உடனடியாகவே தன்னை ஈடுபடுத்தும் இந்தக் கோழி ஒரு உன்னதமான கொடை வள்ளல்.

இரண்டாவதாக அமையும் வள்ளல் தன்மைக்கு நிகராக எதுவுமே இல்லை. இங்கே தான் கோழியின் வாழ்வியல் நோக்கத்தை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளல் வேண்டும்.



> "நிர்வாக வசதிக்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ நிலப்பரப்புக்களைத் தாமதமாக்கி கொண்டு நாடு என்ற எல்லைகளை வகுத்திருக்கும் சில நாடுகள் உலகில் எந்த மூலையிலிருந்து எவர் வந்தாலும் அவர்களைப் பேதமின்றி வரவேற்று அவர்களது இனம், மதம், மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு அத்தனையும் உள்வாங்கி ஒரு கோழி எந்தவித பேதமும் இல்லாமல் முட்டைகளை அடைகாப்பது போல் பாதுகாப்பு வாழ்வாதாரம் என்பவற்றைப் பேதமின்றி நடைமுறைப்படுத்துவதுடன் முன்னோக்கிய வாழ்வியல் நகர்வுக்கு அடித்தளமாகவும் அமைவது ஒரு பெரும் கொடையே."

முட்டை, குஞ்சு, இறைச்சி என்பது மனிதனது ஒரு பக்கப் பயன்பாடுடன் கூடிய சுயநலப் பார்வை. ஆனால் இந்த உலகில் படைக்கப்பட்டுள்ள ஒவ்வொன்றுக்கும் ஒரு வாழ்வியல் சிறப்பு என்பது உண்டு என்பது இயற்கையின் மொழி. மனிதனைத் தவிர ஏனையவை அனைத்துக்குமான ஒரேயொரு தொடர்புபடுத்தும் அல்லது தகவல் அளிக்கும் முறை என்பது அவற்றின் இயல்பான திரிபு படாத வாழ்க்கை முறை மட்டுமே. அதாவது கோழி கோழியாகத் தான் வாழமுடியும். ஒரு பொழுதும் காகமாக, அதாவது காகத்தின் வாழ்க்கை முறையை நடைமுறைப்படுத்த முடியாது. மனிதர்களாகிய நாம் துரதிர்ஷ்டவசமாக மனிதனாக வாழ வேண்டும் என்பதை எப்போதோ மறந்து விட்டோம். அதனால் எப்படியும் வாழலாம் என்று நம்மை நாமே அடையாளப்படுத்த முடியாமல் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறோம். எப்போது நாம் மறந்ததை நினைவுபடுத்துகிறோமோ அப்போது முதல் வாழ்க்கை வசந்தமாகி விடுகின்றது.

இப்போது கோழியின் கொடைத்தன்மையை உச்சநிலைப்படுத்தும் விடயத்துக்கு வருவோம். ஒரு கோழி அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும் முட்டைகள் அந்தக் கோழியின் சொந்த முட்டைகளாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அறவே அந்தக் கோழிக்குக் கிடையாது. முட்டைகள் எந்தக் கோழிக்குச் சொந்தமாக இருந்தாலும் அதை அறவே புறக்கணித்துவிட்டு அல்லது அதைப்பற்றிய அக்கறையே இல்லாமல் தனது பொறுப்புக்குள் அவை வந்தவுடன் எதுவித பேதமும் இன்றி அடைகாத்து தன்னை அர்ப்பணித்து அந்த முட்டைகள் குஞ்சுகளாக, உருமாறுவதற்கு உழைக்கின்றது. இந்தக் குஞ்சுகள், முட்டைகள் மூலத்தைப் பொறுத்து பல நிறங்களிலும் பல அளவுகளிலும் அமையும். முட்டைகளில் பேதத்தைக் காட்டாத அந்தக் கோழி அதன் குஞ்சுகளிலும் பேதத்தைக் காட்டுவதில்லை. அதாவது அவை தனது குஞ்சுகளான பின்பு அவற்றுக்காகத் தன்னை முதன்மைப்படுத்தும் அற்புதமான பறவை தான் கோழி. வானத்தில் பருந்து ஒன்று வட்டமிடுவதைக் கண்டதும் அத்தனை குஞ்சுகளையும் தனது இறக்கைகளுக்குள் அடைக்கலம் கொடுத்து விட்டு அவற்றின் நலனுக்காகவும் பாதுகாப்புக்காகவும் தன்னைத் தயார் நிலையில் வைத்துக் கொள்ளும் கோழியை விடச் சிறந்த கொடையாளி உலகில் இதுவரை பிறந்ததுமில்லை. இனிமேல் பிறக்கப் போவதுமில்லை.

இப்போது கோழியின் உலகத்தில் இருந்து நமது உலகத்துக்கு வருவோம். கோழியின் இந்தக் கொடையை மனிதன் ஆரம்பத்திலேயே புரிந்திருந்தால் இந்த மண்ணுலகம் நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதற்கு வாய்ப்பே இல்லாமல் போயிருக்கும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கோழியின் இயல்புத் தன்மையை உணராமல் கோடிக்கணக்கான வருடங்கள் ஓடிவிட்டன. ஆனாலும் ஒரு சில நாடுகள் இந்த உண்மைக்கு உதாரணங்களாக மாறிக்கொண்டு வருவது உலக வெளிச்சத்துக்கான ஊன்றுகோலாகக் கொள்ளலாம்.

**KG Master**-kgmaster@rogers.com

நிர்வாக வசதிக்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ நிலப்பரப்புக்களைத் தாமதமாக்கி கொண்டு நாடு என்ற எல்லைகளை வகுத்திருக்கும் சில நாடுகள் உலகில் எந்த மூலையிலிருந்து எவர் வந்தாலும் அவர்களைப் பேதமின்றி வரவேற்று அவர்களது இனம், மதம், மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு அத்தனையும் உள்வாங்கி ஒரு கோழி எந்தவித பேதமும் இல்லாமல் முட்டைகளை அடைகாப்பது போல் பாதுகாப்பு வாழ்வாதாரம் என்பவற்றைப் பேதமின்றி நடைமுறைப்படுத்துவதுடன் முன்னோக்கிய வாழ்வியல் நகர்வுக்கு அடித்தளமாகவும் அமைவது ஒரு பெரும் கொடையே.

கோழி போன்ற ஒரு நாட்டில் குஞ்சுகளாக நாம் இருப்பது ஒரு வரப்பிரசாதம் என்பதை இறுதிவரை உணர்வோமாயின் கோழியின் (நாட்டின்) பெருங் கொடைக்கு நாமும் பங்களிப்பவர்களாகி விடலாம்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

நன்றியுடன் KG Master


அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹராஜியின் உரைகள்



| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் | Saturdays at 11:00 am |
| (416) 431-5000 | Rogers Cable Channel - 20 |
| 1 877 707 3221 | Bell Express vu Channel - 219 |

# கனடிய ஆதனத்தில்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

பொதுவாக வட்டிவீத ஏற்றம், புதிதாக யூலை 01, 2010 இலிருந்து நடைமுறைக்கு வரவிருக்கும் இணைந்த விற்பனை வரி (Harmonized Sales Tax) உலக நாடுகளின் பொருளாதாரம் போன்றவற்றை கருத்தில் கொள்வதாலும் மேலும் ஏப்ரல் 19, 2010 இல் நடைமுறைக்கு அடமானக் கடனில் கொண்டுவரப்பட்ட இறுக்கம் இவற்றின் பாதிப்புகள் ஆதன வியாபாரத்தில் ஒருவித இறக்கத்தை எதிர்பார்க்கலாம் என்பது உண்மையாக இருந்தபோதிலும், புதிதாக கனடாவிற்கு குறிப்பாக ரொறொன்ரோவிற்கு குடிவருபவர்களின் தொடர்ச்சியான வருகை, ரொறொன்ரோ ஆதனவிலை மாற்றம் அமெரிக்காவில் நடந்தது போல இருக்கும் என்று எதிர்பார்க்கத் தேவையில்லை என இப்போதைக்கு கொள்ளலாம். இருந்தபோதிலும் கனடிய வீட்டு விலையில் இறக்கம் ஏற்படாது என விவாதம் செய்பவர்கள் இல்லை எனக் கூறலாம்.



# தென்னாபிரிக்கா...




இதையடுத்து வந்த கேப்டன் சங்ககரா, 5 ரன்களில் ஆட்டமிழந்து வெளியேறினார். "இறுதியில் 15.3 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 86 ரன்கள் எடுத்து இலங்கை அணி வெற்றிபெற்றது. தில்ஷன் 33 ரன்களுடனும், மேத்யூஸ் ரன் ஏதுமின்றியும் இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். சிறப்பாக பந்துவீசி 3 விக்கெட் வீழ்த்திய இலங்கை வீரர் குலசேகரா ஆட்டநாயகனாக தேர்வுசெய்யப்பட்டார். சுருக்கமான ஸ்கோர்: நியூசிலாந்து- 81 (நாதன் மெக்குலம் 36, குலசேகரா 3வி/4), இலங்கை- 86/3 (தில்ஷன் 33, மெக்குலம் 2வி/15).

இரு தொடர்களிலும் சிறப்பாக விளையாடிய நியூசிலாந்து கேப்டன் டேனியல் வெட்டோரி தொடர்நாயகனாக தேர்வு செய்யப்பட்டார். இரு போட்டிகள் கொண்ட டி20 தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வென்றதன் மூலம் 1-1 என்ற கணக்கில் தொடர் டிராவில் முடிவடைந்தது.

டில்சான் தலைமையில் இளம் வீரர்களுடன் இலங்கை அணி

சிம்பாவேயில் இடம்பெற இருக்கும் முக்கோண ஒரு நாள் தொடர் தலைவராக இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவராக டில்சான் நியமிக்கப்பட்டுள்ளார். இதேவேளை மூத்த வீரர்களான குமார் சங்கக்கார, மஹெல ஜயவர்த்தன, சனத் ஜயசூரிய, முத்தையா முரளிதரன், மற்றும் லசித் மலிங்க ஆகியோருக்கு இப்போட்டியில் ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

சகல துறை துடுப்பாட்ட வீரர் ஜீவன் மெண்டிஸ்க்கு முதன் முறையாக சர்வதேச போட்டிகளில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பங்காள தேசத்திற்கு எதிரான போட்டியில் விளையாடிய இடது கை துடுப்பாட்ட வீரர் லகிறு திரிமன்க்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சிம்பாவேயில் இடம்பெறும் இப்போட்டியில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக உப்புல் தரங்க சாமர சில்வா மற்றும் டில்கார பெர்னா ஆகியோர் களம் இறங்குவார்கள். இலங்கை அணி பங்கேற்கும் இப்போட்டிகள் 28 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

# அழகு



அழகியற் கோலங்கள் 'மானைப் பாருங்கள் அழகு'

அழகியற் கோணங்கள்

அழகு என்பதற்கு என்ன என்ற விளக்கம் இதுவரை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளும் தன்மையில் வரையறுக்கப்பட வில்லை.

பெண் என்றால் அழகு. அழகு என்றால் பெண் என்பது கவிஞர்கள் முதல் கதா ஆசிரியர்கள் வரை தங்கள் எழுத்துக்குள் அகப்படுத்தாமல் விட்டபாடில்லை. பண்டைக்காலந்தொட்டு இன்றுவரை பெண்கள் பற்றிப் பாடிய பாடல்கள், எழுதிய கதைகள் வர்ணித்த வர்ணனைகள் எண்ணிலடங்கா. இவை அனைத்தும் பெண்களின் அழகை வெளிக்காட்டுபவையே. ஆண் என்றால் கட்டுடல், வீரம், துணிவு என்பனவற்றையே கண்டுகொள்கின்றார்கள். மேலைத் தேய வரலாற்றில் கிளியோபத்ரா, மர்லின்மன்றோ, எலிசபெத் டெயிலர் போன்றவர்கள் அழகின் சின்னங்களாக கருதப்பட்டார்கள். சிறந்த அழகிகளாகக் கருதப்பட்டதற்கு அவர்களின் உடல் கட்டும், கவர்ச்சியுமே காரணம் எனக் கொள்ளப்படுகின்றது.

மன்மதன் அழகின் திரு உருவம் எனக்கருதப்படுகின்றது. எந்தக்குறையும் இல்லாமல் மனித உருவம் எதுவுமே இருக்கமுடியாது என்பது பொதுவான கருத்து. அப்படியானால் மன்னமதனின் சிருஷ்டி அப்படியான ஒன்றாக இருந்திருக்கலாமா? அதற்காகத்தான் உருவமே இல்லாத வருணனை உருவமாகக் கற்பனை செய்யப்படுவதாக என்று எண்ணத்தோன்றுகின்றது. ரதியும், மன்மதனும் போல எனக் கூறுவார்கள். அவர்களின் வருணனை அத்துணை அழகை அள்ளி எறிகின்ற சாயலில் புலவர்கள் ஏன் குரவர்கள் கூடப் பாடியுள்ளார்களே!

**- த. சிவபாலு-**

மான் விலங்குளில் அழகானது. மருட்சிப்பார்வை உடையது. அதன-ாலன்றோ பெண்களின் பார்வைக்கு மானை ஒப்பிடுகின்றார்கள். புள்ளிப் புள்ளி மானே என்று பாடல்களை யாத்திருக்கின்றார்கள். அள்ளி உந்தன் மேனியில் தங்கம்போல புள்ளியை யார் உனக்குத் தந்தது? என்று கேட்கும் அளவிற்கு பொன் நிறத்து மேனி ஜொலிக்கும் அழகோ அழகு. பொதுவாக விலங்குகள் பறவைகளில் ஆண் இனம்தான் அழகுத்தோற்றத்தையும் கம்பீரத்தையும் கொடுக்கின்றது. எனினும் மானினம் பேடை என்று கம்பன் குறிப்பிடும் சீதையின் அழகை கவிை-தயில் வடித்துத் தந்தமை எவ்வளவு சுவையாக உள்ளது. மரியா லூசியா ரெயிலர் என்னும் பிரபல ஆங்கில் கவிஞரின் பாடல் ஒன்றை இங்கு பார்ப்போம். அவர் எதற்கு எது அழகு என்று குறிப்பிடுவதோடு மட்டுமன்றி நீயே அழகு என மனிதப் பிறவியின் சிறப்பை வியக்கின்றாரா? அல்லது காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு என்கின்றாரா?

### *What is Beauty*

There is so much beauty in life
Beauty is a gift of God
Beauty is in the heart which touches, another
Simplicity is beauty.

Beauty of sun setting in to ocean, in evening
Truth is beauty, beauty is truth
Beauty is the best treasure for, one's eye
the beauty of a love that is real.

Bright colors of the rainbow,
the beauty of spring
What is beauty?
Beauty is you. *- Maria Luisa Taylor*

### *Personal Prayer To The Holy Spirit*



Holy spirit thou make me see everything and show me the way to reach my ideal. You who give the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue, want to thank You for everything and confirm once more that I never want to be separated from You no matter how great the material desire may be. I want to be with You and my loved ones in Your perpetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd day your wish will be granted no matter how difficult it may be. Promise to publish this as soon as your favor has been granted - PRSN

Our Mother of Perpetual Help

# கருந்துளைகள் -17

எமது பேரண்டத்தினைப் பார்ப்போம். பொதுவாகவே இப்பேரண்டம் முப்பரிமாணவெளி என்றே கருதுகின்றோம். ஆனால் அந்த முப்பரிமாண வெளியின் ஒவ்வொரு புள்ளியிலும் நேரம் என்ற நான்காவது பரிமாணமும் சேர, எமது பேரண்டவெளியானது வெளி நேரம் என்ற நாற்பரிமாணவெளியாகின்றது. முப்பரிமாணவெளியானது புள்ளிகளால் நிரம்பப் பெற்றது என்ற கருத்தானது இப்போது ஒவ்வொரு புள்ளிகளிலும் நேரமும் இணைந்ததினால் அது நிகழ்வாக மாற, வெளிநேரம் என்ற நாற்பரிமாண வெளியானது நிகழ்வுகளினால் ஆனாது என்றாகிவிட்டது. அயன்ஸ்ரைனின் சார்பியற் கொள்கைளானது இந்த வெளிநேரம் என்ற நாற்பரிமாண வெளியை உறுதி செய்வதுடன், இந்த நாற்பரிமாணவெளி என்ற கருதுகோளின் ஊடாக பேரண்டத்தின் பல புதிர்களை, இரகசியங்களை மனிதர்களாகிய எங்களுக்கு அம்பலப்படுத்தியது. அதில் ஒன்றுதான்



ஈர்ப்பலைகள்.

நாற்பரிமாண வெளியில்தான் பேரண்டத்தின் சகல பொருட்களும் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. கோள்கள், விண்மீன்கள், கலக்சிகள், கருந்துளைகள் போன்ற திணிவு கூடிய பொருட்கள் தம்மைச் சுற்றியுள்ள நாற்பரிமாணவெளியை தத்தமது திணிவுகளுக்கு ஏற்ப தம்முடன் இழுத்து, வளைத்து வைத்திருக்கின்றன. ஏற்ப,இதனால் வானடபொருட்களின் இருகில் நாற்பரிமாணவெளி குழிவாக வளைந்து காணப்படுகின்றது. இவ்வளைவுகளில்தான் வான்பொருட்கள் எல்லாம் இயல்பாக இயங்குகின்றன. அதனால் முற்றிலும் வெற்றிடமான இந்த நாற்பரிமாணவெளியானது அதன் இயல்புகளினால் ஈர்க்கப்பட்ட இரப்பர் போலக் கருதப்படுகின்றது.

நாற்பரிமாணவெளியில் இயங்கும் பொருட்கள் அவற்றின் இயக்கம் காரணமாக இயக்கசக்தியைக் கொண்டிருக்கின்றன. இவ்வியக்கசக்தியின் ஒரு பகுதியானது நாற்பரிமாணவெளியினுள் இழக்கப்படுகின்றது. நாற்பரிமாணவெளியினுள் இழக்கப்படும் சக்தியானது, நாற்பரிமாணவெளியின் ஊடாக எல்லாத்திசைகளிலும் வேகமாகப் பரவுகின்றது. இங்குதான் அந்த இயற்கையின் அழகினைக் காணக்கூடியதாக உள்ளது. நிலநடுக்கத்தின் விளைவாக கடலினுள் தள்ளப்பட் சக்தியானது அலைவடிவில், அதாவது சுனாமி எனும் ஆழ்ப்பேரலையாகச் செல்லது போலவே இயங்கும் வான்பொருட்களினால் வெளிவிடப்படும் சக்தியும் நாற்பரிமாணவெளியில் குற்றலைக-

## பேரண்டம் - 65

ளாகப் பயணப்படுகின்றன. இந்த அலை-களைத்தான் ஈர்ப்பலைகள் என்கின்றார்கள், விஞ்ஞானிகள். இந்த அலைகள் செல்வதை விளங்கிக் கொள்வதற்காக, வெற்றிடமான வெளியை அதன் இயல்புகளின் அடிப்படையில் ஒரு ஈர்க்கப்பட்ட இரப்பர் போலக் கருதுவது வசதியாக இருக்கும். சுனாமியின் போது எவ்விதம் நீர்த்துணிக்கைகள் அலை செல்லும் திசைக்குச் செங்குத்தாக அசைந்து சக்தியைக் கடத்துகின்றனவோ, அவ்விதமே நாற்பரிமாணவெளியின் நிகழ்வுப்புள்ளிகளும் ஈர்ப்பலைகள் செல்லும் திசைக்குச் செங்குத்தாக அசைந்து ஈர்ப்பலைகளைக் கடத்துகின்றன. ஆக வான்பரப்பில் இயங்கும் பொருட்களின் இயக்கசக்தியில் ஒருபகுதி ஈர்ப்பலைகளினால் நாற்பரிமாணவெளியில் ஈர்ப்புச் சக்தியாக இழுத்துச் செல்லப்படுகின்றது.

அடுத்து இந்த ஈர்ப்பலைகளின் இயல்புகளைப் பார்ப்போம். இதற்கும் கடலில் கடந்து செல்லும் சுனாமியலைகளையே வசதியாகப் பார்த்துக் கொள்வோம். இயற்கையின் இரகசியங்களை விளங்கிக் கொள்வதற்கு இயற்கையே பல எடுத்துக்காட்டுகளை எங்களுக்கு வழங்கியுள்ளது. ஆழ்கடலினுள் பயணப்படும் சுனாமி அலைகள் கடலின் மேற்பரப்பில் பெரிய உயர்ச்சிகளைக் காட்டுவதில்லை. அதேபோலவே ஈர்ப்பலைகளும் பேரண்டம் முழுவதும் பரவிக்கிடக்கும். நாற்பரி-மாணவெளியில் செல்லுகையில் பெரிய உயர்ச்சிகளையோ, பதிவுகளையோ ஏற்படுத்துவதில்லை. அப்படியொரு அலை செல்வதாக சாதாரணமாகத் தெரியாது.

இதுவரையில் ஈர்ப்பலைகள் இனம் கண்டுகொள்ளப்படவே இல்லை. இதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வீர்ப்லைகளை இனம் கண்டு கொண்டபின்னர் பேரண்டத்தின் பல இரகசியங்கள் வெளிவரும் என்பது ஆய்வாளர்களினது நம்பிக்கை.

ஈர்ப்பலைகள் இனம் கண்டு கொள்ளப்படாததால் அவை இல்லை என்று கருதமுடியாது. ஏனெனில் கொள்கையளவில் இந்த ஈர்ப்பலைகள் இருப்பது நிறுவப்பட்டுள்ளது. எமது தொழில் நுட்ப அறிவானது இன்னமும் அதற்குப் போதியதாக இல்லை என்பதே விளக்கமாகும். ஈர்ப்பலைகளின் அலைவீச்சானது மிகமிகச் சிறியதாக இருப்பதுவே இவற்றினைக் இனம் காண்பதில் உள்ள சிக்கலாகும். ஆயினும் 2020ம் ஆண்டுக்கு முன்னராக இந்த ஈர்ப்பலைகளை நாம் இனம் கண்டு கொள்வோம் என விஞ்ஞானிகள் உறுதியாகச் சொல்கின்றார்கள்.

ஈர்ப்பலைகள் ஒளியின் வேகத்தில் பயணப்படுகின்றன. நான் முன்னரே குறிப்பிட்டு இருந்தபடி, இயங்கும் வான்பொருளின் இயக்கசக்தியில் இருந்து சக்தியை இழுத்துக் கொண்டு ஈர்ப்பலைகள் செல்வதால், அந்த இயங்கும் பொருளின் இயக்கசக்தியின் அளவு குறையும். அதனால் அதன் கதி (அல்லது வேகம்) குறையும். நமது புவியானது கதிரவனைச் சுற்றி வருவது எமக்கெல்லாம் தெரிந்தது. அதனால் எமது புவியின் இயக்கம் காரணமாக ஈர்ப்பலைகள் வெளியிலே பரவுகின்றன. இதனால் எமது புவியானது சக்தியை இழக்க, அதன் கதிரவனைச் சுற்றிவரும் பாதையும் மாறுபடும். இதனால் மெதுமெதுவாக கதிரவனுக்கு கிட்டவாக வந்து இறுதியில் கதிரவனுடன் எங்களது புவி இணைந்துவிடும் என்பது ஈர்ப்பலைகளின் வழியேயான உண்மை. ஆனால் புவியினால் இழக்கப்படும் ஈர்ப்புச்சக்தி அல்லது வேகம் மிகமிகச் சிறியதாகையினால் அப்படியாக புவியானது கதிரவனுடன் இணைவதற்கு இன்னமும் பல மில்லியன் மில்லியன் மில்லியன் ஆண்டு செல்லும் எனக் கணித்திருக்கின்றார்கள். அதனால் அது குறித்து நாம் கவலை கொள்ளத் தேவையில்லை.

அடுத்த தடவையில் ஈர்ப்பலைகள் பற்றி இன்னமும் பார்ப்போம்.



**- கனி -**
416.261.1348
kani1vimal@hotmail.com

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்
*Tamil Writers' Association of Canada*

வெளியீடு !

சபா. அருள்சுப்பிரமணியத்தின்
சிறுவர்க்கான ஆக்கங்கள் - 3 (நூல்கள்)

'பாடலும் ஆடலும்' (சிறுவர் பாடல்கள்)
'சிறுவர் நாடகங்கள்' 'குட்டி நாடகங்கள்'
இடம்: கனடா கந்தசாமி கோவில் *733, Birchmount Road. Scarborough*
*( Eglinton & Birchmount)*

காலம்: யூன் 12, சனிக்கிழமை 2010 பி.ப. 5.30 மணி
சிறுவர் இலக்கியம் தொடர்பான காத்திரமான கருத்துரைகளை உள்வாங்க
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்.

TORONTO BUSINESS COLLEGE
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



COMPUTERIZED ACCOUNTING DIPLOMA
- EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள் ✓
- 2005 ஆண்டு JANUARY க்குப்பின் EI பெற்றவர்கள் ✓
- 5 வருடங்களுக்குள் MATERNITY BENEFITS பெற்றவர்கள் ✓

அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்கலாம்

DIPLOMA முடித்தவர்கள்

ACCOUNTS CLERK | PAYROLL CLERK
ACCOUNTS RECEIVABLE | ACCOUNTS PAYABLE
ACCOUNTS ASSISTANT | BOOK KEEPER

போன்ற பதவிகளைப் பெற்று
உங்கள் எதிர்காலம் மிளிர்வதைக் காண்பீர்
EI,WSIB,ODSP,WELFARE
பெறுபவர்கள் வரவேற்கப்படுகிறார்கள்

INSTRUCTORS
★ PUSHPA ★ SP
MORE THAN 20 YEARS OF TEACHING EXPERIENCE

CERTIFICATE COURSES
Buy One Get One Free
Windows,Key Boarding,Data Entry,Word,Excel,Power Point
Access,Outlook,Quick Books,Simply Accounting,Accpac
Certificate Will Be Issued On Successful Completion

416-291-5155

4465 SHEPPARD AVE. EAST #208(SHEPPARD & BRIMLEY) SCARBOROUGH
OACC PROUD MEMBER ontario association of career colleges
www.t-businesscollege.com t.businesscollege@gmail.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)

# கிரிமினல் குற்றங்களில் சாரதி அனுமதிப் பத்திரம் பறி கொடுத்தவர் வாகனம் செலுத்தினால்......?

## ONTARIO'S VEHICLE IMPOUNDMENT PROGRAME!

வீதியில் அதிவேகமாக, வரையறுக்கப்பட்ட வேகத்தினை விட சற்று அதிக வேகமாக வாகனம் செலுத்திய போது, பொலிசாரால் இடைமறிக்கப்பட்டார் அந்த மனிதன்! அவரது சாரதி அனுமதிபத்திரத்தினை தமது பொலீஸ் வாகனத்தில் உள்ள தகவல் இணையத்தளத்தில் பரிசீலனை செய்து பார்த்த போது என்ன ஆச்சரியம்! அந்த மனிதனின் சாரதி அனுமதி பத்திரம் வாகனம் செலுத்துவதில் ஏற்படும் கிரிமினல் குற்றச்சாட்டில் (Vehicle Rlated Criminal Code Offense) ஏற்கனவே ரத்து செய்யப்பட்ட நிலையில் வாகனம் செலுத்தியிருந்தார் என்பது தெரிய வந்தது. அவர் ஓட்டிச்சென்ற வாகனமோ அவரது தந்தையார் கனடாவின் வாடகை கம்பனி ஒன்றில் சில நாட்கள் வாகனம் செலுத்த என எடுத்து வைத்திருந்த ஒரு வாடகை கார்!

இன்னொரு நாள்! இன்னொரு சம்பவம்! நண்பன் ஒருவரின் வாகனத்தினை செலுத்திக் கொண்டிருந்த நேரம் ஏதோ துஷ்டகாலம், பிடிபட்டு விட்டார் அந்த இளைஞர்.

கிரிமினல் குற்றச்சாட்டில் அவரது சாரதி அனுமதி பத்திரம் ஏற்கனவே பறிமுதல் செய்யப்பட்டிருந்தது பிடிபட்டது.

சரி! இன்னொரு சம்பவம்!
வேலை செய்யும் இடத்து கம்பனி வான் ஒன்றினை பக்கத்தில் சிறு சொற்ப தூரமே ஓட்டி செல்ல வேண்டிய நிலைமை அந்த கம்பனி ஊழியருக்கு ஏற்பட்டது. 'நிறுத்துகை சைகை' (Stop Sign) ஒன்றில் பூரணமாக நிறுத்தவில்லையென்ற காரணத்தினால் பொலீஸ் உத்தியோகத்தர் இடைநிறுத்தி பரிசீலனை செய்த போது அவருக்கும் இதே நிலைமை!.

ஏற்கனவே கிரிமினல் குற்றச்சாட்டில் சாரதி அனுமதி பத்திரத்தினை பறிகொடுத்த நிலைமையில் வாகனம் செலுத்தக்கூடாது என்ற நீதிமன்ற தண்டனை காலத்தில் வாகனம் செலுத்தியது பிடிபட்டது.

(2002 ஆம் ஆண்டு பெறப்பட்ட புள்ளி விபரப்படி ஒன்ராரியோ மாகாணத்தில் 17,000 சாரதிகள் வாகனம் ஓட்டும் கிரிமினல் குற்றங்களில் சாரதி அனுமதி பத்திரத்தினை பறிகொடுத்தவர்கள் எனவும், இவர்களில் அதிகமானோர் மதுபோதையில் வாகனம் செலுத்திய கிரிமினல் குற்றசாட்டில் சிக்கியவர்கள் எனவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.)

சாரதி அனுமதி பத்திரத்தினை பறிகொடுத்தவர் வாகனம் செலுத்தக்கூடாது என்ற எச்சரிக்கையை மீறி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டுக்காக $5000 - $50,000 டொலர் வரை தண்டனை பணத்தினை எதிர்கொள்ள வேண்டிவரும் என்பது இன்னொரு விடயம்.

## கனடிய தகவல் தொடர் 126

> “ சாரதி அனுமதி பத்திரத்தினை பறிகொடுத்தவர் வாகனம் செலுத்தக்கூடாது என்ற எச்சரிக்கையை மீறி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டுக்காக $5000 - $50,000 டொலர் வரை தண்டனை பணத்தினை எதிர்கொள்ள வேண்டிவரும் என்பது இன்னொரு விடயம். ”

இங்கு முதலாவதாக வாகனமோட்டக்கூடாது என தடை செய்யப்பட்டவர் செலுத்திய வாகனம். 'ஒரு வாடகை கம்பனியின் கார்' இரண்டாவதாக குறிப்பிடப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையவர் செலுத்தி பிடிபட்டது ஒரு நண்பனின் கார்! அடுத்தவர் கம்பனி வான் ஒன்றினை செலுத்திய போது பிடிபட்டார்.

**இங்கு செலுத்தப்பட்ட வாகனம் எவருடையதாகவும் இருக்கலாம். ஆனால் கிரிமினல் குற்றங்களில் சாரதி அனுமதிபத்திரம் பறிமுதல் செய்யப்பட்ட ஒருவர் எவருடைய வாகனத்தினை செலுத்தினாலும் அது பிடிபடும் போது அந்த இடத்தில் வைத்து வாகனம் பறிமுதல் செய்யப்படல் வேண்டும். பறிமுதல் செய்யப்பட்ட வாகனம் 45 நாட்களுக்கு தடுத்து வைத்திருத்தல் வேண்டும். இந் நாற்பத்தைந்து நாளும் கடந்த பின்பே வாகன உரிமையாளர் வாகனம் கட்டி இழுத்து சென்ற செலவுகள் (Towing Charge) தடுத்து வைத்திருந்த கட்டணங்கள் (Storage Charge) என யாவும் செலுத்திய பின்பு வாகனத்தினை மீள் பெறலாம் என்பது பெப்ரவரி 16, 1999 இலிருந்து ஒன்ராரியோ மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும் இறுக்கமான சட்டமாகும். (இங்கு செலுத்த வேண்டிய கட்டணம் $1000 டொலருக்கு மேல் வாகன உரிமையாளருக்கு ஏற்படும்)**

இங்கு வாகன வாடகை கம்பனி தங்கள் வாகனம் பறிமுதல் செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த செலவு மற்றும் சகல இழப்புக்களையும் வாடகைக்கு பெற்றவரிடமிருந்து ஈடாக வழங்கப்பட்ட கடன் அட்டையிலிருந்து அறவிட்டு கொள்ளும்.

கம்பனியும் ஊழியரின் சம்பளத்திலிருந்து தனது நட்டத்தினை வெட்டிக்கொள்ளும் (ஒரு நன்மை! கம்பனி வாகனம் என்பதால் 15 நாட்களுக்கு மட்டுமே தடுத்து வைக்கப்படும் என்பது சட்டத்தில் வழங்கப்பட்ட ஒரு சலுகை ஆகும்.) வாகனத்தினை இரவல் வழங்கிய நண்பனின் நிலைமை?
தம்முடைய வாகனம் ஒன்றினை இன்னொருவர் செலுத்துவதனை அனுமதிக்கும் ஒருவர் முதலில் அவரது சாரதி அனுமதி பத்திரம் ஏதாவது கிரிமினல் குற்றசாட்டில் பறிமுதல் செய்யப்பட்டதா? என்பதனை பின்வரும் வழியில் முதலில் பரிசோதனை செய்து கொள்ளுங்கள் என மாகாண அரசு சகல வாகன உரிமையாளர்களையும் வலியுறுத்துகின்றது.

1.900.565.6555 என்னும் தொலைபேசிக்கும் அழைத்து சாரதி அனுமதிபத்திரம் இலக்கத்தினை பரிசோதனை செய்து பார்க்கும் போது $2.50 டொலர் கட்டணம் மட்டும் தொலைபேசி கட்டணத்தோடு மேலதிக கட்டணமாக அறவிடப்படும். இன்னொருவருக்கு தங்களின் வாகனத்தினை செலுத்த கொடுக்கும் போது வரும் பிரச்சனைகளுக்கு உரிமையாளரே தண்டனையினை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை இருப்பதாலேயே மாகாண அமைச்சு இவ்விசேட தொலைபேசி சேவையினை ஒழுங்கு செய்துள்ளது.

பின்வரும் இணையதளத்தினூடாகவும் ஒருவரின் சாரதி அனுமதி பத்திரம் தடை-செய்யப்பட்டதா என்பதனை வாகனம் செலுத்த அனுமதிக்க முன்பு துரிதகதியில் பரிசீலனை செய்து பார்த்து கொள்ளலாம்.

www.dlcheck.rus.mto.gov.on.ca

சாரதி அனுமதி பத்திரத்தினை பறிகொடுக்கும் கிரிமினல் குற்றங்களுக்கு பின்வரும் உதாரணங்களை குறிப்பிடலாம்.

1. மது போதையில் வாகனம் செலுத்துதல் (Impaird Driving)

2. ஆபத்தானதும் தாறுமாறான வாகன ஓட்டம் (Dangerous Driving)

வாகனமோட்டுவதில் குற்றங்கள், தவறுகள் என பிடிபடும் போது
- தண்டனை ரிக்கற்
- புள்ளிமதிப்பீட்டு இழப்புகள்
- சாரதி அனுமதிபத்திரம் ரத்து செய்தல்
- வாகனகாப்புறுதியின் விலை அதிகரிப்பு

என்பவையே பொதுவான தண்டனையாக கிடைப்பது வழமையாகும்.

ஆனால் வாகனம் செலுத்தும்போது மேற்குறிப்பிட்ட கிரிமினல் குற்றங்களில் மாட்டுப்பட்டால் கௌரவ கைவிலங்கு, சிறைத்தண்டனை, அனுமதிபத்திரம் பறிமுதல் என தண்டனைகளை எதிர்கொள்ள வேண்டிவரும்.

**சில நேரங்களில் வாகனத்தின் பறிமுதல் என்பது நியாயமாக தங்களுக்கு தெரியவில்லையானால் அதற்கு எங்கே நியாயம் தேடுவது?**

அதற்கும் ஒரு இடமுண்டு. பின்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு அல்லது இவ் இணையதளத்தில் விண்ணப்ப படிவத்தினை பதிவு இறக்கம் செய்து நிரப்பி பின்வரும் முகவரியில் உள்ள அரசின் அப்பீல் மன்றத்திற்கு $100 டொலர் கட்டணத்துடன் மனு செய்ய வேண்டும். அதன் விலாசன் பின்வருமாறு.

LICENSE APPEAL TRIBUNAL
01, ST. CLAIR AVE. WEST
12TEH FLOOR
TORONTO, ONT M4V 1K6

தொலைபேசி - 416.314.4260 அல்லது 1.800.255.2214
இணையதளம் - www.Lat.Gov.on.ca

இவ் அப்பீலில் தங்கள் பக்கம் நிரபராதி என்ற நியாயம் கிடைத்தால் இதனால் தங்களுக்கு ஏற்பட்ட செலவுகளை திரும்ப மீள் பெறலாம்.

இங்கு இன்னொருவருக்கு தங்கள் வாகனம் செலுத்த அனுமதிக்க முன்பு எச்சரிக்கை தேவை!

ஒருமுறை அவரது சாரதி அனுமதி பத்திரத்தினை வாங்கி ஒரு பரிசீலனை!



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# உடலுக்கும் உயிருக்கும் யோகா

# ஏன் அனைவரும் யோகாசனம் செய்ய வேண்டும்?

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

எந்த செயலுக்கும் காரணம் தேடும் காலம் இது. ஆண், பெண், இளைஞர்கள், முதியவர்கள், ஏழை, பணக்காரன், படித்தவன், படிக்காதவன் ஒவ்வொருவரும் தத்தமது பிரச்சினைகளுக்காக காரணத்தை அலசும் பழக்கம் பரவிவிட்டது. இந்த உண்மை யோகாசன பயிற்சிகளுக்கும் பொருந்தும்.

யோகாபற்றி அறிவும் விளக்கமும் மக்களிடம் பரவினால் மட்டும் பயன் ஏதுமில்லை. ஏதெனில் பெரும்பாலானோர் இப்பயிற்சியைப் பழக ஆர்வம் காட்டாததற்கு பல காரணங்களை இவர்கள் கூறுகின்றனர்.



1. எனக்கு இதில் ஆர்வமில்லை. எனவே இதனை பழக விரும்பவில்லை
2. தினசரி கடினமாக வேலை செய்கிறேன். இதுவும் உடற்பயிற்சிதானே.
3. வேலை முடிந்தபின் களைப்பாக இருக்கிறது. யோகா செய்ய உடம்பில் தெம்பு இல்லை.
4. யோகா செய்ய கொஞ்சமும் நேரம் கிடைப்பதில்லை.

இந்த சமாதானங்கள் சரியா, தவறா என்பதனை முதலில் பார்ப்போம்.

ஒவ்வொருவரும் தமது விருப்பு, வெறுப்பு என்று பிடிவாதமாக எல்லா விடயங்களிலும் நடக்க முற்பட்டால் வாழ்க்கை முன்னேற்றம் தடைப்படும். உடல் - மனம் ஆரோக்கியமாக இருந்தால் தான் எந்த வேலைகளையும் மற்றவர்களைவிட துரிதமாகவும் துல்லியமாகவும் செய்ய முடியும்.

யோகாசனங்கள் செய்வதால் உடல் ஆரோக்கியமும் புத்துணர்ச்சியும் உருவாகி உடலும், உள்ளமும் ஒன்றாக இணைந்து செயல்படும்.

ஒரு மனிதனுக்கு உணவு, தண்ணீர், தூக்கம், ஆடைகள், செய்யும் தொழில்கள் எவ்வளவு முக்கியமானதோ அதேபோல தினசரி யோகாசன பயிற்சிகளும் முக்கியமானது.

அடுத்து தினசரி வேலைகளிலே அதிக உடற்பயிற்சி கிடைத்துவிடும் என்பதும் சரியல்ல. அவை ஒரு சில உடல் உறுப்புகளுக்குத்தான் பயிற்சியாக



அமைகின்றதே தவிர அனைத்து உடல் உள்உறுப்புகளுக்கும் பயிற்சியாக அமையாது. ஆனால் ஒரு சில யோகாசனப் பயிற்சியின் மூலம் உடலிலுள்ள அனைத்துப் பாகத்திலுமுள்ள எலும்புகள் நரம்புகள் தசைகள் என்பன பூரண பலன்களை அடைகின்றது. அத்துடன் இளமையைக் காத்துக் கொள்ளவும் முதுமையின் ஆதிக்கத்தைத் தள்ளிப்போடவும் இந்த யோகாசனப் பயிற்சி உதவுகின்றது.

பலர் நினைத்துக்கொள்ளலாம் தாம் வேறு விளையாட்டுகள் உதாரணமாக கால் பந்து, கூடைப்பந்து, துடுப்பாட்டம் மற்றும் உடற்பயிற்சி நிலையங்களுக்குச் செல்வதால் யோகா தேவையில்லை என்று. ஆனால் அவற்றுக்கும் யோகாசனப் பயிற்சிக்கு மிடையில் நிறைய வேறுபாடுண்டு.

யோகாசனப் பயிற்சிக்கும் உடற்பயிற்சிக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள்.

## யோகா பயிற்சிமுறை

1. முக்கியமாக நரம்பு மண்டலத்தைக் கட்டுப்படுத்தி உடலை சரியான எடைக்கு கொண்டு வருகிறது. அதனால் உடல் சரியான எடையில் இருக்கிறது.

2. தசைகளின் இறுக்கத்தைத் தளர்த்தியும் ஓய்வு கொடுக்கின்றது. அதனால் அவை சரியான ரத்த ஓட்டம் பெறுகிறது.

3. யோகாவில் உடல் சக்தி மிககுறைவாக செலவிடப்படுகின்றது.

4. உடல் வலிமையையும் வனப்பையும் ஒரே சீராக வைத்து வாழ்நாள் முழுவதும் காக்கிறது.

5. இப்பயிற்சியைச் செய்ய வயது வரம்பு, ஆண், பெண் பேதம் ஒரு பொருட்டாகாது.

6. இரத்த ஓட்டம் உடல், உள் உறுப்புகளுக்கு செலுத்தப்பட்டு உடலின் அனைத்துப் பகுதிகளும் வலுவடைகின்றது.

7. மன அமைதி உடல் ஓய்வு, உடல் ஆரோக்கியம் என்பன கிடைக்கிறது.

## உடற்பயிற்சி

1. தசைகளை வலுப்படுத்த அதிகமான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வலுவான தசைகள் உருவாகின்றது.

2. தசைகள் இறுக்கப்பட்டு எப்போதும் அவைகள் மிகவும் விறைப்பாக இருக்கும்.

3. உடல் சக்தி அதிகமாக செலவிடப்படு கின்றது. குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும்தான் காக்கிறது. வயது ஆக ஆக உடல் வலு குன்றி பலயீனமடைகின்றது.

4. இப்பயிற்சி செய்ய ஒரு குறிப்பிட்ட வயதும், ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியான பயிற்சிகள் உண்டு.

5. இரத்த ஓட்டம் தசைகளுக்குச் செலுத்தப்பட்டு வெளி உறுப்புகள் மட்டுமே வலிமை பெறுகின்றது.

6. முடிவில் உடல் சக்தி முழுவதும் செலவழிந்து உடல் மனம் சோர்வடைகின்றன.

ஒரு குறிப்பிட்ட ஆசனங்களையாவது தினமும் 20 நிமிடங்களாவது பழகி வந்தால் 2 வாரங்களிலேயே முன்னேற்றத்தை உணர முடியும்.




ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்




Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

YOGA - MEDITATION CLASSLESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

Dr. F. சிற்றம்பலம்
(விஷ வைத்திய சிந்தாமணி)

## கடந்த இதழ் தொடர்ச்சி

ஒருவருக்கு விஷம் தீண்டிவிட்டது என்றாலே விஷம் உடலில் சேராது விட்டாலும் பயம் உடலை பல வகையில் பாடுபடுத்தும். இதனை நாம் நோயாளியின் மாறுபாடுகளினாலும் வேறுபாடுகளினாலும் அறியலாம். ஆனபடியால் பயத்தால் ஏற்படும் மாறுபாடுகளை அவதானிப்போம்.

1 படிப்படியாகச் சோர்வும், மயக்கமும் உண்டாகும்.
2. நாடித்துடிப்பு நன்றாக இருக்கும்.
3. உடனடியாக தன்னறிவு கெட்டுவிடாது.
4. சிறிது தூரம் செல்ல முடியும்.
5. முகம் சிறிது சிறிதாக நீலம் பாய்ந்தது போல் வரலாம்.
6. உடலில் வெப்பநிலை மாறுபடாது.
7. மூச்சுத்திணறிக் கொண்டு மூச்சு விடுவார். உடலில் பிரம்பு கொண்டு அடித்தால் தடித்துவிடும்.
8. ஐஸ் கட்டியையோ, குளிர்ந்த நீரையோ ஊற்றினால் உடலில் புல்லரிக்கும் நிலை தோன்றும்.

உண்மையாக விஷப்பாம்பால் கடித்து விஷம் ஏறினால் பின்வருவனவற்றை அறியலாம்.
1. காயப்பட்டவர் திடீர் என்று சோர்வுண்டாகி மயங்கிவிடுவார்.
2. தன்னறிவற்று நிற்க முடியாமல் போகும்
3. முகம் திடீர் என்று வெளுத்துவிடும்.
4. தேகம் குளிர்ந்துவிடும்.
5. நாடி தெளிவாக இருக்காது.
6. இயல்பாக மூச்சு விட முடியும்.
7. கடிவாயில் வீக்கமும் நிறம் மாறுதலும் உண்டாகும்.
8. கடிவாயில் எரிச்சல் உண்டாகும்.
9. வாந்தி வரும், வாயால் வெள்ளையாக நுரை வரவும் கூடும்.
10. உடல் முழுவதும் அதிக வியர்வை ஏற்படும்.

கடிவாயைக் கொண்டு நன்கு அவதானி த்தால் விஷப் பாம்புக்கடியா? அல்லது விஷமில்லாத பாம்புக்கடியா என்று அறியலாம். அது எப்படி? என்பதைப் பார்ப்போம்.

1. கடிபட்ட கடிவாயில் ஒன்று அல்லது இரண்டு துவாரம் இருக்கும். அது பேப்பர் துளைக்கருவிபோல் இருக்கும்.

2. கடிவாயில் தொடர்ந்து இரத்தம் கசிந்து கொண்டே இருக்கும். (கடிவாயைச் சுற்றி இரத்தம் உறைந்து காய்ந்திருக்கும்)

3. கடிவாயைச் சுற்றி தடித்து நிறம் மாற்றம் ஏற்படும்.

4. கடிவாயைச் சுற்றி வீக்கம் உண்டாகும். இப்படியான மாற்றம் ஏற்பட்டால் கடித்த பாம்பு விஷப் பாம்பு என்று திடமாக நம்பலாம்.

இந்த மாற்றங்களை சுலபமாக நமது மனத்திரையில் வைத்துக்கொள்வதனால் கீழ்க்கண்ட செயல் கொண்டு தீர்மானிக்கலாம். ஆங்கிலத்தில் இதனை P.O.D.S. என்றும் தமிழில் ப.க.நி.வீ. என்று வைத்துக் கொள்ளலாம். ஆங்கிலத்தில் P - என்றால் Puhctuse, O - என்றால் Ozing, D - என்றால் Discoloration, S - என்றால் Swelling, என்று கொள்ளலாம்.

இதையே ப - என்றால் பஞ்சர், க - என்றால் இரத்தக்கசிவு தொடர்ந்திருக்கும் நி - என்றால் நிறம் கடித்த காயத்தை சுற்றி நீலம் போன்ற நிறம் ஏற்படலாம். வீ - என்றால் கடிபட்ட பகுதி வீங்கிக் காணப்படும். இப்படியான மாற்றங்கள் கடிவாயில் காணப்படாவிட்டால் விஷமற்ற பாம்புக்கடி எனக் கொள்ளலாம். பாம்பு கடித்த காயத்தை முகர்ந்து பார்த்து பாதிரிப்பூ வாசனை, உழுந்து அவித்த வாசனை, புல்லாம்தீ பூ பழுத்த வாசனை, தாழம்பூ வாசனை இப்படியாக வாசனை களைக் கொண்டும் விஷப் பாம்பா அல்லது விஷம் அற்ற பாம்பா என்று அறியலாம். கடியண்டவருக்கு கசப்பான (வேப்பம் இலை) உறைப்பான மிளகாய் போன்றவற்றை சப்பக்கொடுத்தால் அவற்றின் சுவை மாறபாடாகவும், வேறுபாடாகவும் இருந்தால் விஷப்பாம்பாக இருக்கலாம் என உணரலாம். உடனடியாக விஷம் தீண்டியவருக்குத் தக்க சிகிச்சைசெய்யப்பட வேண்டும்.

> “ பாம்புகள் பலவகை உடையனவாக இருக்கின்றன அந்த வகைக்கேற்ப விஷத்தின் தன்மைகளும் வித்தியாசமானதாகக் காணப்படுகின்றது. ஆனால் எல்லாப் பாம்புகளிலும் கொடிய விஷத்தைக் கொண்டது நாகபாம்பின் விஷமாகும். இது உடன-டியாக இரத்தத்தில் சுவறி மரணத்திற்குக் காரணமாகும். ”

பாம்புகள் பலவகை உடையனவாக இருக்கின்றன அந்த வகைக்கேற்ப விஷத்தின் தன்மைகளும் வித்தியாசமான-தாகக் காணப்படுகின்றது. ஆனால் எல்லாப் பாம்புகளிலும் கொடிய விஷத்தைக் கொண்டது நாகபாம்பின் விஷமாகும். இது உடனடியாக இரத்தத்தில் சுவறி மரணத்திற்குக் காரணமாகும்.

பாம்புகளில் எட்டு வகைகள் உண்டு. அவை படம் எடுத்து ஆடும். பாம்பின் படத்தைக் கொண்டும் இன்ன சாதி நாகம் எனக்கண்டறியலாம். அதன் படத்தின் தோற்றம், படத்தில் உள்ள குறிகள், நிறங்கள் அவை சீறும் வகைகள் இவற்றைக் கொண்டு நாகபாம்பு எனக் காணலாம். இந்த நாகபாம்புகளில் எட்டு வகைகள் உண்டு என்பதை பண்டைய ஏடுகளாலும், விஷ வைத்தியர்களின் அநுபவக்குறிப்புக்களினாலும் அறியலாம். அவையாவன, வாசுகி, தக்கன், கார்க்கோடான், பற்பன், மகாபற்பன், சங்கபாலன், குளிகன், அனந்தன் இவைகள் அட்ட நாகங்கள் என ஆருட ஏடுகளில் காணப்படுகின்றன.

இவை ஒவ்வொன்றின் பேதங்களையும் ஆருட ஏடுகளில் காணலாம். நாக பாம்புகள் முட்டையிட்டு குஞ்சு பொரித்து குட்டிகள் வெளிவந்து ஊர்ந்து திரியும். அப்பொழுது தாய்பாம்பு தனது புற்றிலையோ, மரப்பொந்துகளிலோ சென்று தங்கி இவற்றை விழுங்கி விடும். அப்பொழுது சில குட்டிகள் தப்பி ஓடும். ஓடும் பொழுது பருந்து, மயில், கீரி போன்ற பாம்பின் எதிரிகளால் இரையாக்கப்பட்டும், மனிதர்களால் அடித்துக் கொல்லப்பட்டும் அழிகின்றன. இப்படி அழிவுக்குத் தப்பிய சில குட்டிகளே வாழத்தலைப்படுகின்றன. இவைகளில் காணப்படும் விஷம் அவற்றின் தற்பாதுகாப்புப் பொருளாகும். பகைவர் என்று தீண்டும்போது விஷம் கடிவாய் மூலம் உள் செலுத்தப்பட்டு விஷம் நோயை உண்டாக்கி மரணத்திற்கு வகையாக்கு கின்றது. இது நாகபாம்பின் செயல்பாடாகும். நாகபாம்போ எல்லாப் பாம்பு விஷத்திலும் கொடிய விஷமாகும். உடனடியான தக்க சிகிச்சை முறைகளால் கொடிய விஷத்தின் வீரியத்தை அடக்கி மரணத்திலிருந்து தப்ப சித்த வைத்தியத்தில் சிகிச்சைகள் உண்டு. இறைவனின் சிருட்டிகளாக உள்ள மூலிகைகளைக் கொண்டு ஆக்கி மருந்துகள், துவாலைகள் ஒத்தணங்கள் கண்கலிங்கள், தலையை மெல்லிதாகக் கீறிச் செலுத்தும் மருந்துகள் (குடோரி) போன்ற சிகிச்சை முறைகளால் நாக விஷத்தை நீக்கி நோயாளியைப் பிழைக்கச் செய்ய முடியும்.

நாக பாம்புகளை விட கொடிய விஷமுடைய 1. விரியன் 2. புடையன் 3. சுருட்டை 4. மூக்கன் 5. வழலை 6. கோடரிப்பாம்பு 7. பச்சைப்பாம்பு 8. மாபிலாப்பாம்பு 9. மண்ணுளிப்பாம்பு 10. பூ நாகங்கள் 11. கண்குத்திப்பாம்பு 12. சாரைப்பாம்பு 13. கடல் பாம்புகள் இப்படியாக பல வகைப் பாம்புகள் உண்டு.

கிட்டதட்ட இலங்கையில் 64 வகைகள் இருப்பதாக விஷ வைத்தியர்கள் கூறுகின்றார்கள். இந்த 64 வகைகளில் ஒவ்வொரு வகையிலும் பல பாம்புகள் இருப்பதாக ஆருட சாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றன.

உதாரணமாக விரியன் பாம்பு வகைகள்.
1. பெரு விரியன் 2. சிறு விரியன் 3. பொரி விரியன் 4. செவ்விரியன் 5. கொள்ளி விரியன் 6. கண்ணாடி விரியன் என ஆறு வகையாகும். விரியன் பாம்புகள் மற்றப் பாம்புகளைப்போல் முட்டை இட்டு இனவிருத்தி செய்கின்றதல்ல. தாய் பாம்பு சூல் கொண்டு பருவம் வந்தவுடன் விரிந்து குட்டிகள் வெளிவரும். அவை உடனடியாக ஊரவும், ஓடி மறையவும் கூடியதாக இருக்கும். இவற்றின் விஷமும் கொடியதாகும்.

புடையன்: 1. ஊது புடையன் 2. சிறு புடையன் 3. திமிரு புடையன் 4. வரிப்புடையன் என நாலு வகையாக இருக்கின்றது.
சுருட்டை வகை: 1. சுருட்டை 2. செஞ்சுருட்டை 3. நெடுங்கழுத்துச்சுருட்டை 4. கருங்கழுத்துச் சுருட்டை இப்படியாக நாலு வகையாகும்.

இப்படியாகப் பாம்புகளின் சாதிகளையும் பிரிவுகளையும் ஆராயலாம். தற்பொழுது எங்களுக்கு வேண்டியது வி்ம் தீண்டினால் தீண்டப்பட்டவரை எப்படிக் காப்பாற்றுவது என்பதும் அந்த விஷத்தை நீக்க உடன-டியாகக் கொடுக்கும் மருந்துகள் மூலிகைகள் துவாலை, ஒத்தனம், கண் கலிங்கம் குடோரி போன்று செய்யக்கூடிய மருத்துவத்தன்மைகளை அறிந்திருத்தல் நல்லதாகும். அவற்றுள் எல்லா பாம்புக் கடிக்குக் கொடுக்கக்கூடிய பொது மருந்துகள் எவையென சித்தர்களும் முனிவர்களும் ஏட்டுப்படி இயம்பியவற்றைப் பார்ப்போம்.
விஷம் தீண்டியவருக்கு உள்ளுக்குக் கொடுக்கும் மாத்திரை

1. குப்பைமேனி 2. கள்ளி 3. அவுரி 4. கருநொச்சி 5 அழிச்சில் 6. காஞ்சிரை இவைகளின் வேர்களை சமமாக எடுத்தல். இவைகளின் வேருடன் கார்த்திகைக்கிழங்கும் சமனிடை எடுத்துச் சிறுபிள்ளையின் சிறுநீர் விட்டு அரைத்து சுண்டங்காய்ப்பிரமாணம் அளவு உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு ஒரு மாத்திரையை வெற்றிலையில் வைத்து நன்றாகப் பற்களினால் மென்று விழுங்கக் கொடுத்தால் விஷம் இறங்கும். வெற்றிலையை மென்று கொள்ள முடியாமல் இருந்தால் வெற்றிலைச் சாற்றில் குளிசையை உரத்துக் கொடுக்கலாம்.

கடிவாயில் கட்டும் மாத்திரை: 1. திருகடுகம் 2. வெள்ளைச்சீரகம் (பெருஞ்சீரகம்) 3. கருஞ்சீரகம் 4 நாபிக்கிழங்கு 5. பேய் பீக்கம் விதை 6. முருங்கை விதை 7. மஞ்சள் 8. கடுகு 9. வசம்பு 10. சலவைக்கல் 11. வெங்காயம். 12. மனோசிலை 13. பெருங்காயம் 14. பாதரசம் 16. மயில்துத்தம்

இந்தச் சரக்குகள் ஒவ்வொன்றும் ஒரே அளவில் எடுத்துத் தூளாக்கிப் பின்னர் எலுமிச்சம் (தேசிக்காய்) சாற்றில் அரைத்து இரண்டு நாட்கள் சென்றவுடன் தேன்விட்டு அரைத்துச் சிறு மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி கண்ணாடிப் பாத்திரத்தில் அல்லது மண்சாடியில் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும். விஷம் தீண்டி வந்தவருக்கு கடிவாயில் ஒரு மாத்திரையை வைத்துப் பிடித்தால் அது ஒட்டிவிடும். நஞ்சு இருக்கும்வரை விழாது. நஞ்சு இல்லை என்றால் தானே விழுந்துவிடும். விஷம் தீண்டப்பட்டவர் பல் கிட்டி வாய் திறக்க முடியாத நிலையில் இருந்தால் தீண்டப்பட்டவரை வாழை மடலில் கிடத்தி வாழை மட்டைச்சாறு கொடுத்தால் விஷம் முறிந்து சுகமும் காணலாம்.

ஒத்தடம்: விடம் தீண்டப்பட்டவருக்குத்

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013



# எம்மை...

தலைப்பாரமாகவும் தலை விறைப்பாகவும் இருந்தால் 1. தயிர் 2. பூமத்தை 3. வெற்றிலை 4. எருக்கிலை 5. உள்ளி 6. வேர்க்கொம்பு 7. குப்பைமேனி 8. உத்தமாகாணி இவைகளில் ஓரளவு எடுத்து துவைத்துப் பொட்டலமாகக் கட்டி பானையில் (வண்டுகட்டி) வாயில் முடிச்சீலை கட்டி புட்டவியல் முறைப்படி அவித்து எடுத்து தலையில் இருந்து சர்வமும் ஒத்தடம் கொடுத்தால் விஷமிறங்கும். சுகம் பெற வழியுண்டு.

1. நசியம்: வெற்றிலை, மிளகு, உப்பு இவை மூன்றையும் வெற்றிலைச் சாற்றில் கலந்து இரண்டு நாசியிலும் (மூக்கில்) விட்டு வாயால் அல்லது இலைகளால் சுருட்டி குழலை வைத்து நன்றாக ஊதினால் விஷம் தீண்டப்பட்டவர் விழித்து எழுந்திருப்பர்.

2. மிளகு, குன்றுமணி, கழச்சி பருப்பு, உள்ளி, உப்பு, வசம்பு, பெருங்காயம். இவை எல்லாவற்றையும் சமனிடை எடுத்து சிறுநீர் (மூத்திரம்) விட்டரைத்துப் பிழிந்து மூக்குத்துவாரத்தில் நசியமிடலாம்.

3. முருங்கை இலை (முள் முருங்கை), தும்பை, எருக்கிலைப்பருப்பு, மிளகு, நவச்சாரம் இவைகளை சமமாக எடுத்து வெற்றிலை சாற்றில் தட்டிப்பிழிந்து நசியமிடலாம். மயக்கம் தெளிந்து எழுந்திருப்பார்.

சகல விஷத்திற்கும்: 1. கலிங்கம் இந்துப்பு, சூதம் (இரசம்) மேக்குறி, பெருங்காயம் இவைகளை சமனாக எடுத்துப்போய் பீர்க்கம் சாற்றில் அரைத்து மாத்திரை செய்து வெற்றிலைச் சாற்றில் உரைத்து கண்ணில் கலிங்கமிடப் பல விஷங்களும் இறங்கும்.

2. கலிங்கம்: இரசம் வாளம், துத்தம் அரிதாரம், வெங்காயம் இவற்றைச் சமனாக எடுத்து இரசத்தை மட்டும் பேய் பீர்கச் சாற்றுக்குள் விட்டு கொதிக்க வைத்து எடுத்து எல்லாவற்றையும் சிறுநீரில் விட்டு அரைத்து மாத்திரை (குளிகை) யாக்கி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு விஷம் தீண்டி மயங்கி வந்தவருக்கு உமிழ் நீரில் (எச்சில்) உரைத்துக் கண்ணில் போட்டால் விஷம் இறங்கி வழித்தெழுவார்.

துவாலை (பூச்சு)
கீழ்க்காய் நெல்லி, வாதமடக்கி, துளசி, முள்முருங்கையிலை, உத்தமாகாணி. இவைகளின் இலைகளை இடித்துப் பிழிந்து சாறு எடுத்து கொதிக்க வைத்து விஷம் தீண்டிய இடத்திலுள்ள வீக்கத்திற்குப் பூசவும். வீக்கமும் வற்றிச் சுகம் வரும்.




இதுவரை குறிக்கப்பட்டவை எல்லாம் பொதுவாக எல்லாப் பாம்புகளுக்கும் பொருந்தலாம். ஆனால் சிலவகைப் பாம்புகள் கடித்தால் விஷம் உடனடியாக உடலில் பரவாது. படிப்படியாகப் பரவி உடல் உறுப்புக்களைத் தாக்கிப் பலவிதமான வருத்தங்களைத் தந்து இரத்தத்தில் விஷம் மெல்ல மெல்லப்பரவி ஆபத்தை உண்டாக்கும்.

உதாரணம்
இரத்த விரியன், இரத்தப்புடையன் கடித்தால் வாயால், மூக்கால், மலம், சலம், மயிர்த்துவாரங்கள் இவற்றால் இரத்தம் ஒழுகிக்கொண்டேயிருக்கும். பார்ப்பதற்குப் பயங்கரமாகவும், விகாரமாகவும் இருக்கும். ஆனால் இவற்றைச் சுலபமாகவும், அதிசயப்படக்கூடிய முறையாகவும் இருக்கும். இதற்கு கசாயம், பூச்சு, மூலிகைச்சாறு என்பவற்றால் சுலபமாக நீக்கலாம்.

கசாயம்
வெள்வேலம் பட்டையை இடித்து பசுமோரில் ஊறவைத்து வடித்து மூன்று நேரமும் 2 அவுன்ஸ் வீதம் பருகக் கொடுக்க வேண்டும். நெருஞ்சி இலையைச் சிறுநீர் விட்டு இடித்துப்பிழிந்து 3 அவுன்ஸ் வீதம் குடிக்கக் கொடுக்கலாம். அறுகம் பல் வேரை இடித்துப் பழிந்து பசும் பால் கலந்து குடிக்கக் கொடுக்கலாம்.




Ashok Travels Ltd.
416-298-4500
Please try our new service, we are ready to serve you better. We speak your language
Thank you for Your Support
To Sri Lanka
From: $752* +Tax
To India
From: $660* +Tax
SRILANKAN AIRWAYS
QATAR AIRWAYS
JET AIRWAYS
Please call us with the confidence for most competitive rates
*Above fares are for special seats availability. Certain conditions and restrictions apply.
Prices are subject to availablity of the seats. Taxes vary from airlines to airlines.
Above fares are for Jetairways. Seats are very limited. Call right now for our specials.
The taxes are between $400-$600.
TICO 50018127
IATA
info@ashoktravel.com
www.ashoktravel.com


EUROKERB & INTERLOCKING
Operated By: GM VIDI
call mike for free estimate
gmvidi@rogers.com
1035 Brock Rd, Unit 5B, Pickering, ON L3W-1T7 905.201.1465 416.903.4509
FENCE & DECK NEW / REPAIRS
COFFEE CREEK
NEW YORK
MUSKOKA GRANITE
EXECUTIVE
TERRA COTTA
Antique Bronze
Cinnamon Shale
PAVER COLORS
• Driveways
• Walkways
• Pool Decks
• Interlocking Repairs

# மாபெரும் மலிவு விற்பனை

**Truck Lot Sale**

**June 11, 12, 13**

**வெள்ளி சனி, ஞாயிறு நாட்களில்**

| | | |
|---|---|---|
| Laminate | 8.3 | 89¢ |
| Laminate | 12.3 | $1.29 |
| Laminate | 15.3 | $1.69 |
| Laminate | 18.3 | $1.89 |

**Hard Wood Oak $3.49**
**Hard Wood Maple $3.49**

Laminate
வாங்குபவர்களுக்கு
Under pad இலவசமாக
வழங்கப்படும்.

- *Coustums Oak all Maple Special Price*
- *Bambu Hardwood $2.49 sq.ft*
- *Laminate over 300 in store selections*

## Canadian Design Wood Flooring

Varathan (Raja) - Cell: 647.929.2345
Tel.: 416.269.0362
1600 Midland Ave. ( Midland & Lawrence)

ஜெனிஷா ரெயிலஸ் & டிசைன்ஸ்
*Jenisha Tailors & Designs*
Saree Blouses, Salwar Kameez, Party-Frocks,
Saree pleetting, Bridal Dressing, Facial, Threading
போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய அழையுங்கள்
குறித்த நேரத்தில்
குறைந்த செலவில் நிறைந்த சேவை
416.298.6917 / 416.802.1039/ 519.748.0553
1560 Brimley Road, #216, Brimley & Ellesmere / 920 Marlmeadow Crt., Kitchener, ON



REAL ESTATE வகுப்புகள்
ரொறொன்ரோவில் இலவச
ஆதனவியல்
(*Real Estate*) வகுப்பு
நடைபெறுகின்றது.
தொடர்புகளுக்கு: *Vanessa -*
*416.321.6969*











# டிஸ்னி உலகம் - புளோரிடா

# அமெரிக்கப் பயணம் - 7



ஜியோஜியாவிலிருந்து நேரே புளோறிடாவுக்குப் போனோம். அங்கு அதிகாலையில் சென்று ஒரு ஹோட்டலில் தங்கியபின் அடுத்த நாள் டிஸ்னி உலகிலுள்ள பல்வேறு இடங்களுக்கும் குழுக்கள் குழுக்களாகப் பிரிந்து சென்றோம். நாம் தங்கியிருந்த இடத்துக்கும் டிஸ்னி உலகுக்கும் 12 மைல் தூரமே இருந்தது.



## - துறையூரான் -

இனி இதன் வரலாறு பற்றிப் பார்ப்போம். உலகிலேயே மிகப் பெரியதும், அதிக பயணிகள் செல்வதற்குமான உலகப் பிரசித்தி பெற்ற இடமாக இது திகழ்கிறது. இது 40 சதுர மைல் பரப்பளவையும் நான்கு விநோத பூங்காக்களையும், இரு நீர்ப் பூங்காக்களையும், 24 ஹோட்டல்களையும் பிற பொழுதுபோக்கு நிலையங்களையும் கொண்டுள்ளது. இது புளோறிடாவிலுள்ள தென்மேற்குப் பகுதியான ஓலான் டோவில் அமைந்துள்ளது. இது வோல்ட் டிஸ்னி கம்பனிக்குச் சொந்தமான ஹோல்ட்டிஸ்னி பூங்காக்கள் விடுதிகள் நிறுவனத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இது முதன்முதலில் மஜிக் கிங்டம் எனும் விநோத பூங்காவுடன் ஒக்ரோபர் 01, 1971 இல் திறக்கப்பட்டது. இதன் பின் எப்கொட் (ஒக்ரோபர் 1982) டிஸ்னி ஹொலிவூட் ஸ்ரூடியோஸ் (மே 01, 1989) டிஸ்னி விலங்கு இராட்சியம் (ஏப்ரலில் 22, 1998) ஆகிய பூங்காக்கள் கட்டப்பட்டன.

## வரலாறும் வளர்ச்சியும்

டிஸ்னி லாண்ட் கலிபோணியாவிலுள்ள அனஹெய்ம் என்ற இடத்தில், 1959 இல் வோல்ற்ட் டிஸ்னி என்ற கேலிச் சித்திரம் வரைபவரால் ஆரம்பிக்கப்பட்டது. இதைச் சுற்றிலும் பல வியாபார நிலையங்கள் ஆரம்பித்தன. டிஸ்னிக்குப் பிடிக்காததால் மிகவும் விசாலமான இன்னோர் இடத்தைத் தேடிக் கொண்டிருந்தார். நவம்பர் 22, 1963 இல் ஒலாண்டோவுக்குச் சென்றார். அங்கு நிர்மாணிக்கப்பட இருந்த பெருந்தெருக்கள், விமான நிலையம் ஆகியவற்றைப் பற்றி அறிந்ததும், அந்த இடத்தைத் தெரிவு செய்தார். எனவே அங்கு நிலம் வாங்கினார். ஆனால் தனது கனவு நனவாகுமுன்னர் 1966 டிசம்பரில் இறந்து போனார்.

தனியாரும், பிறநிறுவனங்களும் அயலில் உள்ள நிலங்களை வாங்காமல் இருப்பதற்காகப் பல போலி நிறுவனங்களின் பெயரில் மொத்தமாக 27,400 ஏக்கர் நிலத்தை டிஸ்னி வாங்கினார். முதலாவதாக 5 ஏக்கர் நிலம், ஐபோர் நிறுவனத்தால் ஒக்ரோபர் 1964 இல் வாங்கப்பட்டது. வோல்றட் டிஸ்னி இறந்த பின்னர் அவரது சகோதரர் றோய் டிஸ்னி, ஒலாண்டோவின் முதலாவது பூங்காவின் ஆரம்ப வேலைகளை மேற்பார்வை செய்தார். டிஸ்னி நிறுவனத்துக்கு றொபேட் ஹாட் என்பவர் கட்டிடக்கலை நிபுணராக வேலை பார்த்தார். இவர் பெரிய திட்டங்களை உருவாக்கிக் கட்டுவிப்பதில் அனுபவம் பெற்றவர்.

பெப்ரவரி 1967 இல், றோய் டிஸ்னி ஒரு பத்திரிகையாளர் மாநாட்டை ஒழுங்கு செய்து, வோல்ற் இறக்குமுன்னர் எவ்வாறு அவர் எப்கொட் (Epcot) என்ற பூங்கா எவ்வாறு அமைக்கப்பட வேண்டும்மெனக் கூறியிருந்த ஒரு சலனப்படத்தை (Film) எல்லோருக்கும் போட்டுக் காண்பித்தார். பின்னர் இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேறுவதற்கு இந்நிலங்கள் இருவேறு நகரங்களுக்குச் சொந்தமாக இருந்ததால், இவற்றை ஒன்றாக இணைக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. எனவே மே, 1967 இல் இரு நகரங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு, ஒரு மாவட்டம் நிறுவப்பட்டது. 1968 இல் புளோறிடா உயர்நீதிமன்றம் இம்மாவட்டம் பொதுசனத் திட்டங்களுக்கு வரிவிலக்குக் கொடுக்கக்கூடிய அதிகாரத்தை வழங்கியது.

எனவே தேவையான நீர் வடிகால்கள், தெருக்கள் ஆகியனவற்றை கட்டும் பணிகளை டிஸ்னி நிறுவனம் உடனடியாக ஆரம்பித்தது. பின்னர் மஜிக் கிங்டம் கட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து டிஸ்னி விடுதிகள் கட்டும் பணிகளும் நிறைவேற்றப்பட்டன. ஒக்ரோபர் 01, 1971 இல் இப்பூங்கா திறக்கப்பட்டது. இதற்கருகில் பாம், மக்னோலியா என்ற இரு கோல்ப் திடல்கள் ஏற்கனவே திறக்கப்பட்டிருந்தன. றோய் இப்பூங்கா, தனது சகோதரரின் ஞாபகர்தமாக 'வோல்ற் டிஸ்னி உலகம்' எனப் பெயரிடப்படும் என அறிவித்தார். இப் பூங்கா திறக்கப்பட்ட மூன்றாவது மாதம் டிசம்பர் 1971 இல் றோய் காலமானார். பின்னர் 1982 இல் 'எப்கொட்' எனப்படும் நாளைய சமூகம் என்ற வோல்ற் டிஸ்னியின் கனவு உலகம் திறக்கப்பட்டது. 1989 இல் டிஸ்னி எம்.ஜி.எம் ஸ்ரூடியோஸ் என்ற பூங்கா சேர்க்கப்பட்டது. இதற்கு பின்னர் டிஸ்னி ஹொலிவுட் ஸ்ரூடியோஸ் என 2008 இல் பெயர் மாற்றஞ் செய்யப்பட்டது. டிஸ்னி உலகின் நான்காவது பூங்காவாக டிஸ்னி விலங்கு இராட்சியம் (Animal Kingdom) 1998 இல் சேர்க்கப்பட்டது. ஓகஸ்ட் 2006 இல், இந்நிறுவனத்தின் தலைவராக மெக் குறொவ்டன் என்பவர் பொறுப்பேற்றார்.

டிஸ்னி உலகம் பின்வரும் திட்டமிடப்பட்ட பூங்காக்களைக் கொண்டுள்ளது.

1. மஜிக்கிங்டம் - இதன் அடையாளச்சின்னம் சிண்டறெலா மாளிகை.
2. எப்கொட் - இதன் அடையாளச் சின்னம் அண்டகோளம்.
3. டிஸ்னி ஹொலிவுட் ஸ்ரூடியோஸ் - அடையாளச்சின்னம் மந்திரவாதியின் தொப்பி.
4. டிஸ்னி விலங்கு இராட்சியம் - அடையாளச்சின்னம் வாழ்க்கைமரம்

## மஜிக் கிங்டம்

இது டிஸ்னி உலகிலுள்ள முதலாவது

தொடர்ச்சி 26ஆம் பக்கம்

**Computer Repair** Services

சகல விதமான கணனி சார்ந்த பழுதுபார்த்தல் மற்றும் Virus Removal உட்பட அனைத்து வேலைகளையும் செய்து கொள்ளலாம். Troubleshooting இலவசம். ஏற்படக்கூடிய செலவு பற்றிய விபரங்ளை முற்கூட்டியே அறிந்து கொள்ள முடியும்.

PC Repair, Upgrade, Anti-Virus & Fire-Wall Installation; Virus, Spyware, Malware Removal.

Data Recovery from infected or corrupted, & mistakenly formatted Computers.

Setup your Router & wireless security. Buy used and new computers. (Scanning, Browsing, Printing, Toner Cartridges & Refill etc..

**PRO-WIN COMPUTER SERVICES**

**919** Ellesmere Road, Unit – 302 , Scarborough, ON, M1P 2W7.
*(KENNEDY & ELLESMERE- South East Corner )*
*(Besides Active Green + Ross & In front of Honda )*

**Tel: 647 340 5568/416 879 7489 (தமிழ் -English)**
**( Contact :** *Niruthan Nadarajah* **)**
**Mon-Sat 10 am – 8 pm / Sun 10 am – 6 pm**





# BASEMENT RENT

**PHARMACY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
416.759.2608 /416.882.7638

**MCCOWAN & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.880.5066

**DONMILLS & SHEPPARD**
3 அறைகள் கொண்ட Walk-out bsmt Bedrooms for rent. Sep. Entrance. Parking, laundry, cable, internet. Close to 5 நிமிட நடை தூரத்தில் பஸ் தரிப்பிடம், Donmills Subway, school, mall, DVP, hwy 404, Fair view mall. Avail. July 01, 10.
தொடர்புகளுக்கு: 416.502.8053

**VICTORIA PARK & FINCH**
2 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to TTC (2 min. Walk), 5 min. walk to Finch. All amenities close-by. Avail. July 01, 10. சிறுகுடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.492.9816

**MIDDLEFIELD & STEELES**
1 Bedroom bsmt apt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school, clinic. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.209.7892

**KENNEDY & LAWRENCE**
3 Bedroom in 1st floor, 3 bedroom in bsmt for rent. Close to all amenities.
தொடர்புகளுக்கு: 416.830.5560

**BIRCHMOUNT & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Kitchen, washroom, sep. entrance, parking. Close to TTC, shopping, school. Avail. immediately. பெண்கள் or young couple விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.896.9448

**MARKHAM & HIGHGLEN**
2 Bedroom new bsmt apt. for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, தமிழ் கடைகள், school, bank. Avail. immediately.
905.472.0915 / 416.554.6553
Weekdays After 5.00pm

**TAPSCOTT & FINCH**
1 bedroom bsmt for rent. Sep.entrance, kitchen, full washroom, living room, laundry. Close to bus stop, temple, stores. No smoking & No pets. Avail. immediately.
416.768.4271 / 416.768.4246
Weekdays 6pm / Weekends Alldays

**BRIMLEY & LAWRENCE**
1 Room for rent in a basement. Sep. entrance & parking, laundry. Close to TTC, stores & other facilities. Very quiet place. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: 416.264.8177

**MORNINGSIDE & ELLESMERE COLINES & CANMORE**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to university. அறைகள் தனித்தனியாக கொடுக்கப்படும். Single person preferred. Avail.immediately.
416.208.7328 / 416.315.8016

**ELSON & MARKHAM**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, shopping. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.917.0557

**MARKHAM & STEELES**
3 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, mall, school. Avail. June15, 2010.
தொடர்புகளுக்கு: 647.828.2709

**MIDLAND & SHEPPARED**
1 bedroom bsmt for rent. Close to school, mall, go train, TTC.
தொடர்புகளுக்கு: 647.448.6464

**SCAR. GOLF CLUB & LAWRENCE**
1 Large bedroom & medium size room bsmt for rent. Kitchen, living room, full washroom, laundry, Sep. entrance. Avail. July 01, 2010. Close to TTC, school, mall, etc.
தொடர்புகளுக்கு: 416.438.2660

**WARDEN & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, mall, school. Avail. Anytime. Girls preferred. தொடர்புகளுக்கு: 647.502.8486 (after 6.00 pm)

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC. Utilities, bills included. Avail. July 01, 2010.
தொடர்புகளுக்கு: 647.887.8839

**WESTERN & RUTHERFORD**
1 Big bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately.
416.402.3947/416.726.2425

**WARDEN & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. July 01, 2010
தொடர்புகளுக்கு: 416.494.0850

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school, bank. Avail. July 01, 2010
தொடர்புகளுக்கு: 416.523.1312

**MARKHAM & STEELES**
1 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. June 01, 2010.
647.703.1314 / 647.703.1343

**McCOWAN & STEELES**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Large kitchen & living room. Parking & laundry included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.828.6510

**MORNINGSIDE & SHEPPARED**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.616.1403

**MCCOWAN & 16TH AVE.**
இரண்டு அறைகள் கொண்ட bsmt Apt. வாடகைக்கு உண்டு. Sep. entrance. Parking, cable, laundry. Close to bus, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.414.5562

**TAPSCOTT & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, utilities. Close to TTC, Malvern mall, school. Avail. August 01, 10.
தொடர்புகளுக்கு: 647.214.1085
Monday - Friday - 4:00pm - 9-00pm
weekends anytime

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, hospital. Avail. Anytime. Couple or Girls preferred.
தொடர்புகளுக்கு: 416.836.5482

**McCOWAN & DENISON**
New 1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, laundry & cable. Close to all amenities. Avail. immediately.
905.472.8156 / 416.998.8156

**MARKHAM & PAINTED POST DR.**
2 bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, laundry, cable. Close to school, mall. Avail. immediately. Single family preferred.
தொடர்புகளுக்கு: 416.400.8125

**MORNINGSID & MCLEVIN**
2 Bedroom walkout bsmt apt. with sep. entrance. Parking, laundry, babysitting available. Close to malls, Wal-mart, nofrills, medical, library, 4 elementary schools, 3 Highschools, U of T, Centennial college, 30 seconds to, TTC 24 hrs., hwy 401. Ideal for small family's, seniors. Also 1 bedroom bsmt for ladies available. Avail. June 01, 2010.
தொடர்புகளுக்கு:416.834.1081

**MCLEVIN & NEILSON**
One Bedroom walkout bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.883.1054

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. Anytime. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.996.6977

**BRIMLEY & LAWRENCE**
2 Bedroom walkout bsmt for rent. 2 parking. All facilities available. Close to TTC, school & mall. Avail. immediately.
416.879.6801 / 416.293.6253

**MCCOWAN & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry inclu.. Close to 24 hrs. bus service, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.272.4921

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc. தொடர்புகளுக்கு: 416.551.8379

## OFFICE SPACE FOR RENT

**KENNEDY & ELLESMERE**
Rent $395. All inclusive.
தொடர்புகளுக்கு: 416.575.5055

# CONDO. FOR RENT

**MCLEVIN & TAPSCOTT**
2 Bedroom condo. for rent. Close to all facilities. Avail. immediately.
416.291.9964 / 416.520.2754

# CONDO. FOR SALE

**MCLEVIN & TAPSCOTT**
2 Bedroom condo for sale. Close to all facilities. Avail. immediately.
416.291.9964 / 416.520.2754

# வீடு வாடகைக்கு தேவை

***Middlefield & Finch*** சந்தியிலிருந்து 5 km சுற்றளவிலுள்ள வீடு வாடகைக்கு தேவை. One month notice wanted.
Raviraj: 416.666.5627

# HOUSE FOR RENT

**NEILSON & ELLESMERE**
4 Bedroom town house. All hard wood floors. 2 full & 2 half washrooms. 2 parking. Close to TTC, school, HWY 401 & University. Cable & water included. Rent $1350. Available immediately.
தொடர்புகளுக்கு: 289.232.1513

**MORNINGSIDE & SHEPPARED**
2 Bedroom house for rent. Close to all facilities. Avail.immediately.
தொடர்புகளுக்கு: 416.300.7595

# HOUSE FOR SALE

ஹெந்தல வத்தளையில் 4 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. 14.5 பரப்பு கொண்டது. 2000 sq.feet. 3 Bathrooms, Air condition in one bedroom. With all facilities. Urgent sale. Quiet neighborhood.
தொடர்புகளுக்கு: 780.908.0112
E - mail : ar25th@gmail.com

வெள்ளவத்தையில் 3 படுக்கையறைகள் கொண்ட தொடர்மாடிவீடு ஒன்று விற்பனைக்குள்ளது. சகலவசதிகளும் கொண்ட வீடு.
தொடர்புகளுக்கு: 416.629.9601

# CARS FOR SALE

Toyota Camry, Corolla 2004 - 2008 for sale. அத்துடன் Van வாடகைக்கு விடப்படும்.
தொடர்புகளுக்கு: 416.625.4146

Honda 98 CRV car for sale. Automatic, black colour. Good condition.
தொடர்புகளுக்கு: 416.688.8364

2002 BMW X5 Blue colour $13,900,
2002 Toyota Corolla - 80K, $4,700,
2007 BMW X3 - $34,900,
2002 BMW X5 - $13,500, 200 km,
2005 Toyota Corolla - $9,800,
2005 Honda Accord - 2 door - $ 9,500,
தொடர்புகளுக்கு: ***416.575.5055***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கம் 25, 26

# ROOM RENT

**MARKHAM & 14TH AVE**
3 Bedrooms upper level house for rent. Parking, laundry. Close to YRT, mall, school. Avail. immediately. அறைகள் தனித் தனியாகவும் கொடுக்கப்படும். 905.642.3576/647.888.8255

**McCOWAN & LAWRENCE**
Room for rent in bsmt. Sep. entrance. Parking. Close to hospital, tamil stores, 2 min. to bus. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.827.5529

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom for rent. Close to TTC, mall, school. Avail. immediately. 416.724.6186/647.833.3893

**McLEVIN & TAPSCOTT**
1 Master bedroom for rent. Attached washroom. Parking & cable. Close to TTC, mall, school. Backyard patio. Avail. immediately. 292 McLevin Avenue. 905.640.0833 / 647.367.0187

**ELLESMERE & NEILSON**
3 Bedroom for house for rent.
2 bedroom bsmt for rent.
**WARDEN & 401**
4 Bedroom walkout bsmt for rent.
தொடர்புகளுக்கு: 416.889.2254

**MIDLAND & EGLINTON**
1 Bedroom for rent with all facilities. Close to TTC, mall. பெண்கள் or வயதானவர்கள் விரும்பத்தக்கது. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.906.5013

**MARKHAM & ELSON**
1 Bedroom house for rent. Close to all facilities. Avail. July 01,2010. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: 647.272.2909

**MARKHAM & LAWRENCE**
Room available for rent in main floor. Cable inclusive. Close to TTC & plaza. Room $275. 416.439.4076/416.728.0807

**MIDDLEFIELD & ELSON**
2 Rooms for rent. Attached washroom. Close to TTC, No Frills, school, tamil stores, Doctor. Avail. immediately. தொடர்புகளுக்கு: 905.471.5340 / 905.209.7359

**FINCH & MIDDLEFIELD**
Bsmt இல் 1 அறை தனித்தனியாக வாடகைக்கு உண்டு. Sep. entrance. Close to mall, ஐயப்பன் கோவில். No smoking. Ladies preffered. Keep the place clean. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.493.0590/Leave message

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் Tvi, Sun TV, Vijay TV, internet, தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்புகளுக்கு: 416.288.0303

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Avail. July01,2010. Suitable for female student. Cable & internet avail. Close to university. தொடர்புகளுக்கு: 905.429.0280

**ROOMS FOR RENT.**
With food or without food
**ISLINGTON & FINCH (NORTHYORK)**
Islington/steeles, northyork. Students, family, single mother/dad preferred. தொடர்புகளுக்கு: 416.744 help(4357)

**WARDEN & SHEPPARD**
ஒரு அறை basement இல் இரு நேரச் சாப்பாட்டுடன் வாடகைக்கு உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள் விரும்பத்தக்கது. Avail. mmediately. 416.299.4895 / 416.201.1222

**MORNINGSIDE & MORNINGVIEW**
2 Bedroom for rent. Parking, laundry, cable. Close to TTC, mall school, bank. Avail. Anytime. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Female or students preferred. தொடர்புகளுக்கு: 416.805.8791

**DANFORTH & EGLINTON**
Shared Room for rent in bsmt. Another room available for a lady in main floor. Close to bus, stores, 5 min. to Kennedy subway. Males only. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.201.3111

## TUITION FOR ALL GRADES

Math, Science, English, Physics, Chemistry, Calculus & Vectors, Advanced Functions, Data Management, learn to read & reading recovery. Home work help & Exam preparation individual & customized lessons. Flexible hours. தொடர்புகளுக்கு: 416.265.0162

## தமிழ் வகுப்பு

பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தரம் 1 - தரம் 12 வரை உள்ள மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கப்படும். உங்கள் பிள்ளைகளும் தமிழில் எழுத வாசிக்க அழையுங்கள். 905.554.2496

## TUTION CLASSES

Maths, English, Science, Art & Tamil. (JK – Gr. 3) Preparation for next grade.
• Homework help • Flexible time.
1 to 1 or group classes.
Call: 905.554.2496

# JOB JOB JOB

தமிழ் பேசக்கூடிய விற்பனையாளர்கள் தேவை. தொடர்புகளுக்கு: 416.788.3939

## ICE - CREAM TRUCK DRIVER

Male or female need class - G - license to drive Ice - cream truck in Calgary, Alberta. Full time $1000 and up Weekly pay. Job up to October. Accommodation Provid. 403.818.2222 / 647.800.5060

G சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஐஸ்கிறீம் Van சாரதி உடனடியாகத் தேவை. 5210 General Rd. HWY 401 & Dixie Mississauga. தொடர்புகளுக்கு: 416.880.7562

# SPACE FOR RENT

**KENNEDY & LAWRENCE**
2 Space for rent.
416.755.8354/647.836.9255

## மணமகன் தேவை

யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த தற்பொழுது கொழும்பில் தனியார் நிறுவனத்தில் Accounts assistant ஆக பணிபுரியும் 1972 ஆம் ஆண்டு கார்த்திகை நட்சத்திரம், 5'4" உயரமுடைய அழகிய பெண்ணுக்கு நற்பண்புள்ள வரனை எதிர்பார்க்கின்றோம். திருமண சேவை செய்பவர்களும் தொடர்பு கொள்ளலாம். தொடர்புகளுக்கு: 647.618.9316

## COMPUTER REPAIR

உங்கள் கணினி (Computer) யில் ஏற்படும் குறைபாடுகளை நேரில் வந்து நிவர்த்தி செய்யவும் மற்றும் கணினி (computer) திருத்த வேலைகளுக்கும் அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள் நிமல் - 416.301.1999

# WANTED

Used Toyota Corolla 1993 - 1997 தேவை. Any condition. Raj - ***647.269.6552***


**A1 கொழும்பு ஸ்ரூடியோ**

முதல்தரமான அனைத்து போட்டோ, வீடியோ படப்பிடிப்புகள்
எல்லா வகையான போட்டோ வீடியோ வேலைகள்

3L - L - 2296 EGLINTON AVE. EAST
TEL: 416-752-4444, 416-755-2333
Web: www.tamilsyellowpages.com


# CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்: 416.274.5495

மேலும் பக்கங்கம் 24, 26

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

# TENNIS LESSONS



By Australian certified, U.S trained professional former Srilankan Davis cup player and Coach catering for scarborough, Markham & Richmond Hill Areas. 36 years of experience. Group Classes & Private Coaching Possible
**David Selvadurai : 416.495.1277**

**$100 $250 $100**

**$250** நீங்கள் Welfare, ODSP பணத்தில் வாழ்பவர்களாக இருந்தால் எமது நிறுவனத்துடன் இணைந்து தொண்டு செய்யும் பொழுது மேலதிகமாக $250.00 டொலர்களையும் அத்துடன் $100.00 டொலர்களையும் தொடர்ந்து 6 மாதத்தில் இருந்து ஒரு வருடம் வரை பெற்றுக் கொள்ளலாம். **$250**

**$100** **Ontario Vegetarian Food Bank** **$100**

## தொண்டர் சேவை

2370 Midland Ave., (Midland /Sheppard) Scarborough,

**$250** 2400 Finch Ave., (Western / Finch) North **$250**

www.Vegfodbank.ca
416.744 (Help).4357
**தானம் - தர்மம் - தொண்டு**

**$250 $100 $250 $100 $250**

# SMILE....

- *BUSINESS PLANS*
- *ACCOUNTING, TAXATION*
- *CORPORATE TAX PREPARATION OF FILING*
- *SYSTEMS - POINT OF SALES*
- *PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE*

## RK CONSULTANTS

**PL. CALL: 905.887.7457 / 905.751.7537**
24 hrs, 365 days



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490/647.831.0070

**Tutorial 261** **Answers 261**

(1) $\binom{13}{1}\binom{13}{1}\binom{13}{1}\binom{13}{1} = 28561$ ways

(2) Since a and b are unit vectors

$|a| = |b| = 1$ (6a + b), (a - 2b) $= 6|a|^2 - 11a\,b - 2|b|^2$

$= 6|a|^2 - 11|a||b| \cos ø - 2|b|^2$ $= 6 - 11 \cos ø - 2$

$= 4 - 11 \cos ø$ $= 4 - 11 \cos ø = -3/2$

(3) The 20, 15, 25 metre lengths form a right angled triangle. Since the 375 N force is collineas with the 15m steel wire, it will have a tension of 375 N and the tension a long the 25m steel wire will be O newton.




(4) PV $= FV (1 + i)^{-n}$ $=2600 (1 + .073/12)^{-12}$

$=2600 / (1.00618)^{12}$ $= \$2414.71$

(5) Find $\lim_{x \to 0} \frac{\text{Sin } 7x}{4x}$ $\frac{\sin 7x}{4x} = \frac{7}{4}\frac{(\text{Sin}7x)}{7x}$

$$\lim_{x \to 0} \frac{\text{Sin}7x}{7x} = \lim_{x \to 0} \frac{7}{4}\left(\frac{\text{Sin}7x}{7x}\right) \quad \frac{7}{4} \quad \lim_{x \to 0} \frac{\sin 7x}{7x} = \frac{7}{4} . 1$$

$= 7/4$

**Tutorial 262** **Questions**

(1) Different F(x) = sec x / it tan x for what value of x does the graph of f have horizontal tangent. (For Gr.12)

(2) Differentiate (a) $f(x) = \sqrt{1n\ x}$ (b) $f(x) = \log_{10} (2 + \sin x)$

(3) A man walks along a straight path at a speed of 4th/sec. A search light is located on the ground 20ft from the path and is kept to cussed on the man. At what rate is the search light rotating when the man is 15ft from the point on the path closer to the search light? (For Gr.11 & 12)

(4) The prime factorization of 540 is 2x2x3x3x3x5, Find the number of divisors of 540? (For Gr.10)

(5) Use Binomial theorem to find the first fours terms in the expansion of (2x - 1/x) (For Gr.12)

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Under taken for all arades from grade 4 to university 1st year. Special classes in advanced functions, vector calculation & data management for grades 11 & 12

Indiouvale and group classes available by an experience teacher Mr. S.F. Xavier. Classes available at 1. Scarborough 2. Stauffville and Richmond Hill

**CONTACT: 647.340.9490 / 647.831.0070**

# டிஸ்னி உலகம்...

**23ஆம் பக்கத்தொடர்ச்சி**

பூங்கா. இது அனெஹெய்மிலுள்ளதைப் போன்று வடிவமைக்கப்பட்டு ஒக்ரோபர் 1971 இல் திறந்து வைக்கப்பட்டது. 2009 இல் இதற்கு 17.2 மில்லியன் பார்வையாளர் சவாரிகளையும் பார்த்து அனுபவிப்பதற்கு ஒரு நாள் போதாது. உண்மையில் அங்குள்ள பூங்காக்கள் யாவையும் பார்ப்பதற்குக் குறைந்தது ஒரு வாரமாவது தேவை.



வந்திருந்தனர். உலகிலேயே அதிகம் பார்வையாளரைக் கவரும் பூங்காவாக இது திகழ்கிறது. இங்கே போதியளவு வாகனத் தரிப்பிட வசதிகள் உண்டு. பூங்கா தரிப்பிடத்திலிருந்து 1 மைலுக்கப்பாலுள்ளது. எனவே பார்வையாளர் தொடர்வண்டிகள் மூலம் நுழைவுச் சீட்டுப் பெறுமிடத்துக்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள். பின்பு மஜிக்கிங்டம் இருக்குமிடத்துக்குச் செல்வதற்கு மொனோறெயில் அல்லது படகு மூலம் செல்லவேண்டும். அங்கிருந்து மற்றைய பூங்காக்களுக்குச் செல்வதற்கும் மொனோறெயிலும் பஸ்வண்டிகளும் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு பூங்காவிலுள்ள பல்வேறு காட்சிச் சாலைகளையும் விநோத

மஜிக் கிங்டத்துக்குள் நுழைவதற்கு முன் நுழைவுச் சீட்டுடன் ஒருவரைபடமும் தருகிறார்கள். அதில் 48 பார்வையிடங்களும் 7 திட்டமிடப்பட்ட இடங்களும் (Themed Lands) குறிப்பிடப்பட்டுள்ளன. அதை வைத்துக் கொண்டே நீங்கள் விரும்பிய இடங்களுக்குச் செல்லலாம். நாம் சென்றது டிசம்பர் விடுமுறைக் காலமானதால் கூட்டம் நிரம்பி வழிந்தது. எல்லா காட்சி கூடங்களிலும் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டியிருந்தது. வரிசை குறைவான இடங்களை முதலில் பார்த்துத் பின் மற்றவற்றிற்குச் சென்றோம். எனினும் முழுவதும் பார்க்க முடியவில்லை.

## சுயாதீன கலை, திரைப்பட கழகம்



2010ஆம் ஆண்டுக்கான “∴ விருது” திரு. டொமினிக் ஜீவா அவர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதை சுயாதீன கலை, திரைப்பட கழகம் பெருமையுடன் அறியத்தருகிறது.

சுயாதீன கலை, திரைப்பட கழகம் வருடா வருடம் மாற்று ஊடகத்திற்காக தங்களது பங்களிப்பை செய்தவர்களை “∴ விருது” என்னும் விருதை அளித்து கௌரவிப்பது வழமை. கடந்த ஆண்டுகளில் நாடகர் பாலேந்திரா, ஊடகவியலாளர், நாடகர் பி.விக்னேஸ்வரன், கலைஞர் கே.எஸ். பாலச்சந்திரன் போன்றோருக்கு இவ் விருது வழங்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டுக்கான “∴ விருது” பெறும் திரு. டொமினிக் ஜீவா, கடந்த 45 வருடங்களாக மல்லிகை என்னும் இலக்கிய சஞ்சிகையை இலங்கையில் இருந்து வெளியிட்டு வருகின்றார். இச் சஞ்சிகையில் இன்றைய முன்னணி எழுத்தாளர்கள் பலர் எழுதியுள்ளனர். கால் நடையாகவும், மிதிவண்டியிலும் ஊர் ஊராக சென்று இப் பத்திரிகையை இவர் விநியோகித்துள்ளார் என்பது எத்தகைய இடைஞ்சல்களுக்கிடையில் இவர் தனது இலக்கியப் பணியைத் தொடர்ந்துள்ளார் என்பதற்கு சான்று பகர்கின்றது.

1927 ஜூன் 27ல் பிறந்த இவர் 1966ல் மல்லிகையின் முதலாவது இதழை வெளியிட்டார். தமிழிலக்கியத்தின் முக்கியமான சஞ்சிகைகளில் மல்லிகையின் இடம் முக்கியமானது. வறுமைக் கோட்டின் கீழ் வாழ் மக்கள் அனைவருக்கும் சார்பாக குரல் கொடுத்த இவர், சாதியம் போன்ற சமூகத்தின் மிகக் கொடூரமான ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும் உரத்து குரல் பதித்தவர். திரு. டொமினிக் ஜீவா அவர்களுக்கு “∴ விருதை” அளிப்பதில் சுயாதீன கலை, திரைப்பட கழகம் பெருமிதப்படுகின்றது.

அமைப்பின் சார்பாக
திரு. ராம் சிவதாசன் - 416-804-3443

## விளம்பரம் எழுத்தாளர் கனியின் இரு நூல்கள்

# பாமரரும் பயனுறும் படையல்கள்

கடந்த சனிக்கிழமை (22.05.2010) மாலை ஸ்காபுரோ பொதுமக்கள் நிலையத்தில் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் த.சிவபாலு அவர்களின் தலைமையில் கனி விமலநாதன் அவர்களின் 'வியத்தகு விண்மீன்கள்', 'புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விடயங்கள்' என்னும் இரு நூல்களின் வெளியீடும் ஆய்வும் இடம்பெற்றது.





எழுத்தாளர் இணையத்தின் பொருளாளர் திரு. சிவநாயகமூர்த்தி அவர்களும் விளம்பரம் பத்திரிகையின் திரு. திருமதி ராஜா மகேந்திரன் தம்பதியினரும் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

**- குமுளன் -**

நூலாசிரியரின் புதல்வியர் செல்விகள் ஆதிரை, சங்கவை ஆகியோரின் கனடா தேசிய கீதம், தமிழ்த்தாய் வாழ்த்தைத் தொடர்ந்து அமைதி வணக்கத்தோடு ஆரம்பமான கூட்டத்தில் கவிநாயகர் வி. கந்தவனம், உதயன் பத்திரிகை ஆசிரியர் ஆர்.என்.லோகேந்திரலிங்கம் இருவரதும் வாழ்த்துரைகள் இடம்பெற்றது. திரு. கந்தவனம் அவர்கள் தனது உரையில், கனி ஒரு அமைதியான எழுத்தாளர். அவரது எழுத்துக்களை நான் விளம்பரம் பத்திரிகையில் பார்த்து வருகின்றேன் என்று குறிப்பிட்டதோடு அவர் விளம்பரம் பத்திரிகை ஒரு தரமான பத்திரிகை எனவும் சிறந்த பல ஆக்கங்களை வழங்கி வருகின்றது எனவும் கனி விமலநாதனின் குடும்பமே ஒரு எழுத்தாற்றல் மிக்க குடும்பம் எனவும் பாராட்டி உரையாற்றினார். தொடர்ந்து உரையாற்றிய உதயன் பத்திரிகை ஆசிரியர், எழுத்தாளர்களின் வலிமை போதியதாக இல்லை. அவர்கள் மிகவும் தாக்கமாக எழுதவேண்டும் சமுதாயத்திற்குச் சொல்லவேண்டியதைச் சொல்ல வேண்டும் எனவும் வாசகர்கள் இன்று குறைந்து வருகின்றார்கள். வாசிப்புப்பழக்கத்தை நாங்கள் வாசகர் வட்டம் வைத்து ஊக்குவித்து வரவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து திரு. சிவபாலு அவர்கள் தனது தலைமையுரையில், எழுத்தாளர் கனி விமலநாதன் அமைதியான நதி நீர் போன்று தனது எழுத்தை தொடர்ந்து எழுதி வருகின்றார். அவருக்குப் பக்கபலமாக அவரது துணைவியார் உள்ளார். எப்போதும் எதிலும் அக்கறையோடும் துடிப்போடும் ஈடுபடும் மீரா இராசையா அவர்கள் எழுத்தாளர் இணையத்தின் செயலாளரும் சிறந்த பேச்சாளரும் கவிஞரும் என்றதோடு கனியின் இளமைக்காலத்து சாதனைகள், அவர் தங்கம்மா அப்பாக்குட்டியின் வாயால் வசிட்டரின் வாயால் வாழ்துப்பெற்றது போன்று வாழ்த்தப் பெற்றவர். விஞ்ஞான கட்டுரைகளை எழுதுவது சுலபமான ஒன்றல்ல அதனை வாசகர்கள் விளங்கிக்கொள்ளத் தக்கதாக ஆக்கித் தரும் அந்த எழுத்து நடை மிகவும் சிறப்பானது என்றார்.

தொடர்ந்து முன்னைநாள் தமிழ் பேராசிரியர் பாலசுந்தரம் அவர்கள் 'புவியீர்ப்புப்பற்றிய வியப்பான விடயங்கள் என்னும் நூலுக்கு வெளியீட்டுரை நிகழ்த்தினார். அவர் பேசும்போது எழுத்தாளர்களை ஊக்குவிக்கக் கூடியவர்கள் வாசகர்கள் என்றார். தொடர்ந்து உரையாற்றும்போது கடந்த 20 ஆண்டுகளாக இந்த மண்ணில் பல கலை இலக்கிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. கனி விமலநாதனுடைய முயற்சி மிக முக்கியமானது. மக்களால் அறியப்படாத விடயங்களை நன்கு ஆய்ந்து அவர்களுக்குத் தருகின்ற ஒரு பெரும் விஞ்ஞானப்பணியாகவே அவரது எழுத்துக்கள் அமைந்துள்ளன. அவரது கட்டுரையில் வெளிவந்த ஆக்கங்களைத் தொகுத்து நூலுருவில் தந்துள்ளார். இது காலத்தின் தேவை. உலகில் புதிய புதிய கண்டுபிடிப்புக்கள் இடம்பெறுகின்றன. அவற்றை அறிந்து மக்களுக்குத் தரும் ஒரு முயற்சியாக இவரது கட்டுரைகள் அமைகின்றன என்றுரைத்து நூலை வெளியீடு செய்துவைத்தார். முதலாவது பிரதியை கனியின் மாமி திருமதி பாக்கியம் இராசையா பெற்றக்கொண்டார்.

தொடர்ந்து அதிபர் கனகசபாபதி அவர்கள் நூலுக்கான ஆய்வுரையினை நிகழ்த்தும்போது 'கனியின் எழுத்தாற்றல் எந்த ஒரு பாமரனையும் சென்றடையக் கூடிய இலகு நடை, அது அவரது எழுத்தின் சிறப்பு. விஞ்ஞானக் கட்டுரைகளை பாமரத்தன்மையோடு எழுதுவது எல்லோருக்கும் கைவராது. கனி விமலநாதன் அதில் கைதேர்ந்தவராக நான்காவது நூலை இன்று வெளீடு செய்கின்றார். அவரது முயற்சி பாராட்டப்படவேண்டும் என்ற அவர் கலிலியோ, கொப்பர்நிக்கஸ், ஆக்கிமிடிஸ் போன்றோரது கண்டுபிடிப்புக்கள் பற்றியும் முன்னே வந்தவர்களைப் பின்னே வந்தவர்கள் குற்றம் கண்டு அவற்றை பிழையென நிரூபித்தனர். முதன் முதல் கண்டு பிடித்தவர்கள் யாரையும் குறைகூற முடியாது. ஆனால் பின்னால் வருபவர்களுக்கு அந்த வாய்ப்பு உண்டு என்று விஞ்ஞானக்கண்டுபிடிப்பின் வரலாறுகளை எடுத்தாய்ந்து கனியின் முயற்சிக்கு மெருகூட்டி அவர் இவற்றை எல்லாம் இலகுவான உதாரணங்களோடு தெளிவுபடுத்தியுள்ளார். அவர் கையாண்ட கதைசொல்லும் உத்தி விஞ்ஞானத்தை இலகுவாக புரிய வைப்பதாக உள்ளது' என்றார்.

தொடர்ந்து 'வியத்தகு விண்மீன்கள்' என்னும் நூலுக்கு வெளியீட்டுரை நிகழ்த்தினார் சிந்தனைப்பூக்கள் ஆசிரியர் சி.பத்மநாதன். பத்மநாதன் வீண்மீன்கள், உடுக்கள் எனவும் அழைக்கப்படுகின்றது எனக்குறிப்பிட்டு விண்மீன்கள் தொடர்ந்து அண்டத்தில் பிரயாணம் செய்துகொண்டே இருக்கின்றன. அவை பால்வழிப் பிரயாணத்தைச் செய்கின்றன என்ற அவர் கனிவிமலநாதன் சிறுவனாக இருக்கும்போது ஆகாய விமானத்தைக் கண்டு அம்மா நட்சத்திரம் பறக்கின்றது என்று தாயாரிடம் சொல்லியுள்ளார். அதிலிருந்து அவருக்கு இந்த விண்மீன்கள் மீது ஒரு பார்வை விழுந்துவிட்டது. அதன் தொடர்ச்சியே அவர் எழுதிய கட்டுரைகள் இந்த நூலாக்கத்தின் அடிப்படை என்ற அவர் சூரிய மண்டலத்தையும் இவ்வாறே பல சூரிய மண்டலங்கள் வானவெளியில் இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர் எனவிளக்கமளித்து வெளீடு செய்துவைத்தார். இந்த நூலின் முதற்பிரதியை திரு. திருமதி. ராஜா மகேந்திரன் தம்பதியினர் பெற்றுக் கொண்டனர்.

முன்னைநாள் அதிபர் சின்னையா சிவனேசன் அவர்கள் ஆய்வுரை நிகழ்தினார். அவர் தனது ஆய்வுரையில் 'நட்சத்திரங்கள் என்றால் இன்றைய மாணவர்களுக்கு சினிமா நட்சத்திரங்களின் பெயரைக் கேட்டால் சொல்லுவார்கள். ஆனால் வான வெளியில் உள்ள நட்சத்திரங்களைப் பற்றிக்கேட்டால் எதுவுமே தெரியாது

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

APARTMENTS FOR RENT



$250 Move In Bonus

*Best Building in Scarborough!*

*Clean, family building, FREE parking.*

*Close to schools, bus stop, Tamil store in building.*

Pl. Call: 416.264.2818

# அம்பிகையின் அழகும் அருளும்

## வருடாந்த மகோற்சவம் 08.06.2010 ஆரம்பம்



அருள் வடிவமுள்ள நீ ஐம்பூதநிரையும் யாதித்த சந்திரனும் நீ இருள் மலமறுகின்ற எழில் ஞான ஒளியும் இகபரந்தருபவளும் நீ மருளறு மணத்திலுறை மாசிலா மணியும் வருமருட்சக்தி நீயே திருவளர்கின்ற நயினார் தீவிலுறை தேவியே சுகவாரியே!

நீலத்திரைக்கடல் நித்தமும் முத்தம் தரும் பக்திவளம் மிக்க சக்தி பீடமாக இலங்குவது நயினார் தீவு, இலங்கையின் சக்தி பீடமாக, புவனேஸ்வரி பீடமாக விளங்குவது இது. ஆங்கே அகிலாண்ட கோடி என்ற அன்னை ஆதிபராசக்தி நாகபூசணி எனும் நாமம் பூண்டு நண்ணும் அடியவர் எண்ணம் நிறைவேறி திண்ணமாய் வாழ்வதற்கு தண்ணருள் சுரக்கின்றாள். மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மும்மானும் சிறப்புற்ற இவ்வாலயம் மிகப் பழமை வாய்ந்தது.

நாகத்தால் பூசிக்கப்பட்டமையால் அம்பிகை நாக பூசணியாக, நாகம்மாளாக, நாகாதத்தையாக நாகேஸ்வரியாக, நாக பரமேஸ்வரியாக, நாகராசேஸ்வரியாக நல்லருள் சுரக்கின்றாள். ஆதார சக்தி ஒன்று உண்டு. அது அண்டம் அனைத்தையும் ஆட்டிவைக்கின்றது. அது பிண்டமாகிய உயிரையும் ஆட்டி வைக்கின்றது என்ற உண்மையை உணரத்தலைப்பட்டான் மனிதன். அந்த மூலசக்தியிடம் பயமும் பக்தியும் தோன்றியதனால் தனது உடமைகளை அர்ப்பணித்தான். உயிரையும் அர்ப்பணிக்க முற்பட்டான். பின்னர் உயிருக்குப்பதிலாக உயிர்ப்பலியும் இட்டான். அந்த மேலான சக்திக்கு உருவம் அமைத்து வழிபாடு இயற்றி, இழிவுகளை நீக்கி அழிவுகளைப் போக்கி தெளிவும் தேசசும் பெற்று களி கொண்டால் இவ்வாறு தான் சக்தி வழிபாடு ஏற்பட்டது. சக்தி வழிபாடு மிகவும் தொன்மையானது. நமது வழிபாட்டிற்குரிய கடவுள் வடிவங்கள் எல்லாவற்றிற்கும் மிகப் பழமையானது சக்தி வடிவம் தான். சில வேளைகளில் அழியும் மனித உருவங்களே தமது தோற்றத்தாலும் தேசசுவாலும் நம்மை ஆகர்ஷித்து விடுகின்றன. காந்தம் போல கவர்ந்து விடுகின்றன. இதற்கு மேலாக விளங்கும் தெய்வ வடிவங்கள் நம்மை வலிந்திழுத்து, வசப்படுத்தி மெய்மறக்கச் செய்து விடுகின்றன என்றால் மிகையில்லை யன்றோ. எனவே தான், அழகிற்கு ஒருவரும் ஒவ்வாத...என்றும், அதிசயமான வடிவுடையான் என்றும் சுந்தரவல்லி என்றும் மின்ஆயிரம் ஒரு மெய்வடிவானவன் என்றும், மாதுளம் பூ நிறத்தாள் என்றும் அபியார் கமலத்தில் ஆரணங்கு என்றும் அபிராமி பட்டர் அம்பிகையின் ஆட்கொள்ளும் அழகினை வர்ணித்துள்ளார். அம்பிகை அபிராமியாவாள் அபிராமம் என்றால் அழகு என்று பொருள் பராபரையின் பார்வை விலக்கிடாத சொக்க வைக்கும் சௌந்தர்யத்தை அனுபவிப்பவர் தவம் செய்தவராவர் என்கின்றார் பட்டர்பிரான்.

சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்யப்பட்டும் பென்னம் பெரிய முலையும் முத்தாரமும் பிச்சி மொய்த்த கன்னங்கரிய குழலும் கண்மூன்றும் கருத்தில் வைத்துத் தன்னந் தனியிருப்பார்க்கிது போலும் தவமில்லையே.

அம்பிகையின் அழியா அழகினை அறிவுறுத்தும் அழகியபாடல் இது.

பொன்னார் நவமணி மகுடமிலங்கும்
பூரண மதிமுகமும்
பொல்லா மும்மல் வேரறவருண் மழை
பொழியுந் திருவிழியும்
மின்னார் பொன்னரி மாலை சரப்பணி
மேவும் மணிமார்பும்
வேண்டியவீயும் வரதமு மஞ்சலை
விடுவிங்குங் கரமும்
பின்னுஞ் சடையும் பொன்னங் குழையும்
பீதாம்பர வுடையும்
பிரசத் தாமரை யடியுங் கண்டருள்
பிரசத் தாமரை யடியுங் கண்டருள்
பெறுமா றெந் நாளோ
மன்னார் மங்கல வடிவங் கொண்டுயர்
நயினை நகர் மருவும்
வண்ணத் துடியிடை கன்னிப்பிடிநடை
மகா மாரித் தாயே!

அம்பிகையின் அழகுருவினை வருணிக்கும் முத்துக் குமாரசாமிப் புலவர் பாடல் இது.

சோருற்ற நவரத்தின கும்பியும் மேலிட்ட
தொங்கலும் அகிலாவிச்
சொருகிட்ட கொண்டையும் சுட்டியும்
மலர்க் கையாற் தொட்டிட்ட சிந்தூரமும்
தோடுற்ற கொந்தளக மரகத் கொம்புமார்
துணைவிழியில் எழுது மையும்
துகளற்ற வெண்தரள முருக நற்பவளவாய்த்
துருவமொளிர் நளின முகமும்
தேடுற்ற செங்கமல பொற்பதமும் அழகான
திருவுருவும் அறிவினாலே
தெரிசிக்க அருள் தந்து நீடியுருளும் பெரும்
செல்வமும் தர வேண்டும் நீ
நாடுற்ற பல வளமும் உறையுமிரு நயினை
நகர்க்கண் மருவுங் கௌரியே
நாகமணியும் பரமர் பாகமுறு மேக சிவ
நாக ஈஸ்வரி அம்மையே!

தாயன்பு தன்னிகரற்றது. அது தாவிப் படமும் தன்மையது. அத்துடன் தன்னலம் கருதாதது. பாரபட்சமற்றது தாய்ப்பாசம். தாயாகித் தாங்குகின்ற தயாபரன் என்றே இறைவன் கூறப்படுகின்றான். பரவசநிலையில் வாய்குளறிக் கூறிய வார்த்தையை மெய்ப்பித்த அம்பிகையின் அருட்திறனை வியந்து பாடுகின்றார் அபிராமிபட்டர். அம்பிகையிடம் நம்மை முழுமையாக அர்ப்பணித்தால் அவள் காத்தருள்வாள் என்பதற்கு இது எடுத்துக்காட்டாகும்.

விழிக்கே அருளுண்டு அபிராமவல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடக்கப்
பழிக்கே சுழன்று வெம்பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம் மோடென்ன கூட்டினியே
அம்பிகையின் அருள் வெள்ளத்துள் ஆழ்ந்தால்
அவள் எம்மை அளவில்லாத பேரின்பத்தில் திளைக்கச்
செய்வாள்.

அம்மா! அண்டசராசரங்களை ஈன்றவள் நீ என்பது உண்மையானால் நானும் உன் மகன் அல்லவா? எனக்குப் பாலூட்டி, என் முகத்தை உன் முந்தானையால் துடைத்து என் மழலை கேட்டு மகிழ்ந்து என் குறுநடையைக் கண்டு அன்பு பொழிந்து உன் இரு கரங்களையும் கொட்டி வாடா என் கடைக்குட்டியே! என்று கூப்பிட்டால் குறைந்தா போய்விடும். இது பட்டர் தீட்டும் பக்திச் சித்திரம்.

அருள்தாகம் கொண்டலையும் அன்பர்களுக்கு பதினாறு செல்வங்களையும் அருள்பவன் அம்பிகை அவளின் இணையற்ற திருவடிகளே மெய்யடியார் களின் பெரும் செல்வப்பேறு, திருவடிப்பேறு.

சகல செல்வங்களும், தரும் இமய கிரிராச
தனயை மாதேவி நின்னைச்
சத்தியமாய் நித்தியமுள்ளத்தில் துதிக்கும் உத்
தமருக்கு இரங்கி மிகவும்
அகிலமதில் நோயின்மை கல்வி தன தானியம்
அழகு புகழ் பெருமை இளமை
அறிவு சந்தானம் வலி துணிவு வாழ்நாள்
வெற்றி
ஆகு நல்லூழ் நுகழ்ச்சி
தொகை தரும் பதினாறு பேறும் தந்தருளி நீ
சுகானந்த வாழ்வழிப்பாய்
சுகிர்சகுணசாலி பரிபாலி அனுகூலி திரி
சூலி மங்களவிசாலி
மகவு நான் நீதாய் அளிக்கநாதோ மகிமை
வளர்திருக்கடவூரில் வாழ்
வாமி சுபநேமி புகழ்நாமி சிவசாமி மகிழ்
வாமி அபிராமி உமையே!



நா. க. சிவராமலிங்கம்


**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா**

## வருடாந்தப் போட்டிகள் - 2010

கொக்குவில் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு, கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் - கனடா தன் அங்கத்தவர்கள், அவர்களின் வாரிசுகள் மத்தியில் நடத்தும் வருடாந்தப் போட்டிகள்:
பண்ணிசை, பேச்சு, வாசிப்பு, கட்டுரை, சொல்வதெழுதுதல், எழுத்துக் கூட்டிச்சொல்லுதல், உறுப்பெழுத்து, கணிதம், ஆங்கிலம் ஆகிய போட்டிகள் நடைபெற உள்ளன. கல்லூரியின் நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு வெற்றியாளர்களுக்கு விசேட பரிசுகள் வழங்கப்படும். அங்கத்தவர்களின் வாரிசுகளை இப்போட்டியில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இடம்: *St. Stephen's Pressbyterian Church*
*3817 Lawrence Ave.East , Scarborough,Ontario, M1G 1R2*

காலம்: ஜுலை 03, 2010 - சனிக்கிழமை - காலை 8:30 மணிக்கு

விண்ணப்ப முடிவுத் திகதி: ஜுன் 30, 2010

மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்பப்படிவத்திற்கும் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

*(416) 856-8055 / (416) 431-1060 / (416) 296-7037 / (416) 318-6195*


அத்தனை குழம்பும்
அத்தனை ருசி...!
தரத்திலும் No.1
ஆரோக்கியத்திலும் No.1
இப்போது புதுமையிலும் No.1
®
BRAND
Niru
வறுத்த மிளகாயத் தூள்
நா நரம்புகள்
சிலிர்த்திடும் ருசி!
Marketing By Tamil Source
Niru
Niru
நிரு
பிராண்ட்
40 Minuk Acres, Scarborough, ON M1E 4Y6.
Tel: (416) 750-1976, Fax: (416) 750-8779
E-mail:info@niru.com

# பதிவுப்படிகளை படித்தல் வேண்டும்




**என் இனிய நண்பர்களே!**

**வாழ்த்துக்கள், நலம்பெறப் பிரார்த்திக்கிறேன்.**

என் முன்னைய முடங்கலில் நமது பதிவுகளின் அவசியம், தேவை குறித்து எழுதியிருந்தேன். ஒரு நண்பர் முற்காலத்தின், கல்வெட்டு, மெய்க்கீர்த்தி போன்று இக்காலத்துப் பெரும் சேவையாளர் பற்றிய நினைவுக் கட்டுரைகளாலும், நீத்தார் பெருமை கூறும் நூல்களாலும் நமது காலத்தில் வாழ்ந்தவர்களுடைய வாழ்க்கை முறைகள், மனித நேயச்சிந்தனைகள், பொது மக்கள் சுபீட்சம் கருதிய அவர்கள் நடத்தைகள் என்பனவற்றை அறிகின்றபோது ஆச்சரியமாயும் வியப்பாயும் இருக்கிறது.

அவர்கள் போன்று நாமும் உடலில் உயிர் உள்ள போது பொது நன்மை கருதி எதையாவது செய்யவேண்டும். செய்ய முடியாவிட்டால் செய்கிறவர்களை உற்சாகப்படுத்தி, உதவிகள் செய்து அவர்கள் புண்ணியத்தில் நாமும் பங்குபெற முடியும் என்று எழுதியதோடு காலமாகி மக்கள் கருத்தில் வாழும் கொம்யூனிஸ்ட் கார்த்திகேசன் பற்றிய நூலிலிருந்து ஒரு கட்டுரையையும் அனுப்பியிருந்தார். நான் 1976 ஆம் ஆண்டில் எழுதி ஏதோ ஒரு இதழில் வெளிவந்து, மு.தியாகராசாவின் சேகரிப்பிலிருந்து பெறப்பட்டதாக அடிக்குறிப்பும் போட்டு வெளியான அக்கட்டுரை இன்றைய பொது நலப்பற்றாளர்களுக்கு ஒரு முன் உதாரணமாகும். காத்தார் என்று அழைக்கப்பட்ட மு. கார்த்திகேசன் அவர்கள் குறித்த அந்த நூலை கனடாவில் அவர் மகள் ஜானகி பாலகிருஷ்ணனிடம் பெற்றுக் கொள்ளலாம். இந்தியத்தமிழகத்தில், சத்தியமூர்த்தி, காமராஜர், ராஜாஜி, அறிஞர் அண்ணா, ப. ஜீவானந்தம், கே. பாலதண்டாயுதம் ஆகியோரின் வாழ்க்கைச் சுவடுகளை இன்று வெளியாகும் தீபாவளி, தைப்பொங்கல் மலர்களில் சொட்டுச் சொட்டாக தேன் சிந்தும் பாங்கில் வெளியிடுகிறார்கள். இன்றைய சந்ததியினருக்கும் அன்றைய சரித்திர நாயக்கர்களின் பதிவுகளைப் பார்வைக்கு வைக்கும் பத்திரிகை உத்தி பயனுள்ளதே. இதனாலே தான் திருவள்ளுவரும் நீத்தார் பெருமைக்கு என்று தமது திருக்குறளில் ஒரு அதிகாரத்தைப் படைத்தனர் போலும்.

'துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று'

என்ற குறளில், இவ்வுலகில் நன்மை செய்து மறைந்தவர்களுடைய பெருமையை அளவிட்டுக் கூறுவது, உலகிலே இதுவரை இறந்தவர் எண்ணிக்கையை கணக்கிட்டுச் சொல்லுவது போன்ற அரிய செயல்' என்றார் வள்ளுவர். நண்பா! இராமர் அணைகட்ட அணில் தன்னால் முடிந்த அளவு மண் எடுத்துப் போட்ட கதை நினைவிருக்கிறதா? புணில் பறவையும் அணிலைச் சுட்டி புண்ணியம்பெற முனைந்ததும் நினைவுக்கு வருகிறதா? நிற்க.

1976 இல் வெளியான காத்தார் மலரிலிருந்த 'கார்த்திகேசன் என்றொரு மானிடன்' என்ற எனது கட்டுரையைக் கீழே பதிவு செய்கிறேன். காத்தார் என்ற நாமம், நமது இனம், தேசீயம், மொழி, கல்வி, பொருளாதாரம் முதலியவற்றைக் காத்தவர் என்ற பொருளதாகும்.

'தேம்ஸ் நகரத்து வீதியிலே சோக்கிரட்டீஸ் உலவித்திரிகிறான். புத்துலகு படைக்க வேண்டிய புதுயுக புருஷர்களுக்குப் புரட்சிப் போதனைகள் செய்கின்றான். பழைமையின் அழிவையும், புதுமையின் தோற்றத்தையும் அவாவி நிற்கும் அவனுடைய ஆத்மாவேசம் பொங்கிப் புரள்கிறது. கூட்டத்தினருக்கு சமூகம் மறு மலர்ச்சிப் போராட்டத்திற்குரிய உந்துதலைக் கொடுக்கிறது. முன்பில்லாத ஒரு மின்சக்தி தங்கள் உடல் எங்கும் உணர்ந்த கூட்டத்தினர் சோக்கிரட்டீசை வாழ்த்திப் புகழ் மொழிகளால் போற்றுகிறார்கள்.

சோக்கிரட்டீஸ் அவற்றினை ஏற்று அமைதி கொண்டானில்லை. மாறாகப் பாராட்டுக்களுக்காக இந்த சோக்கிரட்டீஸ் பாடுபடவில்லை. அவற்றினைக்கண்டு இவன் திருப்தியடைப் போவதுமில்லை. இவனுக்கு வேண்டியது மனித குலத்தின் அறிவு பூர்வமான மறுமலர்ச்சி வாழ்க்கை தான். புகழ் மொழிகளால் இவனை மயக்கவோ திருப்திப்படுத்தவோ முடியாது. இவன் சமூகவாழ்வில் பூரண மாற்றத்தை வேண்டி நிற்கும் ஒரு சமூக ஊழியன்' என்று பேசி முடிக்கிறான்.

'சக்கை...! இவனல்லவா ஞானி! இவனல்லவா புரட்சியாளன்' என்று கைதட்டி ஆரவாரிக்கிறார் திரு. மு. கார்த்திகேசன். அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தவர் கள் கார்த்திகேசனின் உணர்ச்சி வெளிப்பாட்டைக் கண்டு தாமும் அவருடன் கலந்து கரகோஷம் செய்கிறார்கள்.

ஆம்! யாழ். இந்துக்கல்லூரித் திறந்த வெளியரங்கிலே இற்றைக்கு பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு நான் நடித்த சோக்கிரடீஸ் நாடகத்தைக் கண்டு களிபேருவகைகொண்டு, என்வளர்ச்சிக்கான வாழ்த்து தலை வழங்கியவர் கார்த்திகேசன். அன்றிருந்த என்னைக் கண்டால் 'சோக்கிரட்டீஸ்' என்று அழைத்து மகிழ்பவர். என்னை மட்டுமா? இல்லை அவரிடம் படித்த மாணவர்கள் அத்தனை பேருடனும் அவருடன் இணைந்த அத்தனை இளைஞர்களுடனும் அவர் இதயம் கலந்து பழகுபவர். வகுப்பறையில் பாடநூல் பகுதிகளோடு தொடர்புடைய சோசலிசச்சித்தாந்தங்களுக்கு இலகுவான விளக்கம் அளித்து கால்மாக்ஸ், லெனின், ஏங்கல்ஸ் ஆகியோரையும், சிந்தனை விரிவையும் வீச்சையும் உண்டாக்கி விட்டதில், கார்த்திகேசனுக்குப் பெரும் பங்குண்டு. சோசலிசம் என்கின்ற சொல்லை நம்மில் சிலர் உச்சரித்துப் பார்ப்பதற்கு முன்பே அதனுடைய பொருளாதாரத்தை கருத்துச் செறிந்த விளக்கங்களோடு விஞ்ஞான ரீதியில் பலருக்குப் புரியவைத்த பெருஞ்சிறப்புக்கும் இவர் உரியவர். இவரிடம் பொது உடைமைத் தத்துவங்களை கேட்டு விளங்கிக் கொண்டு மேடைகளுக்கும், மேல்நாடுகளுக்கும் ஏன்? நாடாளுமன்றக் கதிரைகளுக்கும் போனவர்கள் பலர்.

இளைஞர்கள் சமுதாய வாழ்க்கையை நன்றாகப் புரிந்துகொண்டு பட்டினி, வறுமை, வேலையில்லாதத் திண்டாட்டம், சுரண்டல் முதலிய கொடுமைகளிலிருந்தும், தீய சக்திகளிலிருந்தும் மனித குலத்தை மீட்டு பேதமளித்து சரியான பாதைக்கு திசை திருப்பிக் காப்பாற்றும், சோசலிச சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதிலும் திரு. மு. கா. அன்று தொடங்கி இன்று வரை கருத்துச் செலுத்தி வருகின்றார். ஓடும் ரயிலிலும், கூடும் இடங்களிலும், பொதுமேடைகளிலும், சிறு குழுக்கள் மத்தியிலும், களைப்பற்று உற்சாகத்துடனும், வாலிப விறைப்புடனும், நடைமுறைகளையும் சித்தாந்தங்களையும், இலகுவாகவும், இடையிடையே பகிடி கலந்தும் தெளிவாக்குவதில் மு.கா உன்னத இடத்தை வகிப்பார்.

ஒரு நேர்மையான கம்யூனிஸ்ருடன் படிப்பதும், கதைப்பதும் விவாதிப்பதும் ஏன்? மூர்க்கமாகச் சீறிச் சினந்து சண்டை பிடிப்பதும் பயனுள்ள சிந்தனைக்கும், விழிப்புக்கும் உதவி செய்யக்கூடியவை. இத்தகைய அனுபவங்களை மு. கா. வுடன் தொடர்பு கொள்பவர்கள் பெற்று மகிழ்வது குறிப்பிடத்தக்கது. கார்த்திகேசன் என்றொரு மானுடனின் கம்யூனிஸ்ட் போக்குகள் அந்தக்காலத்தில் என் பிஞ்சு நெஞ்சில் படிந்திருந்தனாலே தான் தென் இந்தியாவில் கே. பால தண்டாயுதம், ப. மாணிக்கம், தா. பாண்டியன், மே. து. ரா. சுகுமார், நா. வானமாமலை, ஆ. சிவசுப்பிரமணியம் ஆகியோரோடு இலகுவில் ஐக்கியமாகி முற்போக்கான சிந்தனைகளை என்னுள் வளர்க்க முடிந்தது. மெஞ்ஞான முடிவுகளின் வழிவந்த சித்தாந்தங்களையும், ஆன்மீகத் தேடல்களையும் பின்பற்றும் யான், சிவபெருமானையே ஒரு நேர்மையான கம்யூஸ்டாக நினைத்துப் பார்ப்பதற்கு மு.கா. போன்ற பொதுவுடமைவாதிகள் வழிகாட்டினார்கள் என்று கூறமுடியும். புரட்சிகரமான சித்தாந்தங்களும், தத்துவங்களும் உள்ளத்தை உள்ளபடியே சொல்லி விளக்கங்கள் செய்வதில் திருப்திகொள்ளாமல், உள்ளதை மக்களின் நன்மைக்காக மாற்றி அமைத்துக்காட்டி சீரான வாழ்வு அமைக்க உதவவேண்டும் மென்பதில் அவருக்குப் பெருவிருப்பமுண்டு.

பொதுமக்களுக்குத் தொண்டு செய்வதில் எவ்வித கூச்சமும் இல்லாமல் நெஞ்சினில் பட்டதை அது தனக்கு என்ன தீங்கினை விளைவித்தாலும் பொருட்படுத்தாது வெளிக்காட்டி ஒரு சமுதாய வீரனாகவும் கௌரவங்களை கடந்த ஒரு சமூக விஞ்ஞானியாகவும் பீடு நடைபோடுபவர் திரு. மு. கா. அவர்கள்.

'மனித குலத்துக்கு உண்மையானவனாக நடப்பது, மக்களுக்கு உண்மையை எடுத்துக் கூறுவது, கசப்பான உண்மையானாலும் அதனைத் தைரியமாகக் கூறுவது, மனிதர்களின் மனதிலே எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையைப் பலப்படுத்துவது அதைக் கட்டுவதிலே அவர்களுக்குள்ள சக்தியை பலப்படுத்துவது, உலக அமைதிக்காகப் போராடுவது, எங்கெல்லாம் தன் குரல் ஒலிக்குமோ அங்கெல்லாம் சமாதான வீரர்களை ஆதரிப்பது, முன்னேற்றத்திற்கான உண்மையான, நேர்மையான முயற்சியில் மக்களை ஒன்று திரட்டுவது இது தான். ஒரு புத்தி ஜீவியின் கடமையாகும்' என்றான் உலகப் புகழ் அடைந்த நாவலாசிரியன் மைக்கையீல் ஷொலகோவ். அவனுடைய இலக்கணங்களுக்குப் பொருத்தமான இலக்கியமாக வாழ்ந்து காட்டுபவர் கார்த்திகேசன்.

அரசியலையும் பொதுவாழ்க்கையையும் இன்று பதவிதேடும், பொருள்தேடும் துறைகளாக மாற்றிக் கொண்டிருக்கும் ஒரு சிலரின் மத்தியில் கார்த்திகேசன் என்ற மனிதன் மானிட ஜென்மத்தில் உயர்ச்சிக்காக தன்னையே உருக்கும் ஒரு தர்மவானாகத் திகழ்கிறார். புரட்சிகரமான சமுதாயக்கண்ணோட்டம் கொண்ட கார்த்திகேசன் ஒவ்வொரு இனங்களுக் கிடையே வளர்ந்து வரலாற்றுச் சிறப்புக் கொண்ட ஆன்மீக கலாச்சார ஆக்கங்கள் சிதைக்கப்படாமல் ஊக்குவிக்கப்பட்டு தொடரான வளர்ச்சிக்கு வழிகோல வாய்ப்பளிக்க வேண்டும் என்னும் கருத்துடையவர்.

பல ஆண்டுகளுக்கு முன்னால் காலஞ்சென்ற யாழ் நகரமேயர் ச. துரைராஜாவுடன் யாழ் இந்துக்கல்லூரி வட்டாரத்தில் (பத்தாம் வட்டாரம்) மாநகர சபைத் தேர்தலில் திரு. கார்த்திகேசன் போட்டியிட்டபோது நானும் எனது நண்பர்களும் கொடி பிடித்துக் கோஷமிட்டு வாக்குச் சேகரித்திருக்கிறோம். அந்த நேரத்தில் சில இளவட்டங்களின் அநாகரிகமான துடுக்குச் செயல்களைக் கண்டித்து தமிழினத்தின் கலாச்சாரப் பண்பை நினைவூட்டி அந்தத் தமிழ்ச் செல்வங்களைக் கார்த்திகேசன் வழி நடத்தியமை பசுமையான நினைவுகளாய் நிற்கின்றது. கம்யூனிஸ்ட் என்றால் அக்கிரமப் போர் விரும்பி சமாதானப் பகைவன். இரத்தவெறியன். கொலையாளி, ஆர்ப்பாட்டங்களில் ஆனந்தமடைபவன் என்றெல்லாம் ஒரு காலத்தில் பொது மக்களிடமிருந்த தப்பான எண்ணங்களை போக்கடித்தவர்களில் மு. கா. முதன்மை யான இடத்தைப் பிடித்துக்கொண்டவர்.

கம்யூனிஸ்ட் என்பவன் அநியாயங்களை எதிர்ப்பவர். அறியாமையைப் போக்குபவன். நியாயங்களுக்காகப் போராடுபவன். பொது மக்களின் பூரண இன்பத்திற்கும் சுதந்திரத்துக்குமாக உழைப்பவன் என்று தெளிய வைத்தவர் அவர். அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றுபவர்கள் அவருடைய குணநலன்களையும் புரிந்து கொண்டு வாழ்வில் பேரும் புகழும் பெறவேண்டும்.

நண்பா பெரியாரைத்துணைக்கோடல், பெரியாரைக் பிழையாமை எனத்திருக் குறளில் இரண்டு அதிகாரங்களில் பெரியோரை மதித்தல் என்னும் பண்பு மனிதனுக்கு அவசியம் என்ற பொருளில், கார்த்திகேசன் என்றொரு மானிடன் வாழ்ந்ததையும் கட்டு செய்தல் கடமையல்லவா?

வேறு என்ன
பிற பின்பு



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

# இன்னொரு... 06

இதுவரை வந்தவை.
நாயகம் திலகம் தம்பதிகளுக்கு இரட்டையர்கள் ஒட்டிப் பிறக்கின்றார்கள். இன்பன், இனியன் எனப் பெயரிடப்பட்ட அவர்களுக்கு இரண்டு வயது முடிந்ததும் சத்திர சிகிச்சை செய்து இருவரையும் பிரித்து விடலாம் என வைத்திய கலாநிதி மகாதேவன் கூறி, அதற்கான ஆயத்தங்களும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. இந்நிலையில் பிள்ளைகளின் மாமன் இராமலிங்கம், அக்காலத்தில் பெயர் பெற்ற நீலகண்ட கணியரிடம் தனது மருமக்களின் குறிப்புகளை எழுதித் தரும்படி கேட்கின்றான். பிள்ளைகளில் ஒருவனுக்கு எட்டு வயதுக்குள் உயிராபத்து ஏற்படலாம், எனக் கூறிய நீலகண்டர், சத்திர சிகிச்சையை எட்டு வயதுக்குப் பின்னர் செய்யுமாறு ஆலோசனை கூறுகின்றார். இராமலிங்கமும் விபரத்தை தமக்கையாரிடமும் அத்தானிடமும் கூறுகின்றான். ஆனாலும் சோதிடங்களில் நம்பிக்கையில்லாத நாயகம் மறுத்து விட்டு, சத்திர சிகிச்சை ஆயத்தங்கள் பற்றி அறிவதற்கான நாளில் வைத்தியர் மகாதேவனிடம் மனைவியுடன் செல்கின்றார். அவர்களுக்கு சத்திர சிகிச்சை பற்றிய விபரங்களை மகாதேவன் கூறிக் கொண்டு இருக்கின்றார். தொடர்ந்து வாசியுங்கள்.

"முதலில் நரம்புகள் இல்லாத சவ்வுப் பகுதியை மெதுவாக வெட்டுவோம். வெட்டுவதென்றால் பெரிதாக யோசிக்க வேண்டாம். இதற்கென்று இருக்கும் விசேடமான கூரான கத்தியினால் மெதுவாக சவ்வின் மேல்பகுதியைச் சுற்றிவரக் கீறிவருவதுதான். சுற்றிவர வெட்டியதும் பின்னுப்பட்ட நரம்புகள் தெளிவாகத் தெரியும். இனி, இன்பனின் நரம்பில் ஒரு இடத்தில் வெட்டி அதனை இரண்டு துண்டுகளாக்கி உடனேயே சிக்குண்டு இருக்கும் இன்பனின் நரம்பை மெதுமெதுவாக, மிகவும் கவனமாத் தனியே எடுக்கப்போகிறோம். பிறகு இன்பனின் நரம்பை இணைத்து விடுவோம். நரம்புகள் வேறானதுமே, ஏற்கனவே இணைத்துக் கொண்டிருந்த சவ்வு வெட்டப்பட்டு இருந்ததாலை இரண்டு பேரும் தனித்தனியாகி விடுவார்கள். அடுத்து என்ன செய்வோமெனில் இருவரதும் நரம்புகளை அவரவர் உடம்புக்குள்ளை சரியான இடங்களிலை வைச்சு வெட்டப்பட்ட சவ்வின் வழியே உள்ள இடத்தை இரண்டு பேருக்கும் தனியத் தனிய இணைச்சு விடுவோம்."
மிகவும் ஆறுதலாகவும் இவர்களுக்கு விளங்கும் வண்ணமும் சாதாரண தமிழில் கூறிக் கொண்டிருந்தார் மகாதேவன்.
"இந்த நரம்புகளின் நிலை கூட எங்களுக்கு வசதியாகத்தான் இருக்குது. எந்தவித பிரத்தியோக வேலையும் செய்யாது அப்படியே உடம்புக்குள்ளை வைச்சுத் தைச்சு விட்டாலே போதுமானதாய் இருக்குது. அதுக்குப் பிறகு இரண்டு கிழமைக்கு இருவரையும் இஞ்சையே ஆஸ்பத்திரியிலை

**தொடர்கதை -** பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே

## ◇ சி.வி. நாதன் ◇

வைச்சிருந்து எல்லாம் சியாய் இருக்குதோ எண்டு பாத்திட்டு, பிறகு…….. வீட்டுக்கு நீங்கள் பிள்ளையளைக் கொண்டு போகலாம்" என்றார் மகாதேவன்.
திலகத்திற்கு தலைக்குள் என்னவோ செய்வது போல் இருந்தது. கணவனின் தோளைப் பிடித்துக் கொண்டாள். கண்களில் இருந்து கண்ணீர் வரத் தொடங்கியது.
"இதிலை எங்களுக்குச் சிக்கல் வரக் கூடிய இடம் எதுவெண்டால், இன்பனின் நரம்பு வெட்டப்பட்டு நாலு மணித்தியாலத்துக்குள்ளை மீண்டும் இணைக்கப்படவேண்டும். இல்லாட்டில் இன்பனுக்கு ஆபத்து வந்துவிடும்." என்று மகாதேவன் தொடர, திலகத்திற்கு திக்கென்றது. நாயகமும் திகைப்புடன் திலகத்தைத் திரும்பிப் பார்க்க திலகம் அழத் தொடங்கிவிட்டாள்.

"நீங்கள் பயப்படத்தேவையில்லை. இன்பனின் வெட்டப்பட்ட நரம்பினை இணைக்கிறதுக்கு எங்களுக்கு இரண்டு மணித்தியாலங்களே நல்லாய்க் காணும். ஏதும் சிக்கல்கள் வந்தாலுங் கூட இன்னமும் இரண்டு மணித்தியாலங்கள் மேலதிகமாக இருக்கிறதாலை, பிரச்சனை எண்டு வாறதுக்கு ஒரு சந்தர்ப்பமும் இல்லை. அதைவிட ஆறு டொக்டர்மார் இதுக்கெண்டே தனிய இருக்கினம்" என்றார் மகாதேவன், விசும்பிக் கொண்டிருக்கும் திலகத்தைப் பார்த்துக் கொண்டே.
"பிரச்சனை என்று எதுவும் இல்லை. நிலைமைகள் உங்களுக்கும் தெரிஞ்சிருக்க வேணும் எண்டதுக்காகத்தான் இதையெல்லாம் உங்களுக்குச் சொல்லுறேன். திரும்பவும் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்! மொத்தம் ஆறு டொக்டர்மார் இதில் அக்கறையுடன் செயற்படப் போகின்றார்கள். அதைவிட நானும் கூடவே இருப்பேன். இதையும் விட அமெரிக்காவில் இருந்து டொக்டர் மிச்சல் றொபேட் எங்கள் எல்லோருக்கும் தலைமையாக இருப்பார். சிக்கலான ஒப்பரேசன்களைக் கையாளுறதிலை நல்ல கெட்டிக்காரர். நீங்கள் பயப்படத் தேவையில்லை" என்று மீண்டும் ஆறுதற்படுத்தினார், மகாதேவன்.

திலகம் கண்களைச் சேலைத் தலைப்பினால் துடைத்துக் கொள்ள, மகாதேவன் தொடர்ந்தார். "மொத்தமாக 16 மணித்தியாலங்களை அந்த ஒப்பரேசனுக்காக ஒதுக்கியிருக்கிறோம். உண்மையில் இந்த ஒப்பரேசனுக்கான நேரம் ஆறு மணித்தியாலங்கள்தான். மற்றயவை எல்லாம் ஒப்பரேசனை ஆயத்தப்படுத்துவதற்கும் பிறகு ஒப்பரேசனை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் எடுக்கும் நேரம். எல்லாமுமே நன்றாக அமையும். நீங்கள் ஒண்டுக்கும்

தொடர்ச்சி 38ஆம் பக்கம்


வளர்ந்து வரும்போது நன்மையளிக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் பெற பிள்ளைகள் தகுதியுடையவர்கள்.




ஒன்டாரியோ பிள்ளைகளுக்கான நலனுதவி
**The Ontario Child Benefit**

சிறியதொரு உதவி பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

நீங்கள் குறைந்த வருமானமுடைய ஒரு குடும்பத்தில் உள்ளவரானால் ஒன்டாரியோ பிள்ளைகளுக்கான நலனுதவியையும் மாகாணத்தின் வேறு நலனுதவிகளையும் பெற்றுக்கொள்ள தகுதிபெறலாம்.

நீங்கள் பெறத் தகுதியுள்ள எல்லா நலனுதவிகளையும் பெற்றுக்கொள்வதை நிச்சயப்படுத்திக்கொள்ள உதவும் முகமாக உங்கள் டக்ஸ் ரிட்டர்னை பதிவுசெய்யுங்கள்.

**மேலும் அறிந்துகொள்ள ontario.ca/childbenefit குச் செல்லவும் அல்லது 1-866-821-7770 ஐ கட்டணமின்றி அழைக்கவும்.**

ஒன்டாரியோ அரசால் கட்டணம் செலுத்தப்பட்டது Ontario

# மதுரை பெருங்கோயில்

அ. சிவானந்தன் - கனடா

சைவசமயத்தைப் பேணிக்காப்பதிலும் ஆலயதரிசனம் செய்வதிலும் சைவசமய மக்கள் மிகுந்த நம்பிக்கைக்குரியவர்கள். மக்கள் வாழ்க்கையோடு ஆலய வழிபாட்டு முறை பின்னிப்பிணைந்தனவாக உள்ளது. அவன் அருளால் கிடைக்கப்பெற்ற மனிதப்பிறவியில் தெய்வீக உணர்வினைப் பெறுவதற்கும், புண்ணியம் செய்வதற்கும் நன்னெறியில் வாழ்வதற்கும், ஒழுக்கநெறியில் ஒழுகவும், அன்பு நெறியில் செயல்படவும் ஆலய வழிபாடு மெய்துணையாக உள்ளது. இம்மண்ணில் காணப்படும் பழமையும் புதுமையும் அற்புதமும் கொண்டு திகழும் ஆலயங்களில் ஒன்றாக தமிழகத்தில் உள்ள மதுரைப் பெருங்கோயிலும் விளங்குகிறது. பால்நினைந்தூட்டும் தாயினும் பார்க்க சிறந்த இறைவனின் அருளைப்பெறுவதற்கும் அன்னை மீனாட்சி அம்மனின் அருட்பார்வையினால் தோன்றும் அருளைப் பெறுவதற்கும் இத்தலம் சிறப்பிற்குரியது. இத்திருக்கோயிலின் அருளைப் பெற்றவர்கள் தமிழ்ச்சங்கப் புலவர்கள். இப்புலவர்களில் ஒருவராகிய நக்கீரர் அன்னை மீனாட்சி தேவி இடத்தில் ஆராத பக்திக்குரியவர். மதுரையை விட்டு பிரியாது இருக்க வேண்டும் என்று உள்ளத்தில் மனவுறுதி பூண்டு வாழ்ந்தவர். ஒருமுறை மதுரையை விட்டுப் பிரிய வேண்டிய சூழ்நிலை இவருக்கு ஏற்படலாயிற்று. இந்த நிலையில் தான் திருக்கோயிலில் கொண்டுள்ள ஆராதபக்தியை பின்வரும் பாடலினால் உணர்ந்துகின்றார்.

‘என்றினி மதுரை காண்போம் எப்பகல்  
சவுந்தரேசன்  
தன் திருவடிகள் காண்போம் தாயையும்  
எஞ்ஞான்று காண்போம்  
வெற்றிவேல் தருமவேந்தர் வேந்தனை எந்நாள்  
காண்போம்  
என்னுயிர்த்துணையாம் சங்கத்து உறவை  
எப்பொழுது காண்போம்.

இதனால் நக்கீரர் உள்ளத்தில் அன்னை மீனாட்சி ஞாயிற்றின் ஒளியைப் போல பிரகாசமாக விளங்கியதைக் காண முடிகின்றது. இப்புலவர் அன்னையை தாயாக போற்றிய அற்புதம் சிறப்பிற்குரியது. இதனால் அன்னையின் அருட்பார்வையை நன்கு தெரியலாம்.

மாமதுரை 64 சக்திபீடங்களில் ஒன்றாகிய ஸ்யாமளா பீடமாகத் திகழ்கின்றது. ஸ்கந்த புராணத்தில் இதன் சிறப்பு இடம்பெற்றுள்ளது. பசுவின் மடியில் பால் சுரப்பது போல அன்னையில் அருள் அன்பர்களுக்கு கிடைக்கப்பெறுகின்றது என்பது உண்மை. காலை முதல் மறுநாள் காலை வரையும் அன்னை எட்டு விதமான நிலையில் காட்சியளிக்கும் திருமேனி இத்திருக்கோயிலுக்குரிய சிறப்பாகும். இக்கோயிலில் பள்ளியறை தரிசனம் செய்து மறுநாள் திருவனந்தல் தரிசனம் செய்தால் இப்பிறவியின் பயன் அவள் அருளால் நிறைவுபெறும்.

தெய்வீகத் திருக்கோயிலை தரிசனம் செய்வோர் அன்னையை வணங்கிய பின்னரே அப்பனைத் தொழ வேண்டும் என்பது அருள் மிகு சொக்க நாதரால் விதிக்கப்பட்ட விதியாகும். இதற்கு அமைய முதலில் அன்னை மீனாட்சிக்கு அபிசேகம், ஆராதனை நடைபெறும். அதன் பின்னரே அருள்மிகு சொக்கநாதர் பெருமானுக்கு அபிசேக ஆராதனை நடைபெறுவதை இன்றும் காணலாம். இத்திருக்கோயிலை நீராடி தரிசனம் செய்தால் பிறவிப் பெருங்கடலில் இருந்து விடுதலை பெறலாம். மேலும் சிந்தனையில் சினமும் உள்ளத்தில் சிறு நெறிகளும் தோன்றாது. ‘ஈறு இல்லாத என் அன்பே’ என்று இறைவன் இறைவியைப் போற்றினால் உள்ளத்தில் என்றும் காணாத தெய்வீக உணர்வு நிலைபெறும்.

மதுரையை ஆண்ட மலயத்துவச பாண்டியன் தன் உயிர்போல எல்லா உயிர்களையும் நேசித்து நீதி நெறியில் தவறாது ஒழுகினான். இம்மன்னனின் துணைவியார் காஞ்சனமாலை. இவள் சோழன் சூரசேன் மகளாவார். குடும்பவாழ்க்கையில் பல ஆண்டுகளாக குழந்தைச் செல்வம் இல்லாமல் மன்னன் ஏங்கித்தவித்தான். இதன் பயனாக மகப்பேறு யாகத்தை தன் துணைவியாருடன் முறைப்படி செய்யத் தொடங்கினான். இதன் விளைவாக வேள்விக் குண்டத்தில் இருந்து அழகான மூன்று வயதுச் சிறுமி மூன்று தனங்களோடு தோன்றி காஞ்சனமாலையின் மடியில் வந்து அமர்ந்தாள். பாண்டியமன்னன் சிறுமியின் தோற்றத்தைக் கண்டு கவலை கொண்டார். இவ்வேளையில் இறைவனின் நல்வாக்கு விண்வெளியில் தோன்றியது. நீ கவலைப்படாதே. அவளுக்கு ‘தடாதகை’ எனப்பெயர் இடுக. அவளுக்கு ஆண்மகனைப் போன்று எல்லா கலைகளையும் கற்றுக்கொடு. மகுடம் சூட்டு. கணவனாக வரவிருக்கும் ஆண்மகனைக் கண்டவுடன் அவளின் மூன்றாவது தனம் தானாக மறையும். இதனைக் கேட்டு மன்னன் மகிழ்ச்சி அடைந்தான். விண்ணில் தோன்றிய வாக்கின் படி எல்லாவற்றையும் முறையாகச் செய்து தன்மகளுக்கு மகுடம் சூட்டி அகம் மகிழ்ந்தான். பின்னர் பாண்டி மன்னர் இறைவன் திருவடியைச் சேர்ந்தார். தடாதகை அரசி தனது போர் ஆற்றலினால் மண்ணுலகில் வெற்றி பெற்றுத் திகழ்ந்தாள். விண்ணுலகத்தை எதிர்த்து போராடி தனது ஆட்சியை செய்தாள். கைலாய மலையையும் தன் ஆட்சிக்குள் கொண்டு வர விரும்பினாள். கைலாய மலையை கைப்பற்ற தனது வலிமை மிக்க படைகளோடு புறப்பட்டாள். இந்நிலையில் கைலாய மலைப்பெருமானாகிய சிவபெருமான் விடை வாகனத்தில் ஏறி போர் செய்ய புறப்பட்டார். தடாதகை அரசி தனக்கு எதிரே வந்த இறைவனின் அருளால் அம்மையாரின் நடுத்தனம் தானாக மறைவதாயிற்று. இதனால் பெண்மைக்குரிய அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகிய குணங்களோடு திகழ்ந்தாள். இதனால் போர் செய்யும் வலிமையும் குன்றியது. அப்பொழுது அமைச்சர் தடாதகையைப் பார்த்து ‘கொன்றையஞ்சடைக் குமுகனே நின் மணக் குமுகன்’ என்று ஆறுதல் மொழி நல்கினான். அப்பொழுது இறைவன் நீ திக்குகளை நோக்கி போர்க்கோலம் பூண்டபொழுது நாமும் உன்னை இடைவிடாது தொடர்ந்து வந்தோம். வரும் திங்கட்கிழமையன்று உன்னை மணம் செய்ய வருவேன். ‘நீ மதுரைக்குச் செல்’ என்று திருவாக்கு நல்கினார். இறைவனின் வாக்கின்படி தடாதகை மதுரைக்குச் சென்றாள். இறைவன் குறித்த நாளில் மதுரைக்கு வந்து தடாதகை பிராட்டியாரை திருமணம் செய்தார். இறைவனின் திருமணக் கோலத்தை நேரில் கண்ட யாவரும் ஆனந்தமும் அருளும் பெற்றார்கள். இத்திருவிளையாடல் பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளை யாடற் புராணத்தில் இடம்பெற்றுள்ளது. மதுரை சொக்கலிங்கப் பெருமான் மதுரையில் நிகழ்த்திய அறுபத்தி நான்கு திருவிளையாடல்களில் இதுவும் ஒன்றாகும். தன்னை நினைத்து போற்றும் அடியார்களுக்கு அருள் வழங்கும் தலமாக மதுரைப் பெருங்கோயில் அமைந்துள்ளது. மதுரைப் பெருமான் தனது திருவிளையாடலினால் ‘சாலப்பழையர்’, ‘ஆதி புராணனாய் நின்றாய் போற்றி’ என்ற சிறப்பினையும் பெற்றுள்ளார். மாணிக்கவாசக சுவாமிகள் இறைவனை’ குலகாகோல மறையோனே கோனே’ என்று திருவாசகத்தில் போற்றியுள்ளார். குலா என்பதற்கு அழகுடையவனே எனவும் கொள்ளலாமாயினும் ‘கோலமறையோனே’ எனப் பின்னர் வருதலால் இளமை யுடையோனே எனக் கொள்வது சாலப் பொருத்தமாகும். இதனால் இறைவன் இளமை அழகினையுடையவன் என்பது தெளிவாகின்றது. இறைவனை ‘அண்ணா’ என்றும் திருவாசகத்தில் குறிப்பிடப் பட்டுள்ளார். உண்மையில் உலகு உயிர்களுக்கெல்லாம் மூத்தவனே என்று பொருள் வெளிப்படுவதைக் காணலாம். இறைவன் கொன்றை மாலையை சடைமுடியில் அணிந்துள்ளான். இதற்கு சான்றாக ‘கொன்றைசடையான்’ ‘கொங்குலவு கொன்றை சடையான்’, ‘தேனோடு கொன்றை சடையணிந்த சிவபெருமான்’ போன்ற நாயன்மார்களின் வாக்கினை காணலாம்.



அன்னை மீனாட்சி சித்திரை முதல் ஆடி முடிய நான்கு மாதங்களும் சோமசுந்தரக்கடவுள் ஆவணி முதல் பங்குனி முடிய எட்டு மாதங்களும் மதுரையை சிறப்பாக ஆட்சி செய்வதோடு எல்லா உயிர்களுக்கும் நல்லருள் வழங்கும் அதிசயமும் நிகழ்கின்றது. உண்மையில் அப்பன் அன்னையின் அருளை எல்லா நாட்களிலும் பெறலாம். இதனால் மதுரை ‘சிவலோகம்’ என்ற சிறப்பினைப் பெற்றுள்ளது. இவ்விடயம் மதுரை திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மலரில் இடம்பெற்றுள்ளது.

மதுரை வெள்ளியம்பலத்தில் இராச சேகர பாண்டியமன்னனின் விருப்பத்திற்கு அமைய ஆடல் பெருமான் கால்மாறி ஆடி எல்லோருக்கும் முத்தியின்பத்தை நல்கினார். இந்த நிகழ்வு மாசி சிவராத்திரி நாளில் இடம்பெற்றமை நினைவு கொள்ளத் தக்கது. வேண்டுவோருக்கு வேண்டும் அருள் நல்கும் புனிததலமாக மதுரைப் பெருங்கோயில் திகழ்கின்றது. மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம் மிகப் பெரிய ஆலயமாகும். இப்பிறவியில் இத்திருக் கோயிலை தரிசனம் செய்தால் மிக்க பயன் உண்டு.




# சின்ன ஜெருசலம் - மணப்பாடு

இயற்கையும் சூழலியலும் இணைந்த அருமையான ஒரு கடற்கரை கிராமம், மணப்பாடு. இந்த இதழ் நம் சுற்றுலா தலம்.



## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 77

தமிழகத்தில், தூத்துக்குடி மாவட்டத்தில், திருச்செந்தூருக்கு அருகே, குலசேகரன்பட்டிணத்திற்கு தெற்கேயும், பெரிய-தாளைக்கு வடக்கேயும், வங்காள விரிகுடாக் கடலோரத்தில் அமைந்துள்ள கடற்கரைக் கிராமம், மணப்பாடு. மீன் பிடிப்பையும் பனை மரப் பொருட்களையும் வெகுவாக சார்ந்திருக்கும் ஒரு சிறிய ஊர். மணவை என்றும் சுருக்கமாக அழைக்கிறார்கள். மணலும் காற்றும் நிறைந்த இவ்வூரில், மணல் காற்றில் வீசும் போது ஒரு பாட்டிசைப்பது போல் உள்ளதால் இதற்கு மணப்பாடு என்று பெயர் வந்திருக்கலாம் என்கிறார்கள் ஊர்க்காரர்கள். பாரம்பரியம் மிக்க பல தேவாலயங்கள், நினைவுச் சின்னங்கள் மணப்பாடில் இருப்பதாலும், கத்தோலிக்க கிறிஸ்தவ மதச்

**வழிப்போக்கன்**

சம்பிரதாயங்களும் சடங்குகளும் கடைப்பிடிக்கப் பட்டு வருவதாலும், மணப்பாட்டை 'சின்ன ரோமாபுரி' என்றே அழைக்கின்றனர்.

வடக்கில், சிற்றாறு ஒன்று கடலில் சேரும் கழிமுகத்தில் ஊர் தொடங்குகிறது, கிழக்கு எல்கையில், நீண்ட மணல் செறிந்த அகலமான கடற்கரை, இதன் ஒரு பகுதி படகுகள் நிறுத்தப்படுமிடமாகவும் மீன்கள் வந்திறங்கும் துறையாக செயல்படுகிறது. இதையொட்டி, வங்காள விரிகுடாவுக்குள் நீளும் ஒரு சிறிய தீபகற்ப பகுதி, பாறையும் மணலுமான ஒரு சிறு குன்று. இந்தக் குன்றுதான் மணப்பாடு கிராமத்தை நோக்கி, உலகின் பல பகுதிகளிலும் இருந்து சுற்றுலாப் பயணிகள் வரக் காரணம். அதை அப்புறம் பார்ப்போம். அதற்கு முன்பு ஊரை ஒரு சுற்று சுற்றி வந்துவிடுவோம். குன்றின் வடபகுதி மணல் செறிந்த கடற்கரையாகவும், தென்பகுதி பாறைகள் மிகுந்த கடற்கரையாகவும் உள்ளது. தீபகற்ப முனையில் ஒரு கலங்கரை விளக்கம் உள்ளது. பெரிய மணல் தேரிகள் ஊரின் தென்மேற்குப் பகுதியெங்கும் காணப்படுகின்றன. இத் தேரிகளில் பனைமரங்களும் வேப்ப மரங்களும் சீமை ஓடை மரங்களும் செழித்து வளர்ந்துள்ளன.

இப்போது குன்றுக்கு வருவோம். கடற்கரை பக்கத்திலேயே கடல் மணலால் அமைந்த சிறு மலை போன்ற மேடுதான் இந்தக் குன்று. உச்சத்தில், ஒரு தேவாலயம். பின்னால், கலங்கரை விளக்கம். இடத்தின் அமைப்பைப்போல, இடத்தின் வரலாறும் ஆச்சரியப்படுத்துகிறது. மணப்பாடு தீபகற்ப குன்றின் மீதுள்ள பழமையான திருச்சிலுவை ஆலயம் 400 ஆண்டுகளுக்கு மேலானது என்று நம்பப்படுகிறது. 1540இல் இந்த பக்க கடலில் சென்ற ஒரு போர்ச்சுக்கீசிய கப்பலொன்று புயலில் சிக்கியது. கப்பலின் கேப்டன் தங்களை காப்பாற்றினால், கப்பலின் பாய்மரத்தால் சிலுவை செய்து வைப்பதாக வேண்டி கொள்ள, கப்பல் இந்த ஊர் பக்கம் கரை ஒதுங்கியது. அவரும் சிலுவையை செய்து வைத்தார். இவ்வாலயத்தில் கிறிஸ்து இறந்த சிலுவை மரத்தின் சிறு துண்டு என்று நம்பப்படும் பொருள் வணக்கத்திற்கு வைக்கப்பட்டுள்ளது. இங்கும் ஒரு குகையும் நாழிக்கிணறும் திருச்செந்தூரில் உள்ளது போல் இருக்கிறது. ஆலயத்தின் பக்கத்திலேயே, கொஞ்சம் தள்ளி ஒரு சின்ன பலகை, புனித சேவியர் குகைக்கு வழிகாட்டிகொண்டு நிற்கிறது. அக்குகை மணற்குன்றின் அடிபக்க கடற்கரையில் சின்னதாக இருக்கிறது. 15ஆம் நூற்றாண்டில் புனித சேவியர் இக்குகையில் தங்கி ஓய்வு எடுத்துக்கொண்டதாக ஒரு கல்வெட்டு சொல்கிறது. அந்த குகையில் ஒரு சின்ன நன்நீர் கிணறு. கடலுக்கும் குகை கிணறுக்கும் இரண்டு அடிதூரம் தான் இருக்கும். ஆனால், கிணற்று நீர் நல்ல குடிநீராக இருப்பது

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

Served Over 15 Years In Toronto
Now in Richmond Hill




NTE AUTO INC.
New Trade Engineering
MS7 Quality Used Car Sales
346 Newkirk Road, #16, Richmond Hill Tel: 905-770-2575
416-399-6640
சகல விதமான வாகனங்கள் திருத்தும் நிலையம்
தற்போதைய விசேட கழிவு சேவைகள் சில....

Front Brake Service From . . . . . . . . $109. 95
Rear Brake Service From . . . . . . . . $109.95
Transmission Service From . . . . . . $ 99.95
Lube & Oil Service From . . . . . . . . $ 29.95
Tire Change & Balancing From . . . . . $ 14.95
Engine Tune up from . . . . . . . . . . $159.95
Air Conditioning Service From . . . . . $ 49.95
Computer Scanning from . . . . . . . . $ 39.95

We do BMW Service & Maintenance

எங்களுடன் தொடர்பு கொண்டு Towing செய்து வருபவர்களுக்கு விசேட கழிவு உண்டு.




Many more special, please contact for more information.

# கனகவேல் காக்க - திரை விமர்சனம்

“சாட்சிகள், ஆதாரங்களை மட்டும் வைத்து தீர்ப்பு சொல்வது சரியல்ல, மனசாட்சி சொல்வதைக் கேட்டு நீதி வழங்க வேண்டும். அப்பொழுதுதான் நீதிமன்றங்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். மக்கள் சாமிக்கு அடுத்து நீதிபதியைத்தான் நம்புகிறார்கள். அந்த நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும்” என்பதுதான் படம் சொல்லும் நீதி. இதற்காக ‘ரமணா’, ‘இந்தியன்’, ‘அந்நியன்’ வகைப் படங்களையெல்லாம் சேர்த்து ஒரு ‘காக்டெய்ல்’ செய்திருக்கிறார்கள்.

நீதிமன்றத்தில் நீதிபதிக்கு முன்னால் டவாலி யாக நிற்கும் பாத்திரம் கரணுக்கு. நீதிமன்றத்திற்குள் நடக்கும் அநீதிகளையும் அநியாய தீர்ப்புகளையும் பார்த்து கொதித்தாலும், எதுவும் செய்ய முடியாமல் மௌனமாக பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய பாத்திரம். கண் முன்னால், வழக்கறிஞர்களின் வாதத் திறமையால் பெரும் பணக்காரக் குற்றவாளிகள் சுலபமாகத் தப்பிச் செல்கிறார்கள். கண் சிவந்தாலும் மௌனம் கலையக்கூடாது என்பதால், ஓரக் கண்ணால் நீதிபதி எழுதும் தீர்ப்பை பார்த்துக்கொண்டே நிற்கிறான். ஆனால், பணபலத்தாலும் வக்கீல்களின் வாதத் திறமையாலும் நிரபராதி என விடுதலையான குற்றவாளிகளை, தப்பித்த கொண்டாட்டத்தில் இருக்கும் போது, தன் மனசாட்சி தீர்ப்பின் படி, விரட்டி விரட்டி கொல்கிறார். அடையாளமாக ஒரு உடைந்த நிப் பேனாவை அவர்கள் உடம்பில் வைத்துவிட்டுச் செல்கிறார். இந்த ஆதாரத்தையும் முதல் கொலைமுயற்சியில் விட்டுச்செல்லும் ஏ.கே 74 துப்பாக்கி ஆதாரத்தையும் மட்டும் வைத்துக்கொண்டு கொலைகாரனை காவல்துறை தேடுகிறது. நெருங்கி வருவது போல் இருந்தாலும் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால் ஒரு கட்டத்தில், குற்றவாளிகளே, “ஐயா, என் வக்கீல் சொல்வதெல்லாம் பொய்” என்று உண்மையை ஒப்புக்கொண்டு, “எனக்கு தண்டனை வழங்கி, மனசாட்சி தீர்ப்பில் இருந்து என் உயிரைக் காப்பாத்துங்க” என நீதிபதி முன்னால் கதறுகிறார்கள்.

கரணின் இந்த கொலை வெறிக்கு என்ன காரணம்?

அதற்கு ஒரு பிளாஷ் பேக்.
கரணின் அப்பா, நேர்மை தவறாத ஒரு நீதிபதி. அந்த ஊர்



சட்டமன்ற உறுப்பினராக இருக்கும், வில்லன் கோடா சீனிவாசராவ் (இவர் பிறகு அமைச்சராகிவிடுகிறார்) வழக்கு ஒன்றில், கரணின் நீதிபதி அப்பா வழக்கறிஞராக மாறுகிறார். பணம், மிரட்டல் இரண்டுக்கும் மடியாத நீதிபதி கண் முன்னால், அவரது மனைவியையும் மகளையும் உயிரோடு எரித்துவிடுகிறார். வழக்கறிஞர் தொழிலுக்குப் படிக்கும் கரண், டவாலி அவதாரம் எடுத்து, குற்றவாளிகளைத் தேடித் தேடி பலி வாங்குகிறார்.

இதுமாதிரி படங்கள் நிறைய வந்திருந்தாலும், டவாலி பாத்திரத்தை தேர்ந்தெடுத்ததில் வித்தியாசம் காட்ட முயற்சித்திருக்கிறார்கள். ஆனால், அதுவே போதும், ‘படம் சூப்பர் டூப்பர் ஹிட்டாகிவிடும்’ என நினைத்துவிட்டார்கள். ஒட்டு மீசையை ஒட்டிக்கொண்டால் ஆளை அடையாளம் கண்டுபிடிக்க முடியாது போன்ற, சலித்துப்போன விஷயங்கள் நிறைய. காதல், பாட்டு, கொலை, நீதிமன்றம் எல்லாமே மீண்டும் மீண்டும் பார்த்த காட்சிகள். ஏ.கே 74 துப்பாக்கி, ரஷ்யன் மேக்கிங், இந்திய இராணுவத்தில் கூட இல்லாதது. எப்படி, எந்த வழியாக இந்தியாவுக்குள் வந்தது’ என காவல்துறையே திணறுவதாக படம் முழுக்க பரபரப்பு ஏற்றிவிட்டு, கடைசியில் அது ‘லோக்கல் வில்லேஜ் மேக்கிங்’ என்னும்போது... ‘ஏன், ஏன்யா?’ என்றிருக்கிறது. வில்லன் கோடா சீனிவாசராவ் காட்சிகளும் பிளாஷ் பேக்கும் தெலுங்கு டப்பிங் மாதிரி இருக்கிறது.

கரண், வழக்கம்போல் பேசின கூலியைவிட அதிகமாக நடித்திருக்கிறார். கதாநாயகி ஹரிபிரியா... அதிகம் வேலைகள் கிடையாது. ஒவ்வொரு கொலைக்கும் இடையே தோன்றி கரணை காதலிக்கிறார். பாட்டுப்பாடி ஆடிவிட்டுப் போகிறார்.

**- பிலிம் நியூஸ் கிருஷ்ணன் -**

இயக்கம்: கவின்பாலா, இசை: விஜய் ஆண்டனி, ஒளிப்பதிவு: ஷாஜி, வசனம்: பா.ராகவன்... யாரும் அதிகம் மெனக்கெட வில்லை. ஒரு ஆட்டம் போட்டால்தான் திருப்தியாக இருக்கும் என்றிருக்கும் ரசிகர்கள் “மின்சாரமே... மின்சாரமே...’, “சுத்துகிற பூமி” பாடல்களுக்கு வலிந்து ஆடலாம். எப்போதாவது கைத்தட்டல் எழுந்தால் அது வசனத்துக்காகத்தான். படத்திலேயே நிறைய கொலைகள் இருப்பதால், காமெடி பண்ணுகிறேன் என்று ‘ரசிகர்கள் கொலை’ முயற்சியில் இறங்கவில்லை. அந்த அளவுக்கு பாராட்டலாம்.

கனகவேல் காக்க - அந்த முருகக் கடவுள்தான் காப்பாத்தணும்!

# பாமரரும் பயனுறும்...

**27ஆம் பக்கத்தொடர்ச்சி**

என்றார். அவர் Twingle Twingle Little star என்ற ஆங்கிலக் கவிதையை முதல் பேசிய பத்மநாதனின் உரையில் இருந்து எடுத்துக்காட்டி அவை மினுமினுப்பதற்குக் காரணம் என்ன என்பதையும் விளக்கமளித்ததோடு எங்கள் இதிகாசங்கள், வேதங்கள் எல்லாம் இந்த நட்சத்திரங்கள் பற்றி முன்கூட்டியே கணிப்பீடு செய்து



தந்துள்ளன என்றார். அவர் கனியின் இந்தநூல் அனைவருக்கும் பயன்தரத்தக்கது. இவற்றை நாம் பிறந்தநாள், திருமணப் பரிசாக வாங்கிக் காடுக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து கனி விமலநாதன் ஏற்புரை நிழ்த்தினார். நான் மூன்றாவது முறையாக நேரம்தரப்படாத ஒரு பேச்சாளனாக நிற்கின்றேன். காலம் கடந்த காரணத்தால் பேச்சைச் சுரக்கிக்கொள்கின்றேன் என்ற அவர் தனது வாழ்விலும் இன்றும் மிக நட்போடு பழகிவரும் கவிஞர் க. நவத்தை அழைத்து கௌரவம் அளித்ததோடு அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனக்கு உதவியதோடு தனது உயிரைப் பாதுகாத்த ஒரு ஆத்மநண்பன் என உணர்ச்சி பொங்க நா தழுதழுக்க நன்றியறிதலைக் குறிப்பிட்டார்.



தொடர்ந்து அனைவருக்கும் நூல்கள் வழங்கப்பட்டதோடு சிற்றுண்டியும் வழங்கிக்கௌரவித்தனர் விமலநாதன் குடும்பத்தினர். பேச்சாளர்கள் அனைவருக்கும் திரு. திருமதி மீரா விமலநாதன் தம்பதியினர் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தமை ஒரு வித்தியாசமான நன்றியறிதலாக அமைந்திருந்தது.

# எட்டாவது சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா

யூன் 12ம் நாள் நடைபெறும் எட்டாவது சர்வதேச தமிழ் திரைப் படவிழாவில் திரையிடப்படும் சில திரைப்படங்கள் இவை.




- சர்வதேச தமிழ் திரைப்பட விழாக்கள் பலவற்றில் விருதுகளை குவித்த வன்னி மவுஸ்.
- வன்னி மவுஸ் இயக்குனரின் Can I have a dream?
- பேர்லின் திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட Still Life
- இலங்கையில் இருந்து ‘கத்திகள்’
- சிங்கப்பூரில் இருந்து ‘துரையும் சரோவும்’

இவற்றைத் தவிர வேறும் பல விருதுகள் பெற்ற திரைப்படங்கள் திரையிடப்படும் என அதன் அமைப்பாளர்கள் விளம்பரத்துக்கு தெரியப்படுத்தினர். இறுதிப்பட்டியல் வார இறுதியில் வெளியிடப்படும் என மேலும் தெரிவித்தனர்.

மேலதிக தொடர்புகளுக்கு 416-450-6833 / 416-804-3443.

## “நான் நிழலானால்” (சிறுகதைத் தொகுப்பு) விமர்சன நிகழ்வு

இடம் : East York Civic Centre, Council Chambers , (850 Coxwell Avenue )
காலம் : Sunday, June 06, 2010 நேரம் : 3:00 – 5:00 pm
இலக்கிய ஆர்வலரான உங்களை நாம் அன்புடன் அழைகின்றோம்.

# வன்னியை நினைவுபடுத்தும் *Ararat*

வானரன்

Ottoman Empire 1299 இல் இருந்து கார்த்திகை 1,1922 வரை நீண்டிருந்த சாம்ராஜ்யம். இதனை துருக்கி சாம்ராஜ்யம் எனவும் அழைப்பார்கள். இந்த சாம்ராஜ்யத்தின் முக்கிய மதம் சுனிமுஸ்லிம். 1500 களில் பாக்தாத், கெய்ரோ, ஜெருசலேம் வரை பரந்திருந்தது இந்த சாம்ராஜ்யம். இந்த சாம்ராஜ்யத்தில் பல்வேறு இனக் குழுக்களும் வாழ்ந்தனர். ஆர்மேனியர் இந்த இனக் குழுக்களுள் ஒரு குழு. இன்று உலக வரைபடத்தில் ஆமேனியா என்ற நாடே இல்லை. ஒட்டமன் சாம்ராஜ்யத்தின் விரிவில் உள்ளடக்கப்பட்ட பல பிரதேசங்களுள் ஆமேனியாவும் ஒன்று. 15ம் நூற்றாண்டில் ஆமேனியா இந்த சாம்ராஜ்யத்தில் உள்ளடக்கப்பட்டது அல்லது ஆக்கிரமிக்கப்பட்டது எனலாம். ஆமேனியர் பெரும்பாலானோர் கிறிஸ்தவர்கள். இரண்டாந்தர பிரசைகளாக நடத்தப்பட்டார்கள். 1894-1896 க்குமிடைப்பட்ட பகுதியில் சுமார் மூன்று லட்சம் ஆமேனியர்கள் கொல்லப்பட்டனர். 1909ல் மீண்டும் சுமார் 15,000 பேர் கொல்லப்பட்டனர். Young Turk Partyஇன் மத்திய குழுவால் 1916ல் திட்டமிடப்பட்டு ஆமேனியர் கொல்லப்பட்டனர். சித்திரை 24, 1916ல் ஆமேனிய புத்திஜீவிகள் சுத்திவளைக்கப்பட்டு கொல்லப்பட்டனர். மிகுதியாக இருந்த ஆமேனியர் வன்னியில் உள்ள முகாம்கள் போன்ற முகாம்களில் அடைக்கப்பட்டனர். அதைவிட சுமார் இரண்டு லட்சம் ஆமேனியர் சிரியாவிற்கும், கிறீஸ்க்கும் அனுப்பப்பட்டனர். இது நடைபெற்ற காலம் முதலாவது மகாயுத்தம் நடைபெற்ற காலமாகும். ஆயிரக் கணக்கானோர் வீதிகளில் வெட்டி எறியப்பட்டனர். பலர் பசியால் இறந்தனர். இந்த படுகொலைகள் 1923 வரை நீடித்தது. இந்தப் பகுதியில் வேலை பார்த்த அமெரிக்க அதிகாரிகள் இந்த படுகொலைகளை வெளி உலகிற்கு உணர்த்தினர். பல ஆங்கில பத்திரிகைகள் முக்கிய செய்தியாக வெளியிட்டனர். இந்த படுகொலைகளை கண்டித்த துருக்கியர் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த படுகொலைகளின் பிரதானமான நகரமாக வான் என்ற நகரம் திகழ்ந்தது. அமெரிக்க தலைமை வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய Dr.Clarence D.Ussher தலைமை இராணுவ அதிகாரியுடன் தொடர்பு கொண்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தும் தோல்வியில் முடிவடைந்து விட்டது. இவர் பின்னால் தனது Ehyhd An American Physician in Turkey என்ற நூலில் இக் கொலைகள் பற்றி விரிவாக எழுதியுள்ளார்.

முதலாம் உலக யுத்தத்தின் போது ஒட்டமன் சாம்ராஜ்யத்தின் ஆமேனியா பகுதியை ருசியா கைப்பிடித்தது. இது சோவியத் யூனியனின் தொடர்ச்சி வரை நீடித்தது. இதன் பின்னர் சுதந்திர ஆமேனிய குடியரசு தோன்றியது. மூன்றாவது சந்ததியைச் சேர்ந்த கனடிய இயக்குனரான Atom Egoyan ஆமேனியர்கள் மீதான துருக்கியரின் இன அழிப்பு படுகொலைகளை திரைப்படமாக்கியுள்ளார். Ararat என்ற இப் படம் கான்ஸின் முக்கிய படங்களுள் ஒன்றாக 2002ல் திரையிடப்பட்டது. சர்வதேசரீதியாக பெரும் அதிர்வை இப்படம் ஏற்படுத்தியது. ஊடக வலிமைக்கு இப்படம் ஒரு சான்றாகும். இன்றுவரை துருக்கி இக் கொலைகளை மறுத்து வருகின்றது. இவ்வகையில் இப்படம் துருக்கி மீதான விமர்சனங்களை மீண்டும் சந்திக்கு கொண்டுவந்தது. இயக்குனர் இப் படத்தை எடுத்துள்ள விதம் முக்கியமானது. நேரடியாக படுகொலைகளை எடுக்காமல், படு கொலைகளை பற்றி எடுக்கும் படமொன்றுக்குள் ஓர் படமாகவே இப்படம் எடுக்கப்பட்டுள்ளது. Filmmaker Edward Sorayan ஆமேனியா படுகொலைகளைப் பற்றிய படமொன்றை உண்மைச் சம்பவங்களை மையமாகக் கொண்டு தயாரிக்கின்றார். படுகொலைகள் நடைபெற்ற காலத்தில் வாழ்ந்த ஓவியர் Arshile Gorky என்ற ஓவியரைப் பற்றி



ஆய்வு செய்ய ஒரு சரித்திர ஆய்வாளரை நியமிக்கின்றார். இவர் ரொரண்ரோவில் சரித்திர விரிவுரைகளை இந்த ஓவியர் பற்றி நிகழ்த்துகின்றார். இந்த ஓவியரின் 'ஓவியரும் தாயும்' என்ற ஓவியம் பிரபல்யமானது. ஆமேனியா படு கொலைகளின் போது இறந்த தாயை நினைத்து ஓவியர் வரைந்தது. பின்னாளில் 1948ல் ஓவியர் தற்கொலை செய்கின்றார். சரித்திர ஆய்வாளர் அனியின் குடும்பத்தில் பல குழப்பங்கள். அனியின் மகன் அனியின் பெறாமகளை அல்லது அரைச் சகோதரனை காதலிக்கின்றார். அனியின் அரை மகள் சிலியா, அனியின் இரண்டாவது கணவனும் சிலியாவின் தந்தையும் இறந்தமைக்கு அனியே காரணம் எனக் குற்றஞ்சாட்டுகின்றாள். அனியின் முதல் கணவனும் ரபியின் தந்தை துருக்கிய சர்வதேச அதிகாரி ஒருவரை கொலை செய்ய முயற்சிக்கும் பொழுது இறந்து விடுகின்றார்.

அனியின் மகன் ரபி படு கொலைகளை பற்றிய சில பதிவுகளை எடுப்பதற்கு துருக்கி செல்கின்றார். இவர் ரொரண்ரோ திரும்பும் வழியில் ரொரண்ரோ விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்படுகின்றார். சுங்க அதிகாரி கேள்விகளால் துளைத்தெடுக்கின்றார். வீடியோ பிரதிகளுக்குள் என்ன இருக்கின்றது என்பதை விமான நிலையத்திலேயே ரபியின் படம் பிடிக்கும் கருவியில் போட்டு பார்க்கின்றார். படு கொலைகள் திரையில் விரிகின்றன. சுங்க அதிகாரியின் குடும்பத்தில் புதிய பிரச்சினைகள். அவரது மகன் ஒரு பாலியலாளர். இதனை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளார் இந்த அதிகாரி. இத்திரைப்படம் கான்ஸ்ல் திரையிட முன்னரே துருக்கிய அரசு, இப்படத்திற்கு எதிராக பிரச்சாரங்களை முடுக்கிவிட்டன. இப்படத்தில் இயக்குனரால் முன் வைக்கப்படும் ஹிட்லரின் வசனம் இது "Who remembers the extermination of the Armenians". இயக்குனர் இப்படத்தை ஒரு புதிய தேடலுக்கான ஆரம்பமாக தொடங்கியுள்ளார். சரித்திரங்கள் தொடர்ந்து கேள்விகளை எழுப்பிக் கொண்டே இருக்கும். இதனால் தானோ தெரியாது கான்ஸில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்துக் கூறிய துருக்கிய பத்திரிகையாளர் கூறிய கருத்து இது 'இப்பொழுது இல்லாத துருக்கியர் செய்ததாக செய்யப்படும் பிரச்சாரம். உண்மை நிலை தெரிய எவரும் இல்லை'. இதனால் வன்னியிலும் அனைவரும் கொலை செய்யப்பட்டார்களோ?

படம் பல நிலைகளில் பதிவாகியுள்ளது. அனி தற்கொலை செய்து கொண்ட கவிஞரின் வாழ்க்கை வரலாறை எழுத முயற்சிக்கின்றார். சரோயன் படு கொலைகள் பற்றிய படமொன்றை எடுக்க முயற்சிக்கின்றார். ரபி உண்மை வரலாற்றை பதிவாக்க துருக்கி செல்கின்றார். சிலியா தனது தந்தையின் மரணத்தின் உண்மையை கண்டறிய முயற்சிக்கின்றார். சுங்க அதிகாரி மறந்த சரித்திரத்தின் தொடக்கமெதற்கு என ஆக்கிரமிக்கின்றார். இவை அனைத்தும் ஒரு தளத்தை நோக்கி நகருகின்றன. ஆமேனிய படு கொலைகளை மீள மக்கள் முன் விசாரணைக்குட்படுத்தல், துருக்கிய அரசு மீதான விமர்சனங்களை மீள தொடங்கல். இயக்குனர் தனது நோக்கம் பற்றி பின்வருமாறு கூறுகின்றார்.

"That is the determining issue of why I made the film. It wasn't to ascertain the fact of the genocide.....I think that we have to able to find a way to stop talking about this as a film of the American genocide. It is a film about living with the offers of the denial of that event into the present".

இப் படம் இவரது வேதனையை பூர்த்தி செய்துள்ளது. நேற்று இன்று நாளை என வெவ்வேறு காலப் பகுதியில் ஏற்பட்ட மாற்றங்களையும் இப்படம் பதிவு செய்துள்ளது. ஆர்மேனிய படுகொலைகள் எடுக்கப்பட்ட விதம் கண்கலங்க வைக்கின்றது. வண்டிலின் மேற்பகுதியில் ஒரு பெண்ணை துருக்கிய இராணுவம் பாலியல் வல்லுறவுக்குட்படுத்துகின்றது. வண்டியின் கீழ் பகுதியில் தாயின் கைகளை பிடித்த வண்ணம் ஒரு சிறுமி. ஒரு மாதுளம் பழத்தை உடைத்து ஒவ்வொரு முத்தை ஒவ்வொரு நாளும் உண்டு பசியாறும் தாய் என படம் திட்டமிட்ட படுகொலைகளை அப்பட்டமாக பதிவு செய்துள்ளது.

அண்மையில் வெளிவந்த குறும் படமான 'வன்னி மவுஸ்' என்ற படம் இப்படம் ஏற்படுத்திய பாதிப்பை ஏற்படுத்தியது. நான்கு நிமிடங்களுள் எடுக்கப்பட்ட ஒரு படமிது. நாம் முயற்சித்தால் நாளை இலங்கை அரசை கேள்விக்குட்படுத்தலாம். சர்வதேச அரங்கில் திரைப்படங்கள் மூலம் விமர்சிக்கலாம் முயற்சிப்போமா?

இப்படத்தை அனைத்து நூலகங்களிலும் இலவசமாக பெறலாம்.

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
For All your Real Estate & Investments Needs!

HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 28, Mississauga -905.712.2666

# “கதைதான் கதாநாயகன்”

## சந்திப்பு: அஜய் ரத்னம்

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி என கிட்டத்தட்ட 365 படங்களுக்கும் மேல் நடித்திருப்பவர் அஜய் ரத்னம். பிரதான வில்லனாகவும், சில குறிப்பிட்ட குணச்சித்திர வேடங்களிலும் தமிழ் ரசிகர்கள் மனதிலிருந்து என்றும் விலகாத நடிகர். குறிப்பாக, கமலின் 'தேவர் மகன்' இன்ஸ்பெக்டர் பாத்திரம். பிறகு, 'சக்தி', 'சித்தி', 'அண்ணாமலை', 'அரசி' எனத் தொலைக்காட்சித் தொடர்களிலும் மிக பிஸியாகிவிட்டார். நடிகர் என்கிற முகம் தாண்டி இவருக்குள் ஒரு ஆசிரியரும் இருக்கிறார். 'வெற்றியின் ரகசியம் - மோடிவேஷன் மெரி மெத்தட்ஸ்' என்கிற தலைப்பில் பள்ளிகள், கல்லூரிகள், தனியார் நிறுவனங்களில் பாடம் எடுக்கிறார். 'அட...' என ஆச்சரியமடைந்து, அஜய் ரத்னத்திடம் பேட்டிக்காக பேசினோம். நாளைக்கே வாருங்கள் என்றவர், பார்த்ததுமே நம்பிக்கை அளிக்கும் வகையில் பேச



**நேர்காணல் - பாலு சத்யா**

ஆரம்பித்துவிட்டார். 'மகிழ்ச்சியாக இருங்கள்! மற்றவர்களையும் மகிழ்ச்சியாக வைத்திருங்கள். வாழ்க்கையின் குறிக்கோள் என்பது சேவை!' என்று உற்சாகத்துடன் பேச்சையே தொடங்கினார். சினிமா மட்டுமலலாமல் குட்டிக் கதைகள், பொது விஷயங்கள் என சுவாரஸ்யமாக நகர்ந்தது பேட்டி.

**நீங்கள் சினிமாவில் நடிக்க வந்த பின்னணியைச் சொல்லுங்கள்?**

“நான் பிறந்தது சென்னையில. அப்பா பேரு வெங்கட் ரத்னம். தாத்தா பேரு ராமசாமி நாயுடு. பி.டி.வி.ராமசாமி நாயுடுன்னு சொன்னா, 1950-கள்ல சென்னையில எல்லாருக்கும் தெரியும். 'ஷெரீ.்.ப் ஆ.்.ப் மெட்ராஸா' இருந்தார். 'பின்னி மில்' மேனேஜிங் டைரக்டரா இருந்தார். அப்போல்லாம் சென்னையில பவர் சப்ளை இல்லைன்னா, பின்னி மில்லுல இருந்துதான் சென்னை முழுசுக்கும் மின்சாரம் போகும். அதனால, 'பின்னி மில்' எம்.டி.ஆகவும் புகழ் பெற்றிருந்தார். டெய்லர்ஸ் ரோட்ல இருந்த எங்க தாத்தா வீட்ல நடந்த ஒரு .்.பங்ஷனில், நாலு முதலமைச்சர்களும் மூணு கவர்னர்களும் கலந்துகிட்டிருக்காங்க. அடுத்த தலைமுறையில் ஹோட்டல் பிஸினஸில் எங்கள் குடும்பம் ஈடுபட்டிருந்தது. 'ஹாரிசன்ஸ் ஓட்டல்ஸ்'ஸை என்னோட மாமாக்கள் நடத்திக்கிட்டு இருந்தாங்க. அப்பா, 'கோல்டன் சன் ஹோட்டல் அண்ட் பீச் ரிசார்ட்ஸ்'னு மகாபலிபுரத்துல நடத்திக்கிட்டு இருந்தார்.

நான் ஏழாம் வகுப்பு படிச்சுக்கிட்டு - பன்னண்டு வயசு - இருக்கும் போது, அப்பா - நாற்பத்தோரு வயசுலயே - இறந்துட்டார். இருந்தேன். சாயங்காலம் ஆனா, நானும் அப்பாவும் சேர்ந்து விளையாடுவோம். காத்தாடி விடுவோம். அதனால, அந்த இழப்பை என்னால தாங்க முடியல. நான் அப்பாவை நினைச்சு ரொம்ப ஏங்க ஆரம்பிச்சேன். அப்பா இல்லாத வீடு எனக்கு வெறுமையா இருந்தது. அதனால, நாலு மணிக்கு ஸ்கூல் விட்டவுடனே வீட்டுக்கு வர்ற நான் ஏழு, ஏழரைக்கு வர ஆரம்பிச்சேன். ஸ்கூல்ல சாயங்கால நேரங்கள்ல நடக்கும் கராத்தே கிளாஸலயும் என்.சி.சி. கிளாஸலயும் சேர்ந்தேன். ஆர்.வி.டி. மணியோட தம்பி வஸந்த்தான் எனக்கு கராத்தே மாஸ்டர்.

பிறகு நாங்க, டெய்லர்ஸ் ரோட்ல இருந்து அண்ணா நகருக்கு வந்துட்டோம். அங்கே பக்கத்து வீட்டு .்.பிரெண்ட்ஸா எம்.வி.பன்னீர்செல்வம் அறிமுகம் ஆனார். அவருக்கு நிறைய சினிமா கனவுகள் இருந்தது. அவருக்கு அடுத்து, இயக்குநர் ராபர்ட் ராஜசேகரன் வீடு. இப்படி சினிமா அறிமுகமாச்சி. 1985-ல 'ஊமை விழிகள்' வெற்றிக்குப் பிறகு .்.பிலிம் இன்ஸ்டிடியூட் மாணவர்கள் மேல நல்ல பேரும் புகழும் மரியாதையும் நம்பிக்கையும் மக்கள் மத்தியில வந்துடுச்சு. அந்த உற்சாகத்துல எஸ்.டி.சபா, தரணி, ரமேஷ் கிருஷ்ணன், பன்னீர்செல்வம் உட்பட பதினைஞ்சு .்.பிலிம் இன்ஸ்டிடியூட் ஸ்டூடண்ட்ஸ் ஒண்ணு சேர்ந்தாங்க. இயக்குநர் வேலு பிரபாகரன் சார்கிட்ட இவங்க எல்லாருமே அசிஸ்டெண்ட்டா சேர்ந்து ஒரு க்ரூப்பா படம் பண்ணலாம்னு முயற்சி பண்ணினாங்க. அந்தப் படத்துக்கு ஜெயதேவி மேடம்தான் தயாரிப்பாளர். அதில் நடிக்க ஒரு உயரமான ஆளை தேடிக்கிட்டு இருந்தாங்க. முதல்ல சத்யராஜை கூப்பிட்டிருக்காங்க. அவர், 'இது முழுக்க முழுக்க சைக்கோபாத் மாதிரியான கேரக்டர். நான் பண்ண மாட்டேன்'னு சொல்லிட்டார். '24 மணி நேரம்', '100-வது நாள்' போன்ற அவர் நடிச்ச படங்கள் எல்லாம் அப்போ நல்லா போய்க்கிட்டு இருந்தது. அப்போ, நான் காலேஜ்ல படிச்சுக்கிட்டு இருந்தேன். ஒரு நாள் சம்பத், பன்னீர்செல்வம், சங்கர் போன்ற பழைய நண்பர்கள் தேடி வந்து என்னை அழைத்து சென்றார்கள். வேலு பிரபாகரனைப் பார்த்தோம். என்னைப் பார்த்ததும், “நீதாண்டா இதுல நடிக்கிறே!”ன்னு சொல்லிட்டார். அந்தப் படம், 'நாளைய மனிதன்.'

1986-ல ஷூட்டிங் ஆரம்பிச்சு, 1989 ஜனவரி பதினாலாம் தேதி படம் ரிலீஸ் ஆச்சு. முதல்ல ஜெயதேவி மேடம் தயாரிப்பாளரா இருந்தாலும், ஏதோ .்.பைனான்ஸ் பிராப்ளம் வந்து, அதுக்கப்புறம் தக்காளி சீனிவாசன் அதை எடுத்து படம் வெளிவந்தது. இதுக்கு இடைப்பட்ட ரெண்டே முக்கால் வருஷத்துல, 1987-ல எனக்கு கல்யாணம் ஆகி, 1988-ல என் பெரிய பையனும் பொறந்துட்டான். லேட்டானாலும் படம் பெரிய ஹிட்டாயிடுச்சு.”

**உங்க சினிமா வாழ்க்கையில பெரிய திருப்பத்தை, மாற்றத்தைக் கொடுத்த படம்னு எதைச் சொல்லுவீங்க?**

“கமல் சார்கிட்ட ஒர்க் பண்ணின படங்கள்தான். 'நண்பர்கள்' படத்தைப் பார்த்துட்டு கமல் கூப்பிட்டு விட்டார். 1991-ல 'குணா', 1992-ல 'சிங்காரவேலன்', அதுக்கப்புறம் 'தேவர் மகன்', 'குருதிப் புனல்', 'காதலா காதலா!', 'கலைஞன்', 'இந்தியன்', 'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்'னு கமல் சாரோட எட்டு படங்கள்ல நடிச்சுட்டேன். அதே மாதிரி இயக்குநர் ஷங்கர் சாரோட 'ஜென்டில் மேன்', 'காதலன்', 'இந்தியன்' படங்களும் எனக்கு பெரிய திருப்பத்தைத் தந்த படங்கள்தான். இயக்குநர் சுரேஷ் கிருஷ்ணாவின் 'வேடன்', 'வீரா', 'பரட்டை', மணிரத்னம் தயாரித்த 'ஷத்திரியன்', 'தசரதன்', அவரே எடுத்த 'திருடா! திருடா!', வஸந்த்தின் 'நேருக்கு நேர்', 'ரிதம்', தெலுங்குல சிரஞ்சீவியோட 'பாஸ்கர்', நாகார்ஜுனாவோட 'ஆட்டோ டிரைவர்', மலையாளத்துல மம்மூட்டி சாரோட மூணு படம், இந்தில அனில்கபூரோடன்னு சொல்லிக்கொண்டே போகலாம்.

தொலைக்காட்சித் தொடர்களில் 'சக்தி', 'சித்தி.' 'சக்தி' அரவிந்த் பாத்திரம் எனக்கு தமிழ்நாடு பூரா பேர் வாங்கிக் கொடுத்ததுன்னா, 'சித்தி' 'யோகி' பாத்திரம் உலகம் பூரா எனக்கு பேர் வாங்கிக் கொடுத்தது. நான் நடிச்ச தொடர்கள்ல மிகப் பெரிய ஹிட்டுன்னு சொன்னா, 'சக்தி', 'சித்தி', 'அண்ணாமலை', 'மனைவி', 'பெண்', 'அரசி' ஆகியவற்றைச் சொல்லலாம்.”

**பொதுவாக நீங்கள் ராதிகாவின் 'ராடான்' நிறுவனத் தொடர்களில்தான் அதிகம் நடித்திருக்கிறீர்கள், இல்லையா?**

“இல்லையே! 'ஹோம் மீடியா'வுல பண்ணியிருக்கேன். அனிதா மேடம் தயாரிப்பு நிறுவனத்துல பண்ணியிருக்கேன். நான் எல்லா தயாரிப்பு நிறுவனங்களின் தொடர்களிலும் நடிக்கத்தான் விரும்புகிறேன். பண்ணிக்கிட்டும் இருக்கேன். பொதுவா, தொலைக்காட்சித் தொடர் நடிகர்கள் என்ன பண்றாங்கன்னா, ஒரே நேரத்துல ஏழு எட்டு மெகா தொடர்லகூட நடிக்கறாங்க. இதனால எங்க பார்த்தாலும் இந்த ஒரு மூஞ்சிதான். பாக்குறவங்களுக்கு போர் அடிச்சிப் போயிடும். தெகட்டிப் போயிடும். அளவுக்கு மிஞ்சினா அமிர்தமும் நஞ்சுதானே! எனவே, என்னைப் பொறுத்தவரைக்கும் ஒரு நேரத்தில் ஒரு சீரியல் என வரையறுத்துக் கொண்டேன். 'சக்தி' தொடர்ல நடிச்சப்போ அதுல மட்டும்தான் நடித்தேன். வேற எந்த தொடர்லயும் நடிக்கலை. 'சித்தி' வந்தப்பவும் அதுல மட்டும்தான் நடிச்சேன். அப்போ எனக்கு பதினேழு மெகா தொடர்ல நடிக்க வாய்ப்பு வந்துச்சு. நான் போகலை. அஜய் ரத்னத்தை ஒரே ஒரு டி.வி.யில, சன் டி.வி.யில மட்டும்தான் பாக்கலாம். அதனால, எனக்கு எல்லாமே முத்து முத்தான தொலைக்காட்சி தொடரா அமைஞ்சு போயிடுச்சு. நல்ல இயக்குநர்கள், நல்ல தயாரிப்பு நிறுவனங்களும் கிடைச்சாங்க.”

**தொலைக்காட்சித் தொடர் நடிகர்களுக்கும் சினிமா நடிகர்களுக்கும் என்ன வித்தியாசம். ஏன், டிவி நடிகர்களுக்கு சினிமா வாய்ப்பு குறைவா இருக்கு. நடிப்பு குறை காரணமா?**

“நடிப்பு குறைவு கிடையாது. தொலைக்காட்சித் தொடர் என்பது, தினமும் டெலிகாஸ்டனு வாரத்துக்கு அஞ்சு எபிசோட் போயாகணும். அதனால, தினமும் நடிச்சே ஆகவேண்டிய கட்டாயம். அந்த நேரத்துல ஒரு சினிமா வாய்ப்பு வந்தா, எப்பிடியோ அட்ஜெஸ்ட் பண்ணிக்கிட்டு ஒரு அரை நாள் போய் நடிக்கிறேன்னு வச்சுக்குவோம். அடுத்த நாள் போக முடியாம போயிடும். பொதுவா சீரியல்ல நடிக்கிறவங்க, சினிமாவைவிட அதைத்தான் பாதுகாப்பா உணர்றாங்க. எப்பிடியும் ஒரு சீரியலுக்கு ஏழு நாள், எட்டு நாள் நடிப்பு வாய்ப்பு இருக்கும். இதனால, ரெகுலரா ஒரு வருமானம் இருக்கும். என்னைக்கோ ஒருநாள் கிடைக்கப் போகும் சினிமா வாய்ப்புக்காக, வாரம் முழுக்க கிடைக்கும் டிவி வாய்ப்பைத் தவற விட்டுவிட்டு காத்திருக்க முடியாது, பாருங்க. அப்போ சினிமால, “அவங்க வேணாம் சார்! அவங்க சீரியல் ஆர்ட்டிஸ்ட்! அதுக்குத்தான் முக்கியத்துவம் குடுப்பாங்க!”ன்னு ஒரு பேர் வந்துடும். இதுதான் காரணம்.”

**ஆனால், திரைப்படங்கள் என்பது முழு நடிப்பை வெளிப்படுத்துகிற களம். அதில் தொலைக்காட்சித் தொடர் நடிகர்களால் சோபிக்க முடியாது என்றொரு கருத்து இருக்கிறதே?**

“அது அந்தந்த கதாபாத்திரத்தைப் பொறுத்த விஷயம். நல்ல ஒரு கதாபாத்திரம் கிடைச்சா

தொடர்ச்சி 38ம் பக்கம்

# அரங்கேறாத கனவுகள்

"டேய்! ரூபவாஹினியில, தமிழ்ப் படம் போடப் போறாங்களாமடா", வகுப்பில் பாடம் நடந்து கொண்டிருக்க என்னைச் சுரண்டி முக்கிய தகவல் சொன்னான் நண்பன்! என் இதயத் துடிப்பு 2 வினாடிகளுக்கு நின்று மீண்டும் துடிக்கத் தொடங்கியது! "படம் "அரங்கேற்றம்", ஆனா படம் 'Adults Only' யாமடா! உங்கட வீட்டில பார்க்க விடுவினமோ?", ரொம்பக் கவலையாகத் தொடர்ந்து கேட்டான். ஏதோ விட்டால் என் வீட்டுக்கே படம் பார்க்க வந்து விடுபவன் போல்! இப்போது என் இதயத் துடிப்பு 4 வினாடிகளுக்கு நின்று மீண்டும் துடிக்கத் தொடங்கியது! "அடுத்த கிழமை test வருதெண்டு revison எடுக்கிறன், அங்க என்ன கதை", வாத்தியார் முறைத்தார். அவருக்கு எங்கே விளங்கப் போகிறது எங்கள் "தலை" போகிற பிரச்சனை!

எந்த வருடம், எந்த வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன் எல்லாம் மறந்து விட்டது. ஆனால் அன்று மனதில் அரங்கேறிய "அரங்கேற்றம்", அங்கேயே இன்னும் இருக்கிறது!




**- கிறிஸ்ரி-**

யார் இந்த இயக்குனர் (கே.பாலசந்தர்), யார் இந்த இந்த நடிகை (பிரமிளா), இப்படிக் கூட மனிதர்கள் இருக்கிறார்களா? இப்படிக் கூட படத்திற்கு வசனம் எழுத முடியுமா? இப்படிக் கூட வாழ்க்கையில் நடக்குமா?, என்ற கேள்விகள் நான் வளர, வளர வளர்ந்துகொண்டே வந்தன! ஆனால் வளர்ந்த பிறகு அது சினிமா அல்ல, வாழ்க்கையின் "பச்சையான" நிஜம் என்று புரிந்தது!

கதை very simple! புரோகிதர் குடும்பம், 8 குழந்தைகள், மூத்தவள் லலிதா (பிரமிளா). காலையில் எழுந்தவுடன் கண் முன்னே வரும் பிரச்சனை வறுமை, பசி. அவர்கள் வாழ்வு very complex! "என்ன வாழ்க்கை" என்று இதயமே இறந்துவிடும் ஒரு சந்தர்ப்பத்தில், 8 பிள்ளைகளுக்கும் அரிசி விதை அரைத்துக் கொடுத்து உயிர் மாய்த்துவிடத் துணிகிறாள் தாய் (M.N. ராஜம்). மூத்தவள் லலிதா இதைக் கண்டு அதிர்ந்து, அந்த நொடியில் இருந்து குடும்பத்திற்குத் தாயாகி, "நான் வாழவைக்கிறேன்" என்று கிளம்புகிறாள். வந்த இடத்தில் சந்தர்ப்ப சூழ்நிலையால் குடும்பத்திற்காக, லலிதா விலைமகளாக மாறுகிறாள். உடலை விற்கிறாள் என சின்ன வயதில் நினைத்தேன். இல்லை! அவள் தன் இளமையை, லட்சியங்களை, ஆசைகளை, கனவுகளைத்தான் கண்ணீரோடு விற்றாள் எனப் புரியப் பல வருடங்கள் எடுத்தன!

"தும்மினாலும் நோக்கு சிரிப்புதான், துக்கப்பட்டாலும் நோக்கு சிரிப்புதான்", என்று தாயிடம் திட்டு வாங்கும் கதாபாத்திரம் பிரமிளாவுக்கு! கவலைகளை படத்தில் "ஊதித் தள்ளுவது" போல, லலிதா கதாப்பாத்திரத்தை படத்தில் "ஊதித் தள்ளி" இருந்தார்! அவர் நடிப்புக்கு முன்னே மற்ற எல்லோருக்கும் "அரங்கேற்றம்" கிடைப்பது கொஞ்சம் கஷ்டம் தான்! ஒரு பேட்டியில் K. பாலச்சந்தரை, "எப்படி உங்கள் படங்களில் வரும் பெண் கதாப்பாத்திரங்கள் மட்டும் இவ்வளவு உறுதியாக இருக்கிறார்கள்", என்று கேட்டிருந்தார்கள். படத்தின் title இல், முதல் வருவது பிரமிளாவின் பெயர் தான். இப்படி கதாநாயகியின் பெயர், முதல் வரும் தமிழ்ப் படங்களை விரல் விட்டு எண்ணி விடலாம்.

வசனங்கள் குத்தீட்டிகள், படம் நெடுகக் குத்திக்கிழிக்கின்றன மனதை! ஆரம்பத்தில் லலிதாவை மணம் முடிக்க விரும்பிய தங்கவேலு (சிவகுமார்) , அவளை விலை மகளாகச் சந்திக்கும் போது பேசிக் கொள்ளும் வசனங்கள் ஒரு sample!

தங்கவேலு: "விலைமகள் வீட்டுக்கு வழி கேட்டேன், இந்த வீட்ட கைகாட்டிட்டுப் போய்ட்டான் ஒரு பாவி!"

லலிதா: "அவன் பாவியில்ல, தங்கவேலு ....பழக்கப்பட்டவனா இருக்கும்!"

தங்கவேலு: "லலிதா! விலை பேச உனக்கு வேற எதுவுமே கிடைக்கலியா?"

லலிதா: "வேற எதுவும், சுலபமா விலை போறதில்லையே! இவ்வளவு பெரிய Hyderabad இல நீ விலை குடுத்து வாங்க நினைச்சதும் இதைத்தானே தங்கவேலு! எதனால இப்படி ஆனேன்னு கேக்க நினைக்கிறே, கதைக்கு மதிப்பில்லாத காலமிது, சதைக்குதான் மதிப்பு!"

படம் வெளியான ஆண்டு 1973. பெரும் சர்ச்சையைக் கிளப்பிய படம்! (கே. பாலசந்தர் என்றால் சும்மாவா?). 1973 இல் இப்படியான துணிச்சலான கருத்துக்களையும், வசனங்களையும் திரைக்குக் கொண்டு வர pounds (kilo) கணக்கில் தைரியம் வேண்டும்! படத்தை இப்போது முதல் முதலாக பார்ப்பவர்களும் இதை நினைவில் கொள்ள வேண்டும்.

லலிதாவின் இரவுகளிலும், வியர்வைகளிலும் வளர்ந்த குடும்பம், அவள் விலைமகள் என்று தெரிந்ததும் எப்படி மாறுகிறது என்பது மீதிப் படம். "வீட்டை விட்டு வெளியே போ", என்று அவள் தம்பி (மிக இளம் கமல்!) கருணை இன்றி சொல்ல, "முதல் முதல் உனக்கு MBBS Seat கேட்டுப் போன போதுதான்டா, தவறிப் போனேன்....நான் குடுத்த பணத்தைத் தான்டா உன்னால தூக்கி எறிய முடிஞ்சுது, ஆனா உன் பெயருக்குப் பினால இருக்கிற MBBS பட்டத்தை உன்னால தூக்கி எறிய முடியுமா?" என்று பிரமிளா கேட்கும் போது கண்கள் குளமாவது தவிர்க்க முடியாது!

> " படம் வெளியான ஆண்டு 1973. பெரும் சர்ச்சையைக் கிளப்பிய படம்! (கே. பாலசந்தர் என்றால் சும்மாவா?). 1973 இல் இப்படியான துணிச்சலான கருத்துக்களையும், வசனங்களையும் திரைக்குக் கொண்டு வர pounds (kilo) கணக்கில் தைரியம் வேண்டும்! படத்தை இப்போது முதல் முதலாக பார்ப்பவர்களும் இதை நினைவில் கொள்ள வேண்டும். "

வாழ்க்கையைப் பற்றிச் சொல்லும் படங்களை எனக்கு மிகவும் பிடிக்கும். வாழ்க்கைக்கு மிக அருகே வந்து கதை (உண்மை!) சொன்னவர்கள் மிகச் சிலரே! கே.பாலச்சந்தருக்கு அதற்கான தனியிடம் என்றும் உண்டு. படத்தின் Highlight பாடல் "மூத்தவள் நீ கொடுத்தாய் வாழ்விலே முன்னேற்றம்", ஒவ்வொரு முறை கேட்கும் போதும் மனம் கலங்கிப் போகும். சந்தோஷமாகத் தங்கையின் "அரங்கேற்றப் பாடல்" கேட்டுக் கொண்டிருக்கும் போது கூட லலிதாவுக்காக "கதவு தட்டப்படுவது" அவள் வாழ்க்கையின் கொடூரம் சொல்லும், இயக்குனரின் திறமையான யுக்தி!

"தியாகம் செய்ய இரும்பு நெஞ்சம் வேண்டும், அது சிலரிடத்தில் சில பொழுதே தோன்றும்" என்று ஒரு பாடல் வரி சொல்லும். "சிலருக்குதான் மனசு இருக்கு, உலகம் அதில் நிலைச்சு இருக்கு", என்று சொல்கிறது இன்னுமொரு பாடல்! ஒரு முறைதான் வாழ்கிறோம், அதையும் பெற்றோருக்காக, உடன் பிறந்தவருக்காக, நாட்டுக்காக விட்டுக் கொடுப்பது மிகப் பெரிய தியாகம்! பல வேளைகளில் அந்தத் தியா- கம் புரிந்து கொள்ளப்படாமல் போவதும், பல வேளைகளில் அது எள்ளி நகையாடப் படுவதும் மிகப் பெரிய சோகம்! விட்டால் போதும் என்று "தப்பி" ஓடாமல், "நான் இருக்கிறேன்" என்று நிமிர்ந்து நின்று வீழ்ந்தவர்கள் உலகெங்கும் இருக்கிறார்கள்! அவர்கள் கண்ணீரோடு விற்ற கனவுகளுக் கெல்லாம் சமர்ப்பணம் "அரங்கேற்றம்"!

**COMPLETE MAINTENANCE SERVICES**

Cleaning - We come to your home door

(Interior Exterior) - Van, car, bus, carpet upholstery - Area Rug

உங்கள் வீட்டிற்கு நாங்கள் நேரடியாக வருகின்றோம்

**416.829.0970**

**Complete Basement Works**

Hard Wood, Laminate, Title Flooring, Pluming, Electrical works.

குறித்தநேரத்தில் வேலைகள் முடித்துத் தரப்படும்

**416.666.5627/647.269.0912**

**Complete Painting Works**

Interior & Exterior - Houses, Basement, Offices

**416.666.5627 / 416.319.1106**

19 வருட கூட்டு அனுபவமிக்கவர்களின் சேவை

# சின்ன ஜெருசலம்...

33ஆம் பக்கத்தொடர்ச்சி

அதிசயம். மணல்மேடு முழுவதும் நிறைய சிலுவைகள். இந்தக் குன்றின் மேலிருந்து ஊரை பார்ப்பது, அருமையாக காட்சி. அருகில் உள்ளே செல்ல அனுமதி தேவைப்படாத மைய அரசின் உயரமான கலங்கரை விளக்கம். அதன் மேலிருந்து ஊரையும் கடற்கரையும் பார்த்தால்.... ஆஹா, என்ன அழகு? அப்படியே, மனதில் சித்திரமாய் தங்கிவிடும். எவ்வளவு நாட்கள் ஆனாலும் மறையாது.

நடிப்பும் ஓவியமும் சிற்பக் கலைகளும் வளர்ந்திருக்கின்றன. இங்கு, இருபதாம் நூற்றாண்டின் நடுவில் நிறுவப்பட்ட கல்விக் கூடங்கள் இன்றும் முக்கியக் கல்விக்கூடங்களாக உள்ளன. மணப்பாடுகாரர்கள் மட்டுமின்றி, வெளியூர்களிலிருந்தும் பலரும் வந்து கல்வி பெற்றுச் செல்லும் ஊராக இது விளங்கியிருக்கிறது.

இன்று மணப்பாட்டின் பொருளாதாரம் கடலையும்



போர்த்துக்கீசிய மாலுமிக்குப் பிறகு, இருவருடங்கள் கழித்து இங்கு புனித பிரான்சிஸ் சேவியர் வந்திருக்கிறார். இவர் இப்பகுதியில் கிருஸ்துவம் பரவுவதற்கு முக்கிய காரணமாக இருந்தார். ஊருக்குள் புனித ஜேம்ஸ் தேவாலயம் மற்றும் தூய ஆவியானவர் ஆலயம் ஆகிய இரண்டும் மேலைநாட்டுக் கட்டட முறையில் பிரமாண்டமாகவும் அழகாகவும் கட்டப்பட்டுள்ளது. இவ்விரண்டும் ஒன்றை ஒன்று நோக்கும் வண்ணம் ஒரே தெருவின் இரு புறங்களிலும் உள்ளன. மற்றும் பல சிறு தேவாலயங்கள் மணப்பாட்டில் உள்ளன. புனித சவேரியார் இந்த ஊருக்கு வந்து தங்கி இங்குள்ள மக்களை கத்தோலிக்கர்களாக மாற்றியதாக வரலாறு சொல்லப்படுகிறது. தீபகற்பத்தின் முனையில் இருக்கும் குகையில் அவர் தங்கியிருந்ததாக நம்பப்படுகிறது. பரதவ மக்களுக்கு போர்த்துக்கீசிய குடும்ப பெயர்களான பர்னாந்து, மிரந்த, வாஸ், டிசில்வா, டிகோஸ்தா, டிரோஸ் போன்ற பெயர்களையும் அவரே வழங்கியதாகவும் சொல்லப்படுகிறது. ஒரு விதத்தில் ஜெருசேலம் போல் இருப்பதால், இவ்வூரை எட்டாம் போப் லியோ 'சின்ன ஜெருசேலம்' என்றழைக்க, மணப்பாடு இப்படி ஒரு செல்லபெயருடனும் அழைக்கப்படுகிறது. முழுக்க முழுக்க கிறிஸ்தவர்கள் வாழும் ஊர் இது. மருந்துக்கு கூட ஒரு வெற்று மதத்தினர் வீட்டைப் பார்க்க முடியாது. மணப்பாட்டில் உள்ள சர்ச்கள் மேற்கத்திய நாடுகளில் உள்ள செயின்ட் சேவியர் மீனரியுடன் இணைந்ததாகும்.

புனித சவேரியார் வருகைக்குப் பிரகான காலகட்டத்தில், நூறு - இருநூறு வருடங்களுக்கு முன்பு இவ்வூரைச் சேர்ந்த வணிகர்கள் இலங்கைக்கும் பர்மாவுக்கும் சென்று தொழில் புரிந்து, பெரும் செல்வம் ஈட்டியிருக்கின்றனர். இதனால் ஊரும் செழித்து வளர்ந்திருக்கிறது. கவிதையும் இசையும் பனையையும்தான் சார்ந்துள்ளது. கட்டு மரங்கள், வள்ளங்கள் மூலம் பிடிக்கப்படும் மீன்கள் பனியிலிடப்பட்டு பல்வேறு ஊர்களுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன. எஞ்சிய மீன்கள் காயவைத்துக் கருவாடாகவும் ஆக்கப்படுகின்றன. மீன் பிடிப்பு, வலைகளைச் செப்பனிடுவது என்று மணப்பாடு கடற்கரை எப்பொழுதும் இயங்கிக்கொண்டே இருக்கிறது. தமிழகத்தில் கள் தடை செய்யப்பட்டிருப்பதால், பனை மரத்திலிருந்து இறக்கப்படும் பதநீர் பெரும்பாலும் வெல்லமாக (கருப்பட்டி) காய்ச்சப்படுகிறது. பனை ஓலைகள் கூடைகளாகவும், அழகிய கைவினைப் பொருட்களாகவும் மாற்றப்படுகின்றன. மணப்பாடு கடற்கரை மீன் வியாபாரமும், கருப்பட்டி காய்ச்சுவதும், பனை ஓலைகள் கைவினைப் பொருட்கள் தயாரிப்பும்கூட இங்கே கண்டுகளிக்க வேண்டிய விஷயங்கள்தான்.

### எப்படி செல்வது? எங்கே தங்குவது?

திருச்செந்தூரில் இருந்து 18 கி.மீ தொலைவில் மணப்பாடு உள்ளது. தூத்துக்குடியில் இருந்து, திருச்செந்தூர் வழியாக கன்னியாகுமரி வரை செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலைதான் மணப்பாடு செல்வதற்கான பிரதான வழி. கன்னியாகுமரியில் இருந்தும் மணப்பாடு வரலாம். கன்னியாகுமரி, திருச்செந்தூர் இரு ஊர்களுக்குமே சென்னையில் இருந்து பேருந்து போக்குவரத்தும் ரயில் போக்குவரத்தும் உள்ளன. தங்குவதற்கும் கன்னியாகுமரி, திருச்செந்தூர் இரண்டும் சிறந்த தேர்வு.

# இன்னொரு...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

யோசிக்காதையுங்கோ" என்றார்.
சற்று நேரம் அமைதியாக இருந்தவர், "விபரம் இதுதான். உங்களுக்கு ஏதும் கேள்விகள் இருந்தால் கேளுங்கோ" என்றார் மகாதேவன்.
ஓராயிரம் கேள்விகள் கேட்க வேண்டும் போல இருந்தது, நாயகத்திற்கும் திலகத்திற்கும். ஆனால் என்ன கேள்விகள் என்பதுதான் அவர்களுக்குத் தெரியவில்லை. எப்படியாயினும் எல்லாம் நல்லபடியாக அமைந்தால் போதும் என்றது அவர்களது உள்மனம்.
மகாதேவன் இரண்டு பத்திரங்களை எடுத்து அவர்களை நோக்கி நீட்டினார். ஒன்றைக் காட்டி "இதிலை அறுவை சிகிச்சை பற்றிய விபரங்கள் உங்கள் இருவருக்கும் தெரிவிக்கப்பட்டது என்று எழுதியுள்ளது. அதை ஒத்துக் கொள்ளுகின்றோம் என்பதற்கு அடையாளமாக இந்த இரண்டு இடங்களிலும் ஒப்பமிடுங்கோ" என்றவர் அதனை வாசித்துக் காட்டினார்.

மற்றப் பத்திரத்தைக் காட்டி, "இதில் என்ன எழுதியிருக்கிறதென்றால் இந்த அறுவை சிகிச்சை செய்வதற்குப் பெற்றோர்களாகிய நாங்கள் இருவரும் முழு அனுமதியைத் தருகிறோம் என எழுதியுள்ளது. அதற்கான ஒப்புதற் கையொப்பத்தை இந்த இடங்களிலை வையுங்கோ" எனக் கூறிய மகாதேவன், அவர்கள் கையொப்பம் இடுவதற்கு வசதியாக பத்திரங்களைத் திருப்பி, அவர்களை நோக்கி வைத்து தனது பேனாவையும் கொடுத்தார்.
பேனாவை வாங்குவதற்காக நீட்டிய நாயகத்தின் கைகள் நடுங்குவதை மகாதேவன் கவனித்தார்.
- இன்னமும் வரும்

# கதைதான்...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

யாரு வேணும்னாலும் நல்லா பெர்ஃபார்ம் பண்ண முடியும். சுவாமி விவேகானந்தர் சொல்றார்: "எல்லா சக்தியும் உன்னுள் அடக்கம்"னு. எல்லாருக்குமே அந்த பவர் இருக்கு. அவங்க அவங்க பயன்படுத்துறதைப் பொறுத்ததுதான் இது."

சமீப காலமாக தொலைக்காட்சித் தொடர்கள் முன்பு போல் பெரிய அளவில் பேசப்படும் ஒன்றாக இல்லையே. அதன் எதிர்காலம் எப்படி இருக்கும்னு நினைக்கிறீங்க?

"'சித்தி' வந்தபோது அது சூப்பர் டூப்பர் ஹிட். அதற்குப் பிறகு 'மெட்டி ஒலி.' அதுக்கு அப்புறம் எந்த சீரியல் உங்கள் மனசைத் தொட்டது, சொல்லுங்க பார்ப்போம். ஒன்றையும் சொல்ல முடியவில்லை. காரணம், தரம் குறைந்துவிட்டது. கதைகளின் வலிமை குறைந்துவிட்டது. ஆனால், இப்போ சினிமா ஓஹோன்னு இருக்கிறது. காரணம், கதை வலுவாக இருக்கிறது. 'த்ரீ இடியட்ஸ்'னு ஒரு படம். அதோட மொத்த வசூல், 300 கோடி ரூபாய். சினிமா, டிவி எதுவாக இருந்தாலும் கதைதான் கதாநாயகன். இசை, கதாநாயகி. எந்த ஒரு வெற்றிப் படத்தை எடுத்துக்கொண்டாலும், கதையும் இசையும் நன்றாக இருப்பதைக் கவனிக்கலாம். ஷங்கர் சார் படங்கள் எல்லாவற்றிலும் நல்ல கதை இருக்கும், நல்ல பாடல்கள் இருக்கும், காமெடி இருக்கும், கமர்ஷியல் எலிமெண்ட்ஸ் இருக்கும். அதனால அந்தப் படங்கள் நல்லா ஓடும்.

மெகா சீரியலில் நல்ல கதை கொடுத்தால், தொலைக்காட்சி தொடர்களுக்கும் என்றைக்குமே அழிவு இருக்காது."

திரைப்படத்தில் நடிக்க நிறைய வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் தொலைக்காட்சித் தொடர் நடிப்பை விட்டுவிடுவீர்களா?

"எனக்கு ரெண்டும் ஒண்ணுதான். நான் பண்றது ஒரே ஒரு மெகா சீரியல். அதுக்கு மாசத்துக்கு நாலு அல்லது அஞ்சு நாள்தான் சூட்டிங். எனவே, என் கையில சினிமா வாய்ப்புகளுக்குன்னு நிறைய நேரம் இருக்கு. ஆனால், கேரக்டர் ரோல் பண்றதுனால பிரச்னை இல்ல, ஹீரோ ரோல்னா மாட்டிப்போம். மொத்தமா நாள் குடுக்க வேண்டியிருக்கும்."

ஓ... ஹீரோவா நடிக்கணும் உங்களுக்கு ஆசை இருக்கா?

"நிச்சயமா. நல்ல ரோல், நல்ல டைரக்டர் கிடைச்சா பண்ண வேண்டியதுதானே! இந்த ரெண்டும் அமைந்தால், யார் வேண்டுமானாலும் கதாநாயகனாக நடிக்கலாம். உண்மையில் 'ஜென்டில்மேன்' கமல் சாருக்காக பண்ணப்பட்ட படம். ஆனால், அவரோட பாத்திரத்தை மக்கள் ஏத்துக்க மாட்டங்கன்னு நினைச்சி வேணாம்னு சொல்லிட்டார். அதுக்கப்புறம் அர்ஜுன் நடித்தார். மக்கள் ஏத்துக்கிட்டாங்கதானே. பிறகுதான், கமல் சார் 'இந்தியன்' பண்ணினார்."

நடிப்பு தவிரவும் நிறைய வேலைகள் செய்றீங்க போலருக்கு?

"ஆமா. 'பீ ஹேப்பி. அண்ட் மேக் அதர்ஸ் ஹேப்பி. பர்பஸ் ஆஃப் லைஃப் இஸ் சர்வீஸ்' என்பது எனக்கு மிகவும் பிடித்த மேற்கோள். மக்களுக்கு மோட்டிவேஷன் பண்ணிக்கிட்டு இருக்கேன். வகுப்புகள் தொடர்ந்து எடுக்கறேன். இதனால கார்பரேட் சைடு, ஸ்கூல்ஸ், கல்லூரிகள் நிறையா பேருக்கு என்னைப் பத்தித் தெரியும். எவ்வளவுதான் ஒரு ஆசிரியர் கஷ்டப்பட்டு சொல்லிக் குடுத்தாலும், அதைக் கேக்க குழந்தைங்களுக்கு பெருசா ஆர்வம் இல்ல. ஆனா, ஒரு சினிமா நடிகன் வரும்போது, 'ஐ! ஜாலி'ன்னு பாக்கறாங்க. 'ஆஹா! இவர்கிட்ட இவ்வளவு விஷயம் இருக்கா?'ன்னு அவங்ககிட்ட ரொம்ப ஈஸியா விஷயம் போய்ச் சேருது. நான் எல்லாக் குழந்தைகளிடம், 'உன்னால் முடியும் தம்பி!'ன்னு சொல்றேன். உலகத்துல முடியவே முடியாதுன்னு ஒண்ணும் இல்ல. அதுக்கான வேலையைச் செய்! தினம் சூரிய பகவான் அவரோட வேலையைச் செய்யறாரு, பாரு. மனம் ஒரு குரங்கு. இது என்னால முடியுமா, முடியாதான்னு ஆடிக்கிட்டே இருக்கும். எதுலயுமே ஒரு தெளிவு இருந்தா எல்லாமே முடியும்."

சரி, குழந்தைகளுக்கு லட்சியத்தைச் சொல்லிக் கொடுக்கிறீங்க, உங்க வாழ்க்கை லட்சியம் என்ன?

"ஒவ்வொரு மனிதனும் யாரையும் சார்ந்திருக்கக்கூடாது, தனித்து, தனித்துவத்தோடு இயங்கவேண்டும். இதுதான் என் லட்சியம். எதாவது ஒரு நல்ல விஷயத்தைத் தொடர்ந்து செய்யனும். ஒருத்தருக்கு நல்லது பண்ணினா ஒரு தடவையோட நிறுத்திடக்கூடாது, தொடர்ந்து பண்ணிக்கிட்டே இருக்கணும்."


Mmmm Ahh
dollar drink days
$1 any size soft drinks
plus tax
all summer long
Coca-Cola zero
Real Coca-Cola Taste
Zero Calories • Zero Sugar Cola
Markham and Progress
Markham and HighGlen
Port Union and Kingston Road
Markham and Finch
Malvern Town Centre
Markham and Steeles Wal Mart
Not valid with any Extra Value Meal or Happy Meal®.
For a limited time only. At participating McDonald's® restaurants in Canada.
"Coca-Cola Zero" is a registered trademark of Coca-Cola Ltd., used under license.
©2010 McDonald's.
i'm lovin' it

# உண்மை என்னை உயர்த்தும்

உண்மையைச் சொல்வது உண்மையாக வாழ்வது எனக்குப் பிரச்சனையைத் தரும் என இதுவரை நம்பியதற்காக என்னை மன்னித்திட இன்று உடன்படுகிறேன்.

நல்லெண்ணத்துடன் நீ செயற்பட்டாலும் சகலவற்றிலும் உண்மையைக் கடைப்பிடிப்பது நிச்சயம் பிரச்சனையைக் கிளப்பும் என உன்னை நம்ப வைக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் சில சமயங்களில் எழலாம். உண்மையைக் கடைப்பிடித்து நிஜமாக நடந்ததை நீ சொன்னதால் பிரச்சனையைக் கிளப்பி விட்டாய் என உன்மேல் குற்றம் சாட்டப்படலாம். இதனால் உண்மையைச் சொல்வது உனக்கும் மற்றவருக்கும் பாதகம் விளைவிக்கும் என முற்றுமுழுதாய் நீ நம்ப ஆரம்பிக்கலாம். இது சரியானதல்ல.

பொய் சொல்லத் தெரியாத யேசு கிறிஸ்து உண்மையைச் சொன்னதற்காக சிலுவையில் அறையப்பட்டார். மக்கள் உடல், உள, மனோரீதியான அறியாமை இருளிலிருந்து விடுதலையடைந்திட, தான் உரைப்பது உதவும் என நம்பியே யேசுபிரான் செயல்பட்டார். அதைப் பிடிக்காதவர்கள் அவரைக் கொன்றனர். அதைப்போல நீ உண்மையைக் கடைப்பிடிப்பதும் மற்றவருக்குப் பிடிக்காது. அவர்கள் பயப்படுவார்கள். அடிக்கடி நீ உண்மை சொல்லும்போது உன்னையும் அவர்கள் அழித்தொழிக்கப் பார்ப்பார்கள் என நீ பயப்படலாம்.

ஆமாம்! உண்மையை வெளிப்படுத்துவது



பிரச்சனையைக் கிளப்பும். உண்மை இருளை விரட்டி ஒளியை பிரகாசிக்கச் செய்யும். அதைவிடமுக்கியமாக மக்களின் சிந்தனையையும் உண்மை தூண்டிவிடும். சகலதும் சரிவர நடக்கிறது என் வாழ்வில் என நம்புவர்களுக்கு சிந்திப்பது சரிவராது. தீவிரமாகச் சிந்திப்பதால் தம்மால் முன்பு கைவிடப்பட்டு இப்போதும் ஏற்றுக்கொள்ள முடியாத சில உண்மைகளுடன் தாம் மோத வேண்டி வரும் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் இது உன்னைப் பாதிக்க நீ அனுமதிக்கக்கூடாது. இருளைவிட ஒளி சிறந்தது எனத் தேர்ந்தெடுக்கும் திறமை உன்னிடமிருந்தால் அதன் பிரதிபலனாக நடக்கப்போகும் எந்தச் சவாலையும் சமாளித்து வெற்றியடையத் தேவையான சக்தியும் நிச்சயம் உன்னிடமிருக்கும். சத்தியம் தான் உன்னை விடுவித்துச் சுதந்திரமளிக்கும். ஆதலால் எப்பொழுதும் எதிலும் உண்மையையே தேர்ந்தெடுத்துக் கொள். உண்மை உட்புற வெளிப்புறச் சுதந்திரத்தினை உனக்கு அளிப்பதுடன் நல்லவர்கள் நிறைந்த சூழலையும் உனக்குத் தரும்.

சத்தியம் அபாயகரமானது என நினைத்து இதுவரை நீ அதைக் கடைப்பிடிக்காமல் இருந்திருக்கலாம். உனக்குத் தெரிந்த உண்மையை உள்ளபடி அப்படியே வெளிப்படுத்துவதால் உனக்கு நன்மையே நடக்கும் என்பதை இன்றுவரை நம்பாமல் இருந்ததற்காக இப்போ உன்னை நீ மன்னித்துவிடு.

**உண்மையை உள்ளபடியே சொல்ல நான் இப்போ உடன்படுவதால் மகிழ்ச்சி தரும் சுதந்திரத்தை இனி அடையப்போகிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 171

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி








